عقائد اهل الشيعة

بسم الله الرحمن الرحيم

# ஷியாக்களும் அவர்தம் கொள்கையும்?

ஆசிரியர் :

ஃபழீலத்துஷ் ஷெய்கு அஸ்ஸெய்யிது

அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி

தவ்வலல்லாஹு ஹயாதஹு

JAMIYATUL-ISAATHI-AHLUS-SUNNA

No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.

Tel : 466113 Fax : 449055

® Copyright Reserved
பதிப்புரிமை ஆசிரியருக்கே

**இந்நூல்**
**அன்பளிப்புக்குரியது**
**விற்பனைக்கு அல்ல**




நூலின் பெயர் : **ஷியாக்களும் அவர்தம் கொள்கையும்?**

நூல் ஆசிரியர் : **ஃபழீலத்துஷ் ஷெய்க் அஸ்ஸெய்யிது அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி தவ்வலல்லாஹு ஹயாதஹு**

பக்கம் : **112**

தொடர் இலக்கம் : **20**

முதற் பதிப்பு : **அக்டோபர் 2001**
**1422 ரஜப்**

வெளியீடு : **ஜம்மிய்யதுல் இஷாஅதி அஹ்லுஸ் ஸுன்னா**
105, 2-ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11. போன் : 01466113

அச்சிட்டோர் : **ரப்பானியா பிரிண்டிங் பிரஸ்**
16, மதுரை ரோடு, திருச்சி-8.
இந்தியா. போன் : 0431-701685

## Following are the Addresses where the Book is Available (Free of cost)

**INDIA**

KHANKQA - HE _ KHUSHALIYA
Chillagah Shariff Bihar Gad, Mourna Post
Dist Muzafar Nagar, U.P. India

MUASKAR WOMEN'S ARABIC COLLEGE
Cholukkar Street,
KAYALPATNAM - 628 204. S. India

**SRI LANKA**

JAMEEAT-UL-ISHAATHI AHLUS SUNNAH
105, Second Cross Street, Colombo-11
Sri Lanka. Phone : 466113, Fax : 449055

**PAKISTAN**

ASTANA-E-KHUSHHALIA
10/19, Muhammadi park, Sanad Road, Lahore

**U.S.A.**

JAMEEAT-UL-ISHAATHI AHLUS SUNNAH
436, Broad Street, Bristol Canaticut-06010
U.S.A.

**CANADA**

M. YUSUF VHQRA
15, Windsomg Court Markham, Ontario
Canada. L3r-8n7, 1-905-479-9483

**SOUTH AFRICA**

DARUL ULOOM PRETORIA
P.o. Box : 14296, Laudim-0037, Pretoria
Tel : (27-12-3741721

தமிழ்நாடு சுன்னத் வல் ஜமாஅத் உலமா சபை செயலாளரும்
அஹ்லெ சுன்னத் மாத இதழ் ஆசிரியருமான
மௌலவி ஹாபிஸ் **F.M.இப்ராஹிம் ரப்பானி** அவர்கள்
மனமுவந்தளித்த

## மதிப்புரை

புகழனைத்தும் சர்வ பிரபஞ்சத்திலும் தனக்குத்தானே நிகராகி உவமை, வரையறை போன்ற நிலைகளை விட்டெல்லாம் கடந்து இலங்கி நிற்கும் அல்லாஹ் என்னும் மெய்ப்பொருளுக்கு உரிய ஒன்றாகும். அடுத்து அவனைக்கொண்டு எவராலும் புகழவியலா அளவிற்கு புகழப்பட்ட அவனது ஹபீபும் மஹ்பூபுமான அகிலத்தின் ரட்சகர் காத்தமுன் நபிய்யீன், கருணையின் வடிவம், அஹ்மத் முஸ்தபா முஹம்மத் முஜ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மீதும், அவர்களின் சந்ததியரான அஹ்லெ பைத்துக்களின் மீதும், அவர்களின் அருமைமிகு தோழர் பெருமக்களின் மீதும் ஸலாத்தும் ஸலாமும் சதாகாலமும் சுரந்துப் பொழிவதாக.

தம்மை வழிநடத்திய முன்னோர்களை இகழ்ந்துரைத்த எந்த வொரு சமூகமும் இப்பூமியில் செழிப்புற்று வாழ்ந்ததே இல்லை. மாறாக தாம் பெற்றிருந்த செழிப்பையும் கால ஓட்டத்தில் அவர்கள் இழந்து வெறும் நடைபிணங்களாகவே வாழ்ந்து வந்துள்ளனர் என்பது உலக வரலாறு நமக்கு உணர்த்திக் காட்டுகின்ற உண்மைகளாகும்.

அவ்வகையில் நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் நாற்பெரும் கலீபாக்களது ஆட்சிக் காலத்தில் தமது முன்னோரை இழித்துரைக்கும் "காரிஜிய்யா" என்னும் பிரிவினர் தோன்றினர். அதன்பின் அப்பிரிவினர் நபி அவர்களின் சந்ததிகளான அஹ்லெ பைத்துக்களை நேசிக்கிறோம் என்னும் பெயரில் நபித்தோழர்களை நிந்திக்கத் துவங்கினர். அத்துடன் இவர்கள் தம்மை "ஷியாக்கள்" என்பதாக அழைத்துக் கொண்டனர்.

இஸ்லாமிய வரலாறுகளை நாம் திரும்பிப் பார்க்கும்போது ஹிஜ்ரி 60ல் கர்பலாவில் நடைபெற்ற இமாம் ஹுசைன் மற்றும் அஹ்லெ பைத்துக்களின் ரலியல்லாஹு அன்ஹு ஷஹீதுக்கு இந்த ஷியாக்களின் நம்பிக்கை துரோகமே காரணம் என்பதை இஸ்லாமியர்களால் ஒருபோதும் மறக்கவே முடியாது.

இன்றும் இவர்கள் இஸ்லாமிய மார்க்கத்தின் புனிதத் தன்மையை சீரழித்து தங்களின் மனோவிகாரங்களை மார்க்கமாக்க எத்தனித்ததால் இஸ்லாமிய அறிஞர்கள் இவர்களைக் குறித்து மார்க்கத் தீர்ப்புக்களை வெளியிட்டதோடு முஸ்லிம்கள் இவர்களை விட்டு ஒதுங்கியிருக்க வேண்டுமென்றும் எச்சரித்துள்ளனர்.

மேலும் இவர்கள் தங்களின் கொள்கையை உலகளாவிய அளவில் வாழும் இஸ்லாமியரிடையே பரப்புவதற்காக வேண்டி உலகின் பல்வேறு நாடுகளில் மார்க்கக் கல்வி ஸ்தாபனங்களை நிறுவி அங்கே கல்வி பயிலும் மாணவர்கள் வழியாக தமது கொள்கையை பரப்பத் துவங்கியுள்ளனர்.

இன்னும் இவர்கள் தமது கொள்கை வழியாக நமது முன்னோர்களை எத்தனை தூரம் நிந்திக்கின்றனர் என்பதையும், இவர்களின் கொள்கைகள் என்னவென்பதையும் தக்க ஆதாரத்துடன் சரியான விளக்கங்களைக் கொண்டு **"அல்லாமா பழீலத்துஷ் ஷைகு அப்துல் அஸீஸ் மௌலானா குஷ்ஹாலி தாமத் பரக்காதுஹுமுல் குத்ஸிய்யா"** அவர்கள் **"ஷியாக்களும் அவர்தம் கொள்கையும்"** என்னும் இந்நூலில் விளக்கியுள்ளனர். தமிழ் கூறும் இஸ்லாமிய மக்கள் இந்நூலை படித்து பயனடைவதோடு நயவஞ்சர்களான இந்த ஷியாக்களை விட்டும் தங்களின் உயிருக்கும் மேலான ஈமானை பாதுகாத்துக் கொள்ள வேண்டுகிறேன். எல்லாம் வல்ல அல்லாஹ் இந்நூலாசிரியருக்கு சகல சம்பத்துக்களையும் அருள் புரிவதோடு இம்மகானின் திருக்கரத்தால் கணக்கில்லாதோர் நேரிய வழியினை பெற்றிடவும் தௌபீக் செய்வானாக. ஆமீன்.

எளியோன்,

**எப்.எம். இப்ராஹீம் ரப்பானி**

செயலாளர், தமிழ்நாடு சுன்னத் வல் ஜமாஅத் உலமா சபை, தென்இந்தியா.

# என்னுரை

الحمد لله الذي من علينا بالاسلام وحلاوة الايمان، والصلاة والسلام على رحمة للعالمين سيدنا محمد صلى الله عليه وعلى آله واصحابه وجميع امته

மனித சமுதாயத்தில் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் போன்றதொரு உன்னதமான மாமனிதரை இவ்வுலகம் இன்றுவரை கண்டதில்லை. இனி காணப் போவதுமில்லை. இவர்களை தமது கண்களால் கண்டு விசுவாசம் கொண்டோரையே "ஸஹாபாக்கள்" என்பதாக அழைக்கப்படுகின்றனர். இவர்களுக்கும் நிகரானவர்கள் நம்மில் ஒருவருமில்லை. இது, நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை இவர்கள் தமது கண்களால் கண்டு ஈமான் கொண்டதற்குக் கிடைத்த வெகுமானம் என்பதோடு இத்தோழர்களைக் கண்ட தாபியீன்கள், தாபியீன்களைக் கண்ட தபவுத் தாபியீன்களும் கூட இச்சமுதாயத்தின் வழிகாட்டிகளாகவே திகழ்கின்றனர்.

இன்னும் இப்புனிதமிக்க ஸஹாபாக்களில் ஒருவர் மற்றவரைக் காண படித்தரத்தில் உயர்ந்தவராக இருப்பினும் நமக்கு அனைவருமே கண்ணியத்திற்குரியவர்கள், உன்னதமானவர்களே. பின்னும் இவ்வுத்தமர்கள் சம்பந்தமாக எடுத்துரைக்கப்பட்ட பொன்மொழிகள் அனந்தம். அனந்தம். ஆதலால் இக்கண்ணியவான்களை குறித்து ஒரு வார்த்தை கூட இவர்களின் தரத்தை குறைத்தோ, அல்லது இகழ்ந்தோ பேசுவதற்கு நமக்கு எவ்வித அருகதையுமில்லை. இன்னும் புனிதமிகு இஸ்லாத்தின் வழிகாட்டிகளாகத் திகழ்ந்த எந்தப் பெரியாருமே இத்தோழர்களை இகழ்ந்தோ, தரங்குறைத்தோ பேசியதில்லை. ஏனெனில்,...

لاتسبوا اصحاب محمد صلى الله عليه وسلم فلمنام احدهم ساعة خير من عمل احدكم عمره

**அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோழர்களது ஒரு வினாடித் தூக்கம் உங்களது வாழ்நாளின் வணக்கங்கள் அனைத்தையும் விட மேலானது** என்பதாக ஸையிதுனா

அப்துல்லாஹ் இப்னு உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக மிர்காத் என்னும் நூலின் பாகம்-10, பக்கம்-357ல் கூறப்பட்டுள்ள வாக்கியம் நமக்கு பெரும் படிப்பினையாக அமைந்துள்ளதை நாம் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகும்.

இவ்வாறே கண்மணித் தோழர்களிடையே நிகழ்ந்திட்ட சம்பவங்களைக் குறித்து அவர்களில் எவரையாவது தரங்குறைத்து பேசுவது மிக மிக மோசமான ஒரு பழிக்கத்தக்க ஹராமான செயலாகும். இத்தகையோரை கொன்றாலும் குற்றமில்லை என்பது இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ்வின் மாலிகி மத்ஹபைச் சார்ந்த அறிஞர்களது கருத்தாகும். இத்தகு மோசமான நிலைகளை தமக்குள் கொண்டிருப்பவர்கள் தான் ஷியாக்கள் எனப்படுவோராகும்.

இனி தமது தோழர்களை இழிவாக பேசுவோரைக் குறித்து காத்தமுன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்,...

اذا رأيتم الذي يسبون اصحابي فقولوا لعنة الله على شركم

**எனது தோழர்களை உங்களில் ஒருவர் இழிவாக பேசக் கண்டால் அவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும் எனச் சொல்லுங்கள்** என்பதாகக் கூறுகின்றனர். நூல்: திர்மிதி, பக்கம்-3892. மிர்காத், பாகம்-10, பக்கம்-366.

இவ்வாறே நபித்தோழர்களின் திருநாமங்களான பெயரை மொட்டையாக பேசுவதும், எழுதுவதும் அவர்களை தரக்குறைவாக கருதுகின்ற ஒரு செயலே. எவ்வாறெனில் ஒரு பெண் தனது கணவனை அவனது பெயரைச் சொல்லி அழைப்பது போன்றும். இதில் மனைவி தனது பெயரை சொல்லி தன்னை அழைப்பதையே ஒரு கணவனால் சகித்துக்கொள்ள முடியாதெனில் ஒரு நபித் தோழரை அவரது பெயரை மட்டும் சொல்வது கண்ணியக் குறைவில்லையா என்ன?

மேலும் இந்நூல் நம்முடைய நாட்டில் முதியோரில் இருந்து இளைஞர்கள் வரை அனைவருமே ஷியாக்களின் கொள்கை என்ன என்பதை அறியாது அவர்கள் தமது ஈமானை இழக்கின்ற பரிதாபமான ஒரு நிலையினைக் கண்டு அவர்களைக் காப்பாற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு முயற்சியாகும். பின்னும் இந் நூலை கவனமாகப் படிப்போர் ஷியாக்கள் யாரென்பதை இலகு



வாகப் புரிந்து கொள்வர். இன்ஷாஅல்லாஹ்.

அருமை சகோதரர்களே!

கிழக்கு இலங்கையில் ஒட்டமாவடி மிராவோடை என்னுமிடத்தில் அமைந்திருக்கும் ''மன்பஉல் ஹுதா'' கல்லூரியானது ஷியாக்களின் கொள்கைக்கு உட்பட்ட ஒன்றுதான் என்பதற்கு அங்கிருந்து பட்டம் பெற்று ஆலிமாக வெளிவந்த ஒருவர் ஒட்டமாவடியில் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது அருமை துணைவியரான அன்னை ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களைப் பற்றி வெளியிட்ட தவறான கருத்தும்,..

அடுத்து இவர் ஸையிதுனா உமர் ரழியல்லாஹு அன்ஹுவின் மீது களங்கம் கற்பிக்கும் விதமாக இழிவுபடுத்தி தரக்குறைவாக பேசியபோது, இது சம்பந்தமாக அவரிடம் விளக்கம் கேட்க, அதற்கவர் தனது தவறான சிந்தனைப்போக்கை தவறென்று புரிந்து கொள்ளாமல் அதை நியாயப்படுத்த முனைந்ததும்,....

ரெதித்தன்ன ஜும்ஆ மஸ்ஜிதில் முதல் மூன்று கலீபாக்களான அபூபக்ர், உமர், உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹும் போன்றோரை குத்பா பிரசங்கத்தில் பேசிய மற்றொரு மாணவரின் தவறான கருத்தும் (ஷியா ஊடுருவல் ஒரு பார்வை) ஏராவூர் மாணவர் ஒருவரால் 2000ம் ஆண்டில் ஸையிதுனா முஆவியா ரழியல்லாஹு அன்ஹுவைப் பற்றி தரக்குறைவாக எழுதப்பட்டிருப்பதுமே பெரும் ஆதாரமாகும்.

இம்மத்ரஸா ஷியாக்களின் மத்ரஸா தான் என்பதும் இதன் மூலம் ஊர்ஜிதமாவதால் அங்கு கல்வி பயிலும் மாணவர்களே! நீங்கள் யாவரும் ஷியாக்களில்லை என்றாலும் ஊர் மக்களால் ஒதுக்கப்பட்டவர்களாக ஆக்கப்படலாம் அல்லவா!

எனவே இக்கொள்கையில் பணம் பதவியின் மோகத்திற்காக சிக்குண்டானவர்களை தௌபாச் செய்து சத்தியக் கொள்கையில் இணைந்து இஸ்லாத்தைப் பாதுகாக்கும்படி தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

யா அல்லாஹ்! உனது ஹபீபானவர்களும் எங்களுக்கு ஷஃபீயியானவர்களுமான திங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பொருட்டால் இச்சிறிய பணியை நீ ஏற்று இச்சமுதாய மக்களை காப்பாற்றுவாயாக. ஆமீன். பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.



# ஷியாக்களின் பார்வையில் அஹ்லுஸ் ஸுன்னா

ஷியாஃ எனப்படுவோர் யார்? அதன் பொருள் என்ன? அதனுடைய மறு பெயரென்ன? அதன் அர்த்தமென்ன? என்பனவற்றை தெரிந்து கொள்ளுமுன், இன்று ஷியாஃக்கள் என்று தம்மை கருதிக்கொண்டுள்ள இஸ்லாமிய உள்ளங்களே! இக்கொள்கை எந்தவொரு பெரியாரைக் கொண்டும் உருவான ஒன்றல்ல. இன்னும் இவர்களால் முன்வைக்கப்படும் கருத்துக்கள் எதுவுமே இவர்கள் கூறும் பனிரெண்டு இமாம்களில் எவரும் சத்தியமாக சொல்லவுமில்லை. அக்கருத்துக்களனைத்தும் இமாம்களின் பெயரால் சிலரின் மூலம் புனையப்பட்ட பித்தலாட்டங்களாகும்.

ஒரு வகுப்பினராக ஒருங்கிணைந்துள்ள இஸ்லாமிய சமூகத்தை பிளவுபடுத்தி, முஸ்லிம்களது ஒற்றுமையை சிதைப்பதற்காக சில யூத, கிறிஸ்தவர்கள் இஸ்லாத்திற்குள் ஊடுருவி, இஸ்லாமியரென்னும் வேடத்தில் நிகழ்த்தியவையே இது.

அல்லாஹ், ரஸூலுக்காக தம்முயிரை துச்சமாகக்கருதிய புனிதமிகு நபித்தோழர்களுக்கிடையே பொய்யான பட்டம் பதவியை வைத்து அவர்களை கூறுபோடும் நயவஞ்சகர்களை நாம் ஆதரிக்கலாமா? இன்னும் தனது ஊரைவிட்டு வெளியே செல்லக்கூட வசதியற்ற ஏழை குழந்தைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி, இலவசமாக அவர்களுக்கு வேண்டிய சகலவற்றையும் செய்துகொடுத்து, அழகிய

நடையில் குர்ஆனை ஓதக்கற்று கொடுக்கிறோம் என்னும் பெயரில் அனுப்பிவரும் ஈரான், அவர்கள் நாடுதிரும்பிய பின் அவர்களைக்காட்டி, இவர் (ஷியாக்க) களும் சுன்னத் வல் ஜமாஅத்தினரை போன்றவர்கள் தானென, நரியின் தந்திரத்தை அறியாத காக்கைகளை போன்ற பாமர மக்கள் முன் கொண்டுவந்து, அவர்களை சொல்லுமாறு தூண்டு கின்றனர்.

இனி சுன்னத் வல் ஜமாஅத்தினர் எனப்படுவோர் நபித் தோழர்கள், தாபியீன்கள், தபவுத்தாபியீன்கள், இமாம்கள் போன்ற நல்லோர் அனைவரையும் மதிப்பவர்கள், கண்ணி யப்படுத்துபவர்கள். இந்நல்லோர்கள் அரபிமொழியின் ஆழம் புரியாதவர்களல்ல. குர்ஆன் ஹதீதில் எவை? எதற்காக? என்ன நோக்கத்திற்காக? எந்தச் சந்தர்ப்பத்தில் கையாளப்பட்டுள்ளது என்பனவற்றை கவனத்தில் கொண்டே முடிவு செய்தனர்.

உதாரணமாக, ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரலியல் லாஹு அன்ஹு தான் கிலாபத்தில் அமர்வதற்கு மிகவும் தகுதிவாய்ந்தவர்கள் என்பதற்கு தெளிவான ஆதாரமுண்டு என்பதை உறுதிப்படுத்த,....

من كنت مولاه فعليّ مولاه

**நான் யாருக்கு எஜமானனோ, அவருக்கு அலி எஜமானர்.**

என்னும் நபிமொழியை எடுத்துக்காட்டி அவர்களுக்கு முன் னுள்ள மூன்று உத்தம கலீபாக்கள் மீதும் வீண்பழி சுமத்து கின்றனர்.

இருப்பினும் இவர்கள் இந்த ஹதீதில் வரும் ''மௌலா'' என்னும் சொல்லுக்கு ஒரேயொரு பொருளைத்தான் அறிந்து வைத்துள்ளனர். ஆனால் நமது பெரியோர்கள் இப்பதத் திற்கு இருபத்தோரு பொருள் இருப்பதாக விளக்கமளிக் கின்றனர். அத்துடன் இந்த நபிமொழிக்கும் இவர்களது



பிடிவாதக் கருத்துக்கும் எத்தகைய சம்பந்தமுமில்லை என்பதாக ஷரஹ் உஸூல் பக்கம் 1455, பிர்கா முகாயரா 1:230, மின்ஹாஜுஸ் ஸுன்னா, தர்ஜுமா ரூஹுல்பயான் (உர்தூ) போன்ற நூல்கள் குறிப்பிடுகின்றன.

இதுபோன்றே

انت منّي بمنزلة هارون من موسى

**நீங்கள் எனக்கு நபி மூஸா அலைஹிஸ்ஸலாமவர் களுக்கு நபி ஹாரூன் அலைஹிஸ்ஸலாமவர்களின் படித்தரத்தில் இருக்கிறீர்கள்.**

என்று கூறப்படும் நபிமொழியையும் எடுத்துக் காட்டுகின்ற னர். இன்னும் அண்ணல் நபியவர்கள் தமது ஜீவிய காலத் தில் எங்காவது பயணம் செல்ல நாடினால் மதீனா முனவ்வரா வில் எவரையாவது தங்களின் பிரதிநிதியாக நியமிப்பதும், பயணத்தில் தளபதிகளை நிறுவுவதும் வழக்கம். இவ்வாறே நபியவர்கள் ஒருசமயம் இமாமவர்களை நியமித்து மேற்கண்ட ஹதீதைக்கூறி அவர்களின் உயர்நிலையினை எடுத்துக்காட்டினார்களே அன்றி தமக்குப்பின்னரும் நீங்கள் தான் கலீபா என்னும் பொருள்பட அல்ல. அப்படிப்பார்த் தால் (அபூபக்கர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமா) ஷைகைன் விஷயத்தில்,....

ان لم تجدني فات ابابكر فانه الخليفة من بعدى

**என்னை நீங்கள் பெற்றுக்கொள்ளாவிடில் ஸித்தீகுல் அக்பரிடம் வாருங்கள் நிச்சயமாக அவர் எனக்குப்பின் எனது பிரதிநிதியாவார் (மிர்காத், 10:374)** என்றும்,

اقتدوا بالّذين من بعدى ابى بكر وعمر

**எனக்குப்பின் ஸித்தீகுல் அக்பரையும் உமர் பாருக்கை யும் பின்பற்றுங்கள் (திர்மிதீ, மிர்காத், 10:428)** என்றும்;

لوكان من بعدي نبي لكان عمر

**எனக்குப்பின் நபி இருப்பின் அவர் உமராக**

***இருப்பார். (திர்மிதீ, மிர்காத், 10:408)*** என்னும் (நபியாக முடியவில்லை என்றாலும் நபிக்குப்பின் நபியின் கலீபாவுடைய ஸ்தானத்தில் இருக்க முடியுமல்லவா!) அவ்வாறு யின் இவைகளை குறித்தெல்லாம் என்னவென்று சொல்வது?

மேலும் கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமது தோழர்களனைவரையுமே புகழ்ந்து பேசியுள்ளனர். இவைகள் அப்படிப்பட்ட வார்த்தைகள் தானே தவிர இவர்தான் கலீபா, இமாமென்று தெளிவாகக் குறிப்பிட்டு யாரையும் சொல்லவில்லை. ஆதலால் கலீபா யாரென்பது தோழர்களது ஒருமுகமான முடிவைக் கொண்டே அமையப் பெற்றதால், நாமும் அதனை ஏற்க வேண்டுமேயன்றி, பிடிவாதம் செய்வது அறிவுடைமை யாகாது.

மேலும் கிலாபத்துக்குரிய பிரச்னையானது பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் உருவான ஒன்றாதலால் இஸ்லாத்தின் அடிப்படை கொள்கை விஷயத்தில் கருத்து வேறுபாடு கொள்ளாதிருக்கும் ஷியாஃக்களை நாம் ஆதரிக்கலாமே எனக் கருதுவதும் பிழையாகும். காரணம் ஷியாஃ சகோதரர்களிடம் இப்படிப்பட்ட எண்ணமிருப்பின் அவர்கள் தம்மை ஷியாஃ என்னும் பெயரில் உள்ளடக்கிக் கொள்ளாதிருப்பதுதான் அவர்களுக்கு மேன்மையை தரும்.

பின்னர் ஷியாஃக்களிடம் இப்பிரச்னை மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இன்னும் தமது கலீபா இன்னார் தானென்று நம்புவது அவர்களிடையே ஈமானின் ஒரு அங்கமாகும். ஏனெனில்,...

قال ابو جعفر عليه السلام ولاية الله اسرها
الى جبريل واسرها جبريل الى النبي صلّى الله عليه
وسلم واسرها صلّى الله عليه وسلم الى عليّ
واسرها عليّ الى من شاء ثم انتم تذيعون ذالك



***கலீபா யார் என்பதை அல்லாஹ் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாமவர்களிடமும், ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களிடமும், நாதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் ஸெய்யிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹுவிடமும், ஹழ்ரத்தவர்கள் தம்மைச் சார்ந்தவர்களிடமும் ரகசியமாக்கி வந்தனர்.***

என்றும், அதனை நீங்கள்தான் வெளிப்படுத்துபவர்கள் என ஷியாஃக்களிடம் ஸெய்யிதுனா ஹழ்ரத் பாகர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக அஹ்லுஸ் ஸுன்னாக்களிடம் புகாரி முஸ்லிம் போன்ற ஹதீதுடைய நூல்கள் எந்த அந்தஸ்த்தில் உள்ளதோ அதேபோன்றதொரு அந்தஸ்த்தை ஷியாஃக்களின் பார்வையிலுள்ள "உஸூல் காபி" என்னும் நூலின் பக்கம் 48ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆயினும் அத்துனை தோழர்களும் அதிலும் குறிப்பாக இவர்கள் தங்களின் பனிரெண்டு இமாம்களென்று போற்றப்படுவோரும் கண்ணியத்திற்குரிய அந்நல்லோர்கள் கூட சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையுடையோராகத்தான் இருந்தனர். இனி இந்த கிலாபத்தென்னும் பிரச்னையில் சிக்கி அதில் மூழ்கிப் போனவர்கள் ஹழ்ரத் ஸைத் பின் அலீ ஸைதுல் ஆபிதீன் அவர்களிடம் சென்று தஞ்சமடைந்து நீங்கள் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென வேண்டி நிற்க, அதற்கவர்கள்;

فاعلن برائته منهم جميعا كما فعل ابوه واخوه
الاكبر

***நான் எனது தந்தை இமாம் ஜைனுல் ஆபிதீன் மற்றும் மூத்த சகோதரர் இமாம் பாகர் ஆகியோரது கொள்கையுடையவன் எனப் பிரகடனப்படுத்தியதுடன், நான் உங்களை விட்டும் நீங்கியவன்*** என்பதாகக் கூறிய வாக்கியம் அயிம்மா அல் பிக்ஹ் அத்திஸ்னா என்னும் நூலில் பக்கம் 16ல் பதிவாகி யுள்ளது. இன்னும் இதே நூலின் பக்கம் 40ல்,...

من جهل فضل ابى بكر وعمر قد جهل السنة

***ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் மற்றும் உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரின் சிறப்பையும் உணராதவனும் அறியாதவனும் நபிவழியை உணராதவனே தெரியாதவனே.***

என்பதாக ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹுவின் தந்தையும், ஹழ்ரத் ஸைத் ரலியல்லாஹு அன்ஹுவின் சகோதரருமான ஸெய்யிதுனா பாகர் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்.

மேலும் ஸெய்யிதுனா ஹழரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாதான் என்பது தெளிவான ஆதாரத்தைக்கொண்டு நிரூபிக்கப்பட்ட விஷயமாகும். இனி அவர்களுக்கு முன் ஆட்சி புரிந்தவர்கள் அநியாயக்காரர்கள் என்பதற்கு அஹ்லெ பைத்தினர்களது அமுத வாக்குகளை ஆதாரப்படுத்தும் இவர்களிடம், ஹழ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் துவக்கத்திலேயே விஷயத்தை தெளிவுபடுத்தாது போனதற்குரிய காரணம் என்ன என்பதாகக் கேட்கப்பட்டால் அன்றிருந்த சூழ்நிலையில் அவர்கள் ''தகிய்யாவை'' கைகொண்டு அதற்குரிய நேரமும் காலமும் கனிந்து வரும்வரை தமக்கு மிகவும் வேண்டிய நெருக்கமானவர்களிடம் மட்டும் இதனை கூறி வந்தனர் எனக்கூறுகின்றனர்.

உங்களுக்கு ஒருவிஷயம் தெரியுமா? இந்த தகிய்யா என்பதற்குரிய மறுபெயர்தான் நிஃபாக் - நயவஞ்சகம் என்பதாகும். அதாவது சொல்வதொன்று செய்வதொன்று. உள்ளொன்று புறமொன்று. முன்னால் ஒன்று பின்னால் ஒன்று. இதற்கு நடிப்பு எனப்பொருள் தருதல் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

பார்த்தீர்களா! மிக மிகப்பரிசுத்தமானவர்களென திருக்குர்ஆன் புகழ்ந்துரைக்கும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது கண்ணியம் வாய்ந்த குடும்பத்



தாரைக் குறித்து இவர்கள் வர்ணிக்கும் வார்த்தைகளை பார்க்கும்போது, படிக்கும்போது நமக்கு ஆச்சரியத்திலும் மகா ஆச்சரியமாயுள்ளது. இவர்களா அஹ்லெ பைத்தினரை நேசிப்பவர்கள்? இவர்களா குர்ஆனை, ஹதீதை பின்பற்றுபவர்கள்? இவர்கள் நமக்குச் சமமாவார்களா? நீங்களே முடிவு செய்யுங்கள்.

பின்னும் இன்றைய மனித சமூகம் சகல துறைகளிலும் வெற்றிபெற வேண்டுமானால் மனிதன் தனது மனம்போன போக்கில் வாழாது, அவனது வணக்கங்கள் யாவும் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுவதை விரும்பினால், நமது பெரியோர்கள் காட்டிச் சென்ற வழியினை கடைபிடித்தல் மிக மிக அவசியமாகும்.

மேலும் பெரியோர்கள் காட்டித்தந்த வழி எதுவென்பதை நாம் தெரிந்துகொள்ள நாடினால், நாலா பக்கமும் பார்த்தாலே அது எதுவென்பது நமக்குத் தெரியும். அதாவது யாரையும் யாரும் இந்த வழியில்தான் செல்ல வேண்டுமெனக் கட்டாயப்படுத்துவதில்லை. மாறாக ஒரு இடத்தை சென்றடைய பலவழிகள் இருப்பின், அப்பாதைகளனைத்தும் அவ்விடத்தை சென்றடைவதற்குரிய வழிகள் தானென்பது ஊர்ஜிதமானால், எந்த வழியில் சென்றாலென்ன? இனி இவ்வழியில் துவக்கமுண்டு முடிவில்லையென தெரிந்தால் அவ்வழியில் எவரும் செல்லமாட்டார். இந்த வழிதான் ''ஜஃபரிய்யா'' என்னும் முடிவில்லா வழி.

அடுத்து உலகின் பலபாகங்களிலும் வாழும் மனிதர்களிடையே சூரியனைவிட மிகப்பிரகாசமாக காணப்படும் பாதைகள் நான்காகும். அவை ஹனபீ, ஷாபிஈ, மாலிகி, ஹன்பலி எனப்படுபவை. இனி இந்நான்கு மத்ஹபுகளும் உலகெலாம் பரவலாகக் காணப்படுவதற்குரிய காரணமென்னவெனில், அவைகளுக்குரிய கிரந்தங்கள் இன்றும் நம்மிடையே காணப்படுவதுதான். அதற்காக அவர்களுக்கு முன்பிருந்த எவரும் பிக்ஹ் கலையான இஜ்திஹாதில் அனுபவமோ ஆர்வமோ இல்லாதவர்கள் என்பது இதன் கருத்தல்ல. இவர்களுக்கு முன்பும் எத்தனையோ பேர்கள்

இஜ்திஹாதில் மூழ்கி சட்டங்களை வடிவமைத்து மக்கள்முன் வைத்துள்ளனர். அவர்களிடம் இவர்கள் கல்வியும் கற்றுள்ளனர். அத்தகைய மாமேதைகளில் ஒருவரான நம்மனைவராலும் கண்ணியப்படுத்தப்படுபவர்களுமான பெரியார்தான் ''ஸெய்யிதுனா இமாம் ஜஃபர் பின் முஹம்மத்'' என்றும், ஷியாக்களால் அபூமுஹம்மத் என்றும் அழைக்கப்படும் பெரியாராவார். ஆனால் அவர்களின் பெயராலேயே அவர்களது நூலில் மண்ணை அள்ளிப் போடுவோர் நாமல்ல. இதனை ஜஃபரிய்யா மத்ஹபுச் சம்பந்தமான பின்வரும் வரிகளில் காணலாம். அதாவது ஷியாக்களிடம் காணப்படும் மத்ஹபின் கருத்துக்களுக்கும் இமாமவர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் அறவே கிடையாதாகையால் அதுவும் அவர்களது பெயரால் அவர்கள்மீது சுமத்தப்பட்ட பொய்யே என்பதையும் அறிந்து கொள்ளலாம். இன்ஷா அல்லாஹ்.

**ஷிஃயா என்பதன் பொருளே ''பிழை'' என்பதாக அகராதி கூறிக் கொண்டிருக்கும்போது கொடியோன் இப்னு சபாவையும், இன்னும் பல பிரிவுகளையும் பொய் யென்று கூறி நாம் நம்மை ''அயிம்மாஇத்னா'' அஷ் அரிய்யாவை பின் தொடர்பவர்களென கூறுவதன் உண்மை பாமரர்களுக்குத் தான் தெரியாது. இவர்களுக் குமா தெரியாது. இவர்களின் எதார்த்தத்தை விளக்க முற்பட்டால் விளைவு விபரீதமாகி விடும். இவர்கள் எப் படிப்பட்டவர்கள் தெரியுமா? கப்பலோட்டியே இல்லா மல் கப்பலில் பயணம் செய்கின்ற அதிமேதாவிகள்.**

அடுத்து சுன்னத் வல் ஜமாஅத்தின் உலமாக்களிலுள்ள சிலரும் இவர்களின் நயவஞ்சகத்தனமான கொள்கையை சரிவரப் படிக்காததால் உண்மை வரலாறு தெரியாமல் ஷியாக்களெனப்படுவோர் அஹ்லெ பைத்தினரை நேசிப்பவர்களாதலால் அவர்களை எதிர்க்க வேண்டாமென கூறுகின்றனர். ஆனால் இவர்களது மத்ஹபே பொய்யான ஒன்று. அந்த நல்லோர்கள் சொன்னதாக புனைந்துரைத்து அச்சத்திய சீலர்களின் மீது பழி சுமத்துகின்றவர்கள். சுமத்திக் கொண்டிருப்பவர்கள்.



இன்னும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களின் கண்ணியத்திற்குரிய தோழர் களனைவரையுமே நேசிக்க வேண்டுமென கூறினார்களே யன்றி ஒருவரை நேசித்து இன்னொருவரை ஏசிப்பேசி வெறுக்க வேண்டுமெனக் கூறியதேயில்லை. இது இஸ்லாம் கற்பிக்கின்ற நேசமுமல்ல.

மனிதர்களாகிய நாம் வெறுமனே பெயரளவுக்கு மட்டுமே இஸ்லாமியர்களாக இருக்கக்கூடாது. மாறாக இஸ்லாம் வலியுறுத்தும் விஷயங்களை முடிந்தவரை தெரிந்துகொள்ள முனைய வேண்டும். அல்லாஹ்வையும், ரஸூலையும் எவ்வாறு நேசிக்க வேண்டுமோ அவ்வாறு இல்லாது செய்யப்படும் அமல்களில் மோட்சமிருக்காது. அல்லாஹ் ரஸூலின் ரிழா எனும் திருப்பொருத்தமாகிய மோட்சம் கிடைக்க வேண்டுமாயின் நல்ல அகீதாவை கொண்டோராக அதைப்பற்றிய விளக்கமுடையோராக இருப்பது மிகவும் அவசியமாகும்.

அடுத்து குர்ஆன் ஹதீத் கூறும் அகீதா என்ன? நாம் கொண்டிருக்கும் அகீதா என்ன? தற்காலத்தில் அகீதா என் பதற்கு என்ன விளக்கமளிக்கப்படுகிறது என்பனவற்றை யெல்லாம் அறியாதிருந்தால் நாம் மனிதனாக இருப்பதற்கே அருகதையற்று விடுவோம்.

எனவே முஸ்லிம்கள் என்ன கொள்கையுடையோராக இருத்தல் அவசியமென்பதை அல்லாஹ்வின் உதவி கொண்டு என்றும், எப்போதும், எவருக்கும் தெளிவுபடுத் தத் தயங்கலாகாது. இதுதான் நமது பணியுமாகும்.

இன்னும் நாம் ஒற்றுமையையும், சகோதரத்துவத்தை யும் நிலைநாட்டும் பொருட்டு எமது நாட்டில் வேற்றுநாட்ட வரின் தீயகொள்கைகளை பாமரர்களிடையே பணத்தாசை பிடித்த, சில வழிகெட்ட பிடிவாதம்கொண்ட, அறிவை கற்றோரது செயற்பாடுகளில், கொள்கைகளில் கவனமாக இருக்கவேண்டுமென்பதால் அவர்களை அவர்கள் தேச உலமாக்களால் தொகுக்கப்பட்ட நூல்களைக் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம்.

من جهل فضل ابى بكر وعمر قد جهل السنة

***ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் மற்றும் உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரின் சிறப்பையும் உணராதவனும் அறியாதவனும் நபிவழியை உணராதவனே தெரியாதவனே.***

என்பதாக ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹுவின் தந்தையும், ஹழ்ரத் ஸைத் ரலியல்லாஹு அன்ஹுவின் சகோதரருமான ஸெய்யிதுனா பாகர் ரலியல்லாஹு அன்ஹு கூறுகின்றனர்.

மேலும் ஸெய்யிதுனா ஹழரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாதான் என்பது தெளிவான ஆதாரத்தைக்கொண்டு நிரூபிக்கப்பட்ட விஷயமாகும். இனி அவர்களுக்கு முன் ஆட்சி புரிந்தவர்கள் அநியாயக் காரர்கள் என்பதற்கு அஹ்லெ பைத்தினர்களது அமுத வாக்குகளை ஆதாரப்படுத்தும் இவர்களிடம், ஹழ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் துவக்கத்திலேயே விஷயத்தை தெளிவுபடுத்தாது போனதற்குரிய காரணம் என்ன என்பதாகக் கேட்கப்பட்டால் அன்றிருந்த சூழ்நிலையில் அவர்கள் ''தகிய்யாவை'' கைகொண்டு அதற்குரிய நேரமும் காலமும் கனிந்து வரும்வரை தமக்கு மிகவும் வேண்டிய நெருக்கமானவர்களிடம் மட்டும் இதனை கூறி வந்தனர் எனக்கூறுகின்றனர்.

உங்களுக்கு ஒருவிஷயம் தெரியுமா? இந்த தகிய்யா என்பதற்குரிய மறுபெயர்தான் நிஃபாக் - நயவஞ்சகம் என்பதாகும். அதாவது சொல்வதொன்று செய்வதொன்று. உள்ளொன்று புறமொன்று. முன்னால் ஒன்று பின்னால் ஒன்று. இதற்கு நடிப்பு எனப்பொருள் தருதல் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

பார்த்தீர்களா! மிக மிகப்பரிசுத்தமானவர்களென திருக் குர்ஆன் புகழ்ந்துரைக்கும் ஏந்தல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களது கண்ணியம் வாய்ந்த குடும்பத்



தாரைக் குறித்து இவர்கள் வர்ணிக்கும் வார்த்தைகளை பார்க்கும்போது, படிக்கும்போது நமக்கு ஆச்சரியத்திலும் மகா ஆச்சரியமாயுள்ளது. இவர்களா அஹ்லெ பைத்தினரை நேசிப்பவர்கள்? இவர்களா குர்ஆனை, ஹதீதை பின்பற்றுபவர்கள்? இவர்கள் நமக்குச் சமமாவார்களா? நீங்களே முடிவு செய்யுங்கள்.

பின்னும் இன்றைய மனித சமூகம் சகல துறைகளிலும் வெற்றிபெற வேண்டுமானால் மனிதன் தனது மனம்போன போக்கில் வாழாது, அவனது வணக்கங்கள் யாவும் அல்லாஹ்விடம் அங்கீகரிக்கப்படுவதை விரும்பினால், நமது பெரியோர்கள் காட்டிச் சென்ற வழியினை கடைபிடித்தல் மிக மிக அவசியமாகும்.

மேலும் பெரியோர்கள் காட்டித்தந்த வழி எதுவென்பதை நாம் தெரிந்துகொள்ள நாடினால், நாலா பக்கமும் பார்த்தாலே அது எதுவென்பது நமக்குத் தெரியும். அதாவது யாரையும் யாரும் இந்த வழியில்தான் செல்ல வேண்டுமெனக் கட்டாயப்படுத்துவதில்லை. மாறாக ஒரு இடத்தை சென்றடைய பலவழிகள் இருப்பின், அப்பாதைகளனைத்தும் அவ்விடத்தை சென்றடைவதற்குரிய வழிகள் தானென்பது ஊர்ஜிதமானால், எந்த வழியில் சென்றாலென்ன? இனி இவ்வழியில் துவக்கமுண்டு முடிவில்லையென தெரிந்தால் அவ்வழியில் எவரும் செல்லமாட்டார். இந்த வழிதான் ''ஜஃபரிய்யா'' என்னும் முடிவில்லா வழி.

அடுத்து உலகின் பலபாகங்களிலும் வாழும் மனிதர்களிடையே சூரியனைவிட மிகப்பிரகாசமாக காணப்படும் பாதைகள் நான்காகும். அவை ஹனபீ, ஷாபிஈ, மாலிகி, ஹன்பலி எனப்படுபவை. இனி இந்நான்கு மத்ஹபுகளும் உலகெலாம் பரவலாகக் காணப்படுவதற்குரிய காரணமென்னவெனில், அவைகளுக்குரிய கிரந்தங்கள் இன்றும் நம்மிடையே காணப்படுவதுதான். அதற்காக அவர்களுக்கு முன்பிருந்த எவரும் பிக்ஹு கலையான இஜ்திஹாதில் அனுபவமோ ஆர்வமோ இல்லாதவர்கள் என்பது இதன் கருத்தல்ல. இவர்களுக்கு முன்பும் எத்தனையோ பேர்கள்

இஜ்திஹாதில் மூழ்கி சட்டங்களை வடிவமைத்து மக்கள்முன் வைத்துள்ளனர். அவர்களிடம் இவர்கள் கல்வியும் கற்றுள்ளனர். அத்தகைய மாமேதைகளில் ஒருவரான நம்மனைவராலும் கண்ணியப்படுத்தப்படுபவர்களுமான பெரியார்தான் ''ஸெய்யிதுனு இமாம் ஜஃபர் பின் முஹம்மத்'' என்றும், ஷியாஃக்களால் அபூமுஹம்மத் என்றும் அழைக்கப்படும் பெரியாராவார். ஆனுல் அவர்களின் பெயராலேயே அவர்களது நூலில் மண்ணை அள்ளிப் போடுவோர் நாமல்ல. இதனை ஜஃபரிய்யா மத்ஹப் சம்பந்தமான பின்வரும் வரிகளில் காணலாம். அதாவது ஷியாஃக்களிடம் காணப்படும் மத்ஹபின் கருத்துக்களுக்கும் இமாமவர்களுக்கும் எவ்விதத் தொடர்பும் அறவே கிடையாதாகையால் அதுவும் அவர்களது பெயரால் அவர்கள்மீது சுமத்தப்பட்ட பொய்யே என்பதையும் அறிந்து கொள்ளலாம். இன்ஷா அல்லாஹ்.

***ஷிஃயா என்பதன் பொருளே ''பிழை'' என்பதாக அகராதி கூறிக் கொண்டிருக்கும்போது கொடியோன் இப்னு சபாவையும், இன்னும் பல பிரிவுகளையும் பொய் யென்று கூறி நாம் நம்மை ''அயிம்மாஇத்னு'' அஷ் அரிய்யாவை பின் தொடர்பவர்களென கூறுவதன் உண்மை பாமரர்களுக்குத் தான் தெரியாது. இவர்களுக் குமா தெரியாது. இவர்களின் எதார்த்தத்தை விளக்க முற்பட்டால் வினைவு விபரீதமாகி விடும். இவர்கள் எப் படிப்பட்டவர்கள் தெரியுமா? கப்பலோட்டியே இல்லா மல் கப்பலில் பயணம் செய்கின்ற அதிமேதாவிகள்.***

அடுத்து சுன்னத் வல் ஜமாஅத்தின் உலமாக்களிலுள்ள சிலரும் இவர்களின் நயவஞ்சகத்தனமான கொள்கையை சரிவரப் படிக்காததால் உண்மை வரலாறு தெரியாமல் ஷியாஃக்களெனப்படுவோர் அஹ்லெ பைத்தினரை நேசிப்பவர்களாதலால் அவர்களை எதிர்க்க வேண்டாமென கூறுகின்றனர். ஆனுல் இவர்களது மத்ஹபே பொய்யான ஒன்று. அந்த நல்லோர்கள் சொன்னதாக புனைந்துரைத்து அச்சத்திய சீலர்களின் மீது பழி சுமத்துகின்றவர்கள். சுமத்திக் கொண்டிருப்பவர்கள்.



இன்னும் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங்களின் கண்ணியத்திற்குரிய தோழர் களனைவரையுமே நேசிக்க வேண்டுமென கூறினர்களே யன்றி ஒருவரை நேசித்து இன்னெருவரை ஏசிப்பேசி வெறுக்க வேண்டுமெனக் கூறியதேயில்லை. இது இஸ்லாம் கற்பிக்கின்ற நேசமுமல்ல.

மனிதர்களாகிய நாம் வெறுமனே பெயரளவுக்கு மட்டுமே இஸ்லாமியர்களாக இருக்கக்கூடாது. மாருக இஸ்லாம் வலியுறுத்தும் விஷயங்களை முடிந்தவரை தெரிந்துகொள்ள முனைய வேண்டும். அல்லாஹ்வையும், ரஸுலையும் எவ்வாறு நேசிக்க வேண்டுமோ அவ்வாறு இல்லாது செய்யப்படும் அமல்களில் மோட்சமிருக்காது. அல்லாஹ் ரஸுலின் ரிழா எனும் திருப்பொருத்தமாகிய மோட்சம் கிடைக்க வேண்டுமாயின் நல்ல அகீதாவை கொண்டோராக அதைப்பற்றிய விளக்கமுடையோராக இருப்பது மிகவும் அவசியமாகும்.

அடுத்து குர்ஆன் ஹதீத் கூறும் அகீதா என்ன? நாம் கொண்டிருக்கும் அகீதா என்ன? தற்காலத்தில் அகீதா என் பதற்கு என்ன விளக்கமளிக்கப்படுகிறது என்பனவற்றை யெல்லாம் அறியாதிருந்தால் நாம் மனிதனுக இருப்பதற்கே அருகதையற்று விடுவோம்.

எனவே முஸ்லிம்கள் என்ன கொள்கையுடையோராக இருத்தல் அவசியமென்பதை அல்லாஹ்வின் உதவி கொண்டு என்றும், எப்போதும், எவருக்கும் தெளிவுபடுத் தத் தயங்கலாகாது. இதுதான் நமது பணியுமாகும்.

இன்னும் நாம் ஒற்றுமையையும், சகோதரத்துவத்தை யும் நிலைநாட்டும் பொருட்டு எமது நாட்டில் வேற்றுநாட்ட வரின் தீயகொள்கைகளை பாமரர்களிடையே பணத்தாசை பிடித்த, சில வழிகெட்ட பிடிவாதம்கொண்ட, அறிவை கற்ரேரது செயற்பாடுகளில், கொள்கைகளில் கவனமாக இருக்கவேண்டுமென்பதால் அவர்களை அவர்கள் தேச உலமாக்களால் தொகுக்கப்பட்ட நூல்களைக் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்துகிருேம்.

அத்தியாயம் ஒன்று

# ஷியாஃ என்பதன் பொருளும்! அதன் மறுபெயரின் கருத்தும்!

انما قيل لهاالشيعة لأنها تشيعت عليّا وفضلوه
على سائر الصّحابة

***ஸெய்யிதுனா ஹழ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களை பின்தொடர்வதோடு, ஏனைய மற்ற நபித்தோழர்களைக்காண இமாமவர்களை பெருமை படுத்தி கூறுவதனாலேயே இவர்களை ஷியாஃ எனக் கூறப்படுகிறது.*** நூல்: குன்யத்துத் தாலிபீன், பக்கம்-142, நாமே வ நஸப், பக்கம்-495.

ஷியாஃ என்னும் அரபிப் பதத்திற்கு பின்னால் செல்பவன், உதவியாளன், கூட்டம், பிரிவு மற்றும் தம்மை அஹ்லெ பைத் எனக் கூறிக்கொள்ளும் பிரிவினர் என்பது பொருளாகும். நூல்: அல் காமூஸுல் அன்வார், பக்கம்-319.

والشّيعة انصار الرجل واتباعه ، وكل قوم
اجتمعوا على امر فهم شيعة

***ஒருவரை பின்தொடர்ந்து உதவி செய்வோருக்கும், ஒரு விஷயத்தில் ஒருங்கிணைந்துள்ள கூட்டத்தாருக்கும் ஷியாஃ எனப்படுகிறது.*** நூல் : தஹ்தீபுல் லுகா-3:161, தாஜுல் உரூஸ்-4:405.



இனி திருக்குர்ஆனிலும் ஷியாஃ என்னும் பதம் பல இடங்களில் பல்வேறு பொருட்களில் பேசப்பட்டிருப்பதையும் நாம் பார்க்கலாம். உதாரணமாக,...

ثمّ لننزعن من كلّ شيعة ايّهم اشدّ
على الرّحمن عتيّا اى من كلّ امّة

***பின்னர் நாம் ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் அவனுக்கு மாறுபுரிவதில் தீவிரமாக இருப்போர் அனைவரையும் நிச்சயமாக வேறாக பிரிப்போம்.*** சூரு-மர்யம்-69.

இவ்வசனத்தில் ஷியாஃ என்பதற்கு 'உம்மத்'-கூட்டம், சமுதாயம் என பொருள்பட உபயோகிக்கப்பட்டுள்ளது. பார்க்க : தப்ஸீர் அல்குர்ஆனுல் அழீம், 3:211.

انّ الّذين فرّقوا دينهم وكانوا شيعا لّست
منهم اى فرقا

***திடனாக எவர்கள் தங்களின் மார்க்கத்தை (தம் விருப்பப்படி பலவாறாகப்) பிரித்து பல பிரிவினர்களாக பிரிந்து விட்டார்களோ அவர்களோடு (நபியே) உமக்கு எவ்விதச் சம்பந்தமுமில்லை.*** சூரு அன்ஆம்-159.

இவ்வசனத்தில் "பிரிவு" என்னும் பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது. நூல் : தப்ஸீர் அல் மன்னார் - 8:214.

ولقد اهلكنا اشياعكم فهل من مدّكر، اى من
اهل الكفر من الامم الماضية

***நிராகரிப்போரே! உங்களைப்போன்ற எத்தனையோ வகுப்பாளர்களை நிச்சயமாக நாம் அழித்திருக்கிறோம். எனவே (இதைக்கொண்டு) நல்லுணர்வு பெறுவோர் உண்டா?*** சூரு அல்கமர், 51.

இவ்வசனத்தில் இங்கே “போன்ற, நிகரான” எனப் பொருள்பட உபயோகிக்கப்பட்டுள்ளது.

நூல் : ஜாமிவுல் பயான் - 27:112.

فوجدوا فيها رجلين يقتتلان هذا من شيعته
وهذا من عدوّه فاستغاثه الّذي من شيعته
على الّذي من عدوّه، بمعنى المتابع والموالى

இங்கு இரண்டுபேர் சண்டையிட்டுக் கொண்டிருக்க கண்டார். அதில் ஒருவன் அவரை பின்தொடரும் கூட்டத்தைச் சேர்ந்தவன். மற்றவன் அவரது பகைவனை பின்தொடரும் கூட்டத்தைச் சார்ந்தவன். பகைவனுக்கு எதிராக உதவுமாறு அவரது கூட்டத்தை சார்ந்தவன் கோரினான்.

சூரு அல்கிஸஸ்-15.

இங்கே ஷியாஃ என்னும் பதம் “பின்தொடர்பவன், உதவி செய்பவன்” என்னும் பொருளில் பிரயோகிக்கப் பட்டுள்ளது.

நூல் : தஹ்தீபுல் லுஹா - 3:63.

மேலும் ஷியாஃ என்னும் பதத்திற்கு உலமாக்களான பெரியோர்கள் வழக்குச் சொல்லில் பல்வேறு கருத்துக்களை கூறுகின்றனர். இப்போது அவைகளையும் பார்ப்போம். அதாவது,...

وقد غلب هذاالاسم على كل من يتوالى عليا
واهل بيته حتّى صار اسما لّهم خاصا

ஷியாஃ என்னும் பதம் ஸெய்யிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களையும் அஹ்லெ பைத்தினரையும் தங்களின் அதிகாரிகளாக ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் சொந்தமாக்கப்பட்ட பெயராகும்.

நூல் : அல் காமூஸுல் முஹீத் - 3:47.

هم الّذين نصروا عليّا واعتقدوا امامته نصا وان



خلافة من سبقه كانت ظلما له

இவர்கள் ஸெய்யிதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு உதவி ஒத்தாசையாக இருந்ததோடு ஹழ்ரத்தவர்கள் தான் தெளிவான ஆதாரத்தைக் கொண்டு கலீபாவாக நியமிக்கப்பட்டவர் என்றும் அதற்கு முன்னிருந்த ஆட்சியும், ஆட்சியாளர்களும் அநியாயக்காரர்கள் என்றும் கருதியதால் இப்பெயரைக் கொண்டு பிரபலமாயினர்.

هم الّذين فضلوا عليّا على عثمان

ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹழ்ரத் ஸெய்யிதுனா உத்மான் ரலியல்லாஹு அன்ஹுவை விட பெருமைபடுத்தியதாலும் இப்பெயர் வழங்கப்பட்டது.

الشّيعة اسم لكلّ من فضل عليّا على
الخلفاء الرّاشدين قبله رضى اللّه عنهم جميعا ،
ورأت انّ اهل البيت احقّ بالخلافة ، وانّ خلافة
غيرهم باطلة

ஸெய்யிதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களை, அவர்களுக்கு முன்பிருந்த நேர்வழிகாட்டும் புனித கலீபாக்கள் அனைவரையும்விட உயர்வுபடுத்தியதுடன், கலீபாவாக இருப்பதற்கு அஹ்லெ பைத்தினரே மிகவும் தகுதியானவர்கள் என்றும், அவர்களல்லாத ஏனைய கலீபாக்களின் ஆட்சியனைத்தும் பாத்திலானவை என்று எண்ணுகின்ற அனைவரும் ஷியாஃக்கள் என்பதாக அழைக்கப்படுகின்றனர்.

وهم الذين ينحلون حب اهل البيت وليس
كذالك يزعمون انهم اتباع اكابرهم مثل ،

الحسنين وابيهما وعلي بن الحسين وزيد بن علي وجعفر الصادق - وعلامة ذالك انهم يسبون ابابكر وعمر

*ஷியாஃக்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களினது குடும்பத்தினது அன்பைப் பறிமுதல் செய்தவர்கள். உண்மை இதுவல்ல. இவர்கள் ஸெய்யிதுனா ஹஸன், ஹுஸைன், அலி, ஜைனுல் ஆபிதீன், ஸைத் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோரைப் பின் தொடர்வோர் என விழிப்பிலே கனவு காண்போராகும். அபூபக்ர் உமர் இரு தோழரையும் ஏளனமாகக் கருதுவது ஏசுவது இவர்களின் சின்னமாகும் என்பதாக தாரகுத்னியில் பதிவாயுள்ளதாக "அல் அஜ்விபத் தாமிகா" பக்கம்-142ல் பதிவாயுள்ளது.*

ஆதலால் இப்படிப்பட்ட கொள்கையுடையவர்களையே ஷியாஃ என்றழைக்கப்படுவதாக நமது பெரியோர்கள் தங்களின் கருத்துக்களை கூறிவந்துள்ளனர் என்பதை பார்த்தீர்கள். இனி மேற்கூறப்பட்ட கருத்துக்களில் முதல் கருத்து நமக்கும் பொருந்துமென்று சொல்லலாம். ஏனெனில் நாமும் ஸெய்யிதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களையும், அஹ்லெ பைத்தினரையும் தலைமைத்தனத்திற்கு தகுதியானவர்களென எண்ணுவதுதான். ஆயினும் நாம் ஷியாஃக்களுக்கு முற்றிலும் வேறுபட்ட கருத்தை கொண்டிருப்பவர்கள்.

அடுத்து மேற்கண்ட கொள்கையுடையோர் அனைவரும் ஷியாஃக்கள் என அழைக்கப்படுவதைப் போல இவர்கள் இன்னொரு பெயரைக்கொண்டும் அழைக்கப்படுகின்றனர். அது "ராஃபிழா" என்பதாகும். இன்னும் இது இவர்களனைவருக்கும் குறிப்பாக்கப்பட்ட இரண்டாவது பெயராகும்.

"ராஃபிழா" என்னும் பதம் "ரஃபழ" - மற்றும் "ரஃப்ழ்" என்னும் மூலத்திலிருந்து திரிந்த ஒன்றாகும்.



"ரஃபழ" என்றால் "விட்டு விட்டவன்" (தரக) என்பது அரபு இலக்கண அர்த்தமாகும். இதற்குரிய உதாரணத்தை பாருங்கள்.

والرّوافض كل جند تركوا قائدهم

*தலைவனை விட்டுவிட்ட படைகளனைத்துக்கும் ராஃபிழா எனப்படும்.* நூல் : அஸ்ஸிஹாஹ் - 3:1078, காமூஸுன் முஹீத், பக்கம்-344.

فانه يطلق على تلك الطائفة ذات الافكار والآراء الاعتقادية الذين رفضوا خلافة الشيخين واكثر الصحابة وزعموا ان الخلافة في علي وذريته من بعده بنص من النبيّ صلى الله عليه وآله وسلم وأن خلافة غيرهم باطلة.

*இன்னும் மார்க்கப் பெரியோர்களிடத்தில் ராஃபிழா என்னும் பதமானது ஸெய்யதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களே கலீபாவென்று அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களால் தெளிவாக அறிவிக் கப்பட்டவர்கள் என்றெண்ணி ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர், ஸெய்யிதுனா உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹுமாவையும் மற்றும் பெரும்பான்மையான தோழர் பெருமக்களையும் விட்டுவிட்ட ஒரு சிந்தனையைக் கொண்ட கூட்டத்தாருக்கு இப்பெயர் வழங்கப்படுகிறது.* நூல் : பிரக் முஆசரா - 1:206.

அடுத்து ராஃபிழா என்பதாக பெயரிடப்பட்டதற்குரிய காரணங்களில் சிலவற்றையும் இனி பார்ப்போம்.

انّهم سمّوا رافضة لرفضهم امامة زيد بن عليّ وتفرّقهم عنه

***செய்யிதுனா ஹழ்ரத் ஸைத் பின் அலீ, ஸைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்களை இமாமாக ஏற்காது. அவர்களை விட்டும் பிரிந்துபோனதால் இப்பெயர் அவர்களுக்கு வழங்கப்பட்டது.***

நூல் : அல் பிதாயா வந்நிஹாயா-9:380.
பிரக் முஆஸரா - 1:206.

سمّوا رافضة لرفضهم اكثر الصّحابة ورفضهم لامامة الشّيخين

***பெரும்பான்மையான தோழர் பெருமக்களையும் செய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் மற்றும் செய்யிதுனா உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரின் கிலாபத்தையும் விட்டதால் இப்பெயர் வழங்கப்பட்டது.***

நூல் : மகாலாத்துல் அஷ்அரீ - 1:89.
பிரக் முஆஸரா - 1:206.

*ராஃபிழா* என்னும் இப்பெயர் *ரஹ்மத்துல்லில் ஆலமீனாகிய* நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள், செய்யிதுனா அலீ *ரலியல்லாஹு* அன்ஹு அவர்களை யழைத்து, எனக்குப் பின்னால் ஒரு கூட்டத்தினர் வருவர். அவர்களுக்கு *ராஃபிழா* என்பதாக பெயரிடப்பட்டிருக்கும். அவர்கள் இத்தகைய அடையாளங்களை கொண்டிருப்பர் என்பதாக ஹழ்ரத் அலீ *ரலியல்லாஹு* அன்ஹுவைக் கொண்டு அறிவிக்கப்படும் ஹதீத் முஸ்னத் அஹ்மத், பக்கம்-106, ஹதீத் எண்-808லும், ஷரஹ் உஸுல் இஃதிகாத் பக்கம்-1454,1456லும், அல் அஜ்விபத் தாமிகா, பக்கம்-142லும், அகாயித் அத்தலாதி வஸ்ஸப்ஈன், பக்கம்-1:446லும் மாநபியவர்களால் *ராஃபிழா* என்னும் பெயர் முன்னெச்சரிக்கை செய்யப்பட்ட ஒரு பெயரென்பதை தெரிந்து கொள்ளலாம்.

மேலும் இப்பெயர் செய்யிதுனா ஸைத் பின் அலீ *ரலியல்லாஹு* அன்ஹு அவர்கள் தங்களின் சகோதரர், பெற்றோர் மற்றும் இல்லத்தாரைப்போன்று செய்யிதுனா ஸித்தீகுல் அக்பர், செய்யிதுனா உமர் பாரூக் *ரலியல்லாஹு* அன்ஹுமா ஆகிய இருவரின் கிலாபத்தையும் அவர்களது உயர்நிலையினையும் இவர்கள் ஏற்று பிரகடனப்படுத்தியதற்குப்பின் ஒரு கூட்டத்தார் இவர்களிடம் வருகைதந்து நீங்கள் கூறிய கருத்துக்களை வாபஸ் பெற வேண்டுமென்ற போது, அதற்கவர்கள்; முடியாதெனக்கூற அவ்வாறாயின் உங்களை நாங்கள் எங்களின் இமாமாக ஏற்றுக்கொள்ள மாட்டோமென்றனர்.



அதுபோது இமாம் ஜைத் பின் அலீ *ரலியல்லாஹு* அன்ஹு அவர்கள், அவர்களை நோக்கி; நீங்கள் என்னை விட்டீர்கள். நானும் உங்களை விடுகிறேனென *ராஃபிழா* எனப் பெயரிட்டு, இவர்கள்தான் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களால் *ராஃபிழா*வெனப் பெயரிடப் பட்டவர்கள் என்றுகூறி அவர்களை பிரகடனப்படுத்தினர். நூல்: குன்யத்துத் தாலிபீன், பக்கம்-148. அகாயித் அத்தலாதி வஸ்ஸப்ஈன் - 1:446, நாமே வ நஸப், பக்கம்-495.

மேலும் *ராஃபிழா* எனப் பெயருள்ள கூட்டமொன்று எனக்குப்பின் வருமென்பதாக ஆலிமுல் கைஃபான அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் முன்னெச்சரிக்கை செய்திருந்தாலும் அப்பெயரை பிரகடனப்படுத்தியவர்கள் ஸைத் பின் அலீ *ரலியல்லாஹு* அன்ஹு அவர்களே. இன்னும் இந்த ஸைத் பின் அலீ *ரலியல்லாஹு* அன்ஹு என்பார் *ராஃபிழா*க்களான ஷியாஃக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பனிரெண்டு இமாம்களில் ஒருவரும், செய்யிதுனா ஸைனுல் ஆபிதீன் *ரலியல்லாஹு* அன்ஹுவின் மைந்தரும், செய்யிதுனா பாகர் *ரலியல்லாஹு* அன்ஹுவின் சகோதரருமாவார்.

இஸ்லாமிய சமூகத்தின் மிக மிகக்கொடியவர்களான இந்த ஷியாஃக்கள் இப்போது நமது நாட்டில் உலாவரத் துவங்கியுள்ளனர். அத்துடன் மிகவும் தந்திரமாக இவர்கள் மத்ரஸாக்களை தோற்றுவித்து, அங்கே கல்விகற்கும் மாண

வர்களுக்கு இலவசக் கல்வி, பின்தங்கியோருக்கு உறைவிட வசதி, ஏழை சிறுவர்கள் மேற்கல்விக்காக ஈரானுக்கு அனுப்பப்படுதல் என்ற தொண்டாற்றும் பணியின் மூலம் தங்களின் கொள்கைகளுக்கு அணிசேர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

ஆனால் இவர்கள் எப்போது, எவ்வாறு, எங்கே தோன்றினார்கள்? அப்போது இவர்களிடையே காணப்பட்ட அபிப்பிராயங்கள் என்ன? இவர்களில் பல்வேறு பிரிவினர் எப்படி உருவாயினர்? அப்பிரிவுகள் எப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஏன் உருவாயின? என்பவைகளை எல்லாம் விளக்கப் புகுந்தால் விஷயம் மிகவும் நீண்டுபோய் விடுமென்பதால் அவற்றையெல்லாம் நாம் விபரிக்காது விடுகிறோம். நாதாக்களின் அனுக்கிரஹத்தை கொண்டு இன்ஷா அல்லாஹ் அவசியமெனக் கருதும் சமயத்தில் விபரிப்போம்.

இன்னும் இன்றுள்ள ராஃபிழாக்களான ஷியாஃக்களால் தங்களின் மத்ஹப் எனப் பெருமைபட கூறப்படும் மத்ஹப் ஜஃபரிய்யாவினதும், மற்றும் அவர்களது மார்க்கத்தின் அகீதா என்ன என்பதற்குமுரிய ஆதாரங்களை சுருக்கமாக அவர்களின் நூல்களைக் கொண்டும், நமது பெரியோர்களின் விளக்கங்களை கொண்டும் விபரிப்போம்.

இனி இவர்களை இனங்காணுதல் என்பது மிகவும் கடினம். இவர்களின் நடையுடை பேச்சை வைத்து இவர்களை எடைபோடவோ, கண்டுகொள்ளவோ முடியாது. இவர்கள் எங்கே சென்றாலும் அங்குள்ள சூழ்நிலைகளுக்கேற்ப தங்களின் நடவடிக்கைகளை அமைத்துக் கொள்வார்கள். இதைத்தான் அரபியில் ''தகிய்யா'' எனக் கூறப்படுகின்றது. இந்த தகிய்யா என்பதற்கு இவர்கள் குர்ஆன் ஹதீதைக் கொண்டு எல்லாம் ஆதாரங்களை அடுக்குகின்றனர். அவைகளையெல்லாம் நாம் இந்நூலில் வரிசைபடுத்தவில்லை. இருப்பினும் தகிய்யா என்னும் பதத்தை இந்நூலில் நாம் எந்த இடத்தில் என்ன பொருளில் கையாண்டிருக்கிறோமோ அப்பொருள் தான் தகிய்யா என்பதற்குரிய விளக்கமாகும் என்பதை



விளங்கிக் கொண்டால் போதுமானது.

மேலும் இவர்களை நாம் இனங்கண்டு கொள்வதற்காக நம்மால் எடுத்துக்காட்டப்படும் ஆதாரம் என்னவெனில், ''யார் கொள்கைரீதியான அகீதாவில் ஈரான் தேசத்தை ஆதரிக்கின்றார்களோ அவர்களையெல்லாம் ஷியாஃக்கள் - ராஃபிழாக்கள்'' என்று சொல்லலாம் என்பதே நமது கருத்தாகும்.

عن الشّعبى انّه قال : العلم كثير فخذوا من كلّ
كلام احسنه ، احب اهل البيت ولاتكن رافضا

**அறிவென்பது அளவிட முடியாததாகும். ஆகையால் நல்ல விஷயங்களை யார் சொன்னாலும் எடுத்துக் கொள்ளுங்கள். அஹ்லெ பைத்தினரை நேசியுங்கள். இன்னும் ராஃபிழாக்களாகி விடாதீர்கள்.**

நூல் : அகாயித் அத்தலாதி வஸ்ஸப்ஈன் - 1:447.

அத்தியாயம் இரண்டு

# ஷியாஃக்களும் பிக்ஹ் ஜஃபரிய்யாவும்!

இத்தலைப்பில் முன்மொழியப்படும் கருத்துக்களைத்தும் பிக்ஹ் ஜஃபரிய்யா எனப் பெயரிடப்பட்டு நான்கு பாகமாக கோர்வை செய்யப்பட்ட நூலின் முதலாம் பாகம் 53முதல் பக்கம் 90 வரையினதும் இமாம் ஜஃபர் சாதிக் ரலியல்லாஹுு அன்ஹுு எனப்பெயரிடப்பட்டு கோர்வை செய்யப்பட்ட நூற்களின் கருத்துக்களாகும். எனவே நீங்கள் இதனை மேற்கொண்டு படிக்குமுன்,...

لاتقبلوا علينا حديثا الا ماوافق القرآن

***திருக்குர்ஆனுக்கு ஒவ்வாத எந்தப் பேச்சையாவது நாங்கள் சொன்னதாக கூறப்படுமானுல், அவைகளை ஒப்புக் கொள்ளாதீர்கள்.***

என்பதாக ஸெய்யிதுத் தாயிஃபீன் ஹழ்ரத் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹுு அன்ஹுு அவர்களால் சொல்லப்பட்ட கருத்தை நினைவில்கொண்டு படியுங்கள்.

''மத்ஹப் ஜஃபரிய்யா'' எனப்படும் ஷியாஃக்களிடம் மிகப்பிரபல்யமான இச்சட்டகிரந்த பிக்ஹ் நூல் இமாம் ஸெய்யிதுனு ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹுு அன்ஹுுவின் பெயரால் உருவாக்கப்பட்ட நூலாகும். இதனை ஷியாஃக்களின் உஸுல் காபி என்னும் நூல் 494ம் பக்கம் உறுதிப்படுத்துகிறது. அதாவது,...



وكانت الشيعة قبل ان يكون ابو جعفر وهم لايعرفون مناسك حجهم وحلالهم وحرامهم حتى كان ابو جعفر ففتح لهم وبين لهم مناسك حجهم وحلالهم وحرامهم حتى صارالناس يحتاجون اليهم من بعد ما كانوا يحتاجون الى الناس

***ஷியாஃக்கள் அபூஜஃபருக்கு முன் ஹஜ்ஜின் சட்டங்களையோ ஹலால் ஹராமைப் பற்றியோ எதுவும் தெரியாதிருந்தனர். அபூஜஃபர் வந்துதான் இவைகளை அவர்களுக்கு கற்றுக் கொடுத்தனர். ஷியாஃக்கள் ஷியாஃ அல்லாதோரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இவர்கள் தெளிவுபடுத்திய பின்னரே, ஷியாஃக்களிடம் சட்டங்களை கற்கலாயினர். அதாவது ஷியாஃக்கள் பக்கம் தேவையாயினர்.***

இனி ஸெய்யிதுனு அபூஜஃபர், இமாம் பாகர் ரலியல்லாஹுு அன்ஹுு அவர்கள் ஹிஜ்ரி 114 துல்ஹஜ் பிறை 7ல் அதாவது 732ம் ஆண்டு இறைவனடி சேர்ந்தவர்கள். (நூல் : தாரீக் அயிம்மா, 5ம் பாடம், பக்கம் 310) அதாவது முதலாம் நூற்ருண்டு முடிவடைந்து இரண்டாம் நூற்ருண்டில் ஒருசில வருடங்கள்வரை வாழ்ந்தவர்கள் பிக்ஹ் சட்டங்களையே அறியாதிருந்தனர். ஆகையால் இதைக்கொண்டு இதற்கு முன் பிக்ஹ் ஜஃபரிய்யா என்னும் சட்டநூல் இல்லையென்பதும் இதனுல் கலீபாக்களின் ஆட்சி என்பதே வீண் விரயமானது என்பதும் புலனுகிறது.

இன்னும் இந்த நூறு வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த கலீபாக்கள், அன்ஸார்கள், முஹாஜிரீன்கள், அஹ்லெ பைத்தினர் போன்ற அனைவருமே அண்ணல் நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லமவர்கள் காட்டிய வழியில்தான் வணக்கங்கள் புரிந்துவந்தனர். அவர்களில்

எவரும் எந்த விஷயத்திலும் எதிர்ப்புத் தெரிவிக்கவோ, அல்லது புரியாமல் தமதில்லங்களிலேயோ இருக்கவில்லை. அத்துடன் ஜமாஅத்தோடு இணைந்து ஒன்றை செய்தாலும் அதனை அவர்கள் தமது இல்லங்களில் வைத்து திருப்புகின்றவர்களாகவும் இருக்கவில்லை என்னும் உண்மையை முல்லா பாகர் மஜ்லிசி தமது நூலில் இப்படிக் கூறுகிறார். அதாவது,...

ماكان ابوك يصلى اذارجع الى البيت فقال لا والله

***இமாம் ஸெய்யிதுனா ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுவிடம், தந்தை மூன்று கலீபாக்களின் பின்னால் தொழுதவைகளை வீட்டில் திருப்புகின்றவர்களாக இருந்தார்களா என்று வினவியபோது, அல்லாஹ்வின் மீதாணையாக இல்லை என்றனர்.***

*நூல் : பிஹாருல் அன்வார், 10x140. பழைய பிரதி.*

புனிதமிக்க நபிமணித் தோழர்களனைவரும் கண்மணி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் குடும்பத்தினரும் வணக்கங்கள் புரிவதில் களங்கமெதுவுமின்றி சகலவிதமான மார்க்கக் கடமைகளையும் புனிதமிகு கலீபாக்களின் கீழ்ப்படிதலிலேயே நிறைவேற்றி வந்தனர். ஆனால் மேற்கண்ட உஸூல் காபி என்னும் நூல் இமாமவர்களுக்கு முன் ஷியாஃக்களும் எதையுமே தெரியாதிருந்தனர் என்றும் அவைகளை இமாமவர்களே அவர்களுக்கு கற்பித்தனரென் றும் கூறுகிறது.

இப்போது வாருங்கள். ஸெய்யிதுத் தாபிஃபீன் இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹிஜ்ரி 148 ஷவ்வால் பிறை 15ல் கி.பி. 756ம் ஆண்டு இவ்வுலகை விட்டு மறைந்தனர் என்பதாக தாரீக் அயிம்மா என்னும் நூல் குறிப்பிடுவதால், இந்த பிக்ஹ் ஜஃபரிய்யாவுக்கும் இமாமவர்களுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதை புரிந்து கொள்ளலாம்.

பின்னும் இப்போதுள்ள பிக்ஹ் ஜஃபரிய்யா நூலானது



இமாமவர்களின் காலத்தில் தொகுக்கப்படவில்லை என்பதற்குரிய காரணத்தை ஷியாஃ உலமாக்களில் ஒருவரான ஜஃபர் ஹஸன் ஷீயிஃ கூறுவதை பாருங்கள்.

*ஹழ்ரத் அலீ முர்தழா, ஹஸன், ஹுஸைன், ஜைனுல் ஆபிதீன் ரலியல்லாஹு அன்ஹும் போன்றோரின் காலச் சூழ்நிலை மிகவும் அபாயகரமான நிலைவாய்ந்ததாக இருந்ததால், அவர்கள் மார்க்கக் கருத்துக்களை மக்களிடையே சொல்வதற்கோ அல்லது எழுதிவைக்கவோ அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதன்பின் அவர்களின் ஐந்தாம், ஆறும் இமாம்களான இமாம் பாகர், இமாம் ஜஃபர் போன்றவர்கள் தான் மதீனாவின் பள்ளியில் இருந்து தம்மை தேடிவந்தோருக்கு கற்பிக்கலாயினர். இன்னும் அவர்களிடமிருந்து தான் சட்டங்களை தெரிந்து கொண்டனர்.*

புருஃகாபியின் மொழிபெயர்ப்பு அஷ்ஷாபி, பக்கம்-8.

அதன்பின் இமாமைக்கொண்டு கிடைக்கப்பெற்ற விஷயங்களை இமாமவர்களுக்குப் பின்வந்தவர்கள் அதை வைத்து சட்டங்களை இயற்றி தொகுத்தனர். அவை மொத்தம் நான்கு நூல்களாகும். ஷியாஃக்களிடம் இந் நான்கு நூல்களும் ஹதீத், பிக்ஹ் போன்றவைகளுக்கு சமமாகக் காணப்படுகின்றன. அவையாவன,...

***1. அல்காஃபி*** – இது அபூஜஃபர் முஹம்மத் பின் யஃகூப் அல் கலீனி என்பவரால் தொகுக்கப்பட்டது. இவர் ஹிஜ்ரி 329ல் மறைந்தவர். இந்நூல் ஷியாஃக்களிடம் புனிதமிகு புகாரி ஷரீப் கிரந்தத்திற்கொப்பாக மதிக்கப்படுகின்றது. அத்துடன் இந்நூலாசிரியரை ஹுஜ்ஜத்துல் இஸ்லாம் என்பதாகவும் புகழ்ந்து பேசுகின்றனர்.

***2. மன்லா யஃப்ஹமுஹுல் (யஹ்ழுருஹுல்) ஃபிக்ஹிய்யா*** – இது முஹம்மத் பின் அலி இப்னில் ஹுஸைன் பின் மூசா பின் பாவீஹ் (பாவைஹ்) வல் கும்மி என்பவரால் தொகுக்கப்பட்டதாகும். இவர் ஹிஜ்ரி 381ம் ஆண்டு இறந்தவர். இவர் குராசான் சேதத்தினது இத்னா அஷரிய்யா (பனி

ரெண்டு இமாம்கள்) க்களில் ஒருவர். கலீனி இறந்து 52 வருடங்கள் பின் இறந்தவர். இவர் ரயீஸுல் முஹத்திஸீன் (ஹதீஸ் கலையின் தலைவர்) எனப் பாராட்டப்படுகின்றனர்.

**3-4. தஹ்தீபுல் அஹ்காம், அல் இஸ்திப்ஸார்** - இவ்விரண்டு நூலும் முஹம்மத் பின் அல்ஹஸன் அத்தூஸி என்பவரால் தொகுக்கப்பட்டதாகும். இவர் ஹிஜ்ரி 460ல் மறைந்தார். இவரை ஷெய்குத் தாயிஃபா என புகழ்கின்றனர்.

இந்நான்கு நூல்களும் ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹுவுக்குப் பின் முதல் நூல் 180 ஆண்டுகள் கழித்தும், இரண்டாவது நூல் 230 வருடங்களுக்குப் பின்னரும், மூன்றாம், நான்காம் நூல்கள் 310 ஆண்டுகள் கழித்தும் தொகுக்கப்பட்டன. இந்நான்கு நூல்களும் ஷியாஃக்களிடம் "ஸிஹாஹ் அர்பஆ" என்று வர்ணிக்கப் படுகின்றன.

அல் காஃபி எனும் நூலில் 16099, மன்லா யஃபஹு முஹுல் பகீஹில் 9044, கிதாபுத் தஹ்தீபில் 13035, அல இஸ் திப்ஸாரில் 5511 ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் கூறியதாக அவர்களின் வாக்குப் பதிவாகியுள்ளது.

அத்துடன் நாம் மேலே குறிப்பிட்ட அந்நான்கு நூல்களையும் ஷியாஃக்களிலுள் ஒவ்வொரு ஆலிமும் படித்துப் பார்த்து, தங்களின் பங்குக்கும் அவற்றில் கொஞ்சங் கொஞ்சமாக சேர்த்துக்கொண்டே வந்து, இறுதியாக கி.பி. 1091ம் ஆண்டில் இறந்துபோன "முல்லா முஹ்ஸின் அல் பைஸ் அல் காஷானி" என்பவரால் ஒன்றுதிரட்டப்பட்டது. இவ்வாறு திரட்டப்பட்ட அந்நூல் அவர்களிடையே ரகசியமாக நடைமுறைபடுத்தப்பட்டிருக்கலாமே அல்லாது எந்தவொரு இஸ்லாமிய ஆட்சியிலும் அது ஒரு மத்ஹபாக பிரகடனப்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மையாகும்.

மேலும் இந்நான்கு நூல்களும் தொகுக்கப்பட்ட வரலாற்றை இன்னும் நாம் தெளிவாக சொல்வதாயின்,



"அல காஃபி" அப்பாஸியாக்களில் இருபத்தொன்றாவது கலீபா அல் முத்தகீபில்லாஹ்வின் காலத்திலும், நான்காம் நூல் இருபத்தி ஆறாவது கலீபா அல் காயிம் பிஅம்ரில்லாஹ் என்பவரது காலத்திலும் தொகுக்கப்பட்டன. அதாவது ஐந்தாம் நூற்றாண்டின் இறுதியாண்டில் முழுமையாக்கப் பட்டது. இதன் கருத்து ஐந்தாம் நூற்றாண்டு என்பதல்ல. மாறாக பக்தாத் கையைவிட்டு பறிபோகும் வரை இந்த பிக்ஹ் நூல்கள் எங்குமே நடைமுறைபடுத்தப்பட்டிருக்கவில்லை.

இன்னும் அப்பாஸிய கலீபா முன்தஸிர்பில்லாஹ்வின் ஆட்சிக்காலம் ஹிஜ்ரி 659லிருந்து கலீபா முதவக்கில் அல்லாஹ் தாலிதியின் ஆட்சிக்காலம் ஹிஜ்ரி 923வரை மிஸ்ர் தேசத்தில் இந்த பிக்ஹ் ஜஃபரிய்யா என்னும் நூல் நடைமுறையில் இருக்கவில்லை. இதன்பின் துருக்கிய உஸ்மானியர்களது ஆட்சிக்காலமான முதல் கலீபா ஹிஜ்ரி 1288 முதல் 1924 வரை நீடித்திருந்தது. அதாவது உத்மான் கான் முதல் ஆரம்பித்த இவ்வாட்சி கமால் பாதுஷாவோடு முடிவுற்றது. இக்காலத்திலும் பிக்ஹ் ஜஃபரிய்யா இத்னா அஸ்அரிய்யா எனும் பெயரில் ஒரு மத்ஹபு இருந்ததில்லை.

அதுமட்டுமின்றி இந்திய நாட்டில் சுல்தான் மஹ்மூத் கஜ்னவியின் ஆட்சிக்காலம் 1193ம் ஆண்டு முதல் கடைசி மொகல் பாதுஷா ஆட்சிபுரிந்த காலத்திலும் கூட இந்த பிக்ஹ் நூல் அரச ரீதியாக அவர்களது ஆட்சியில் நடைமுறைபடுத்தப்பட்டது என்பதற்குரிய வெளிப்படையான ஆதாரமும் காணப்படவில்லை. இன்னும் கொஞ்சம் மிகைப் படுத்தி சொல்வதானால், ஆறாம் நூற்றாண்டிலேயே உலகின் பல நாடுகளிலும் இஸ்லாமிய ஆட்சி பரவியிருந்தது. அன்றைய காலக்கட்டத்தில் கூட இந்த "பிக்ஹ் ஜஃபரிய்யா"வை எவரும் ஆதரிந்ததாகவோ அல்லது அதனை இஸ்லாமிய சட்ட நிலைக்கு உயர்த்தி நடைமுறைபடுத்தியதாகவோ வரலாற்றின் எந்தப்பகுதியிலும் நம்மால் பார்க்க முடியவில்லை.

மேலும் இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் இந்நான்கு நூலாசிரியர்களுக்குமுரிய

இடைப்பட்ட காலம் மிக மிக நீண்டதாகவும், இந்நூலில் காணப்படும் தகவல் அறிவித்தோரது இஸ்னத் சரிவர இல்லாததாலும் இன்னும் அந்நூலில் பொய்யான, இட்டுக் கட்டான தகவல்களும் அதிகமாகக் காணப்பட்டதால் தான் இது நடைமுறைபடுத்தப்படுவதற்கு சாத்தியமில்லாது போய் விட்டதென்று சொல்லலாம். இருப்பினும் இதனை ஒரு மத்ஹபாக பிரகடனப்படுத்தியவர் "ஆயத்துல்லாஹ்" என்பதாக இவர்களால் புகழப்படும் ஈரானின் குமைனி சாஹிபாவார்.

இன்னும் அல் காஃபி, மன்லா யஃப்ஹமுஹுல் ஃபிக்ஹிய்யா, தஹ்தீபுல் அஹ்காம், அல் இஸ்திப்ஸார் ஆகிய இந்நான்கு நூல்களும் ஷியாஃக்களிடம் ஸிஹாஹ் அர்பஆ என்னும் அந்தஸ்த்தை கொண்டிருந்தாலும் அதில் பதியப் பட்டுள்ள ஹதீத்கள் ஸெய்யிதுனா இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் வாழ்ந்த சிலரால் அறிவிக்கப்பட்டவைகளாகும். அவர்களில் மிக மிக முக்கியமான மத்ஹபு ஜஃபரிய்யாவின் தூண்களென்று வர்ணிக்கப்படுகின்ற நான்கு நபர்களும் பின்வருமாறு:-

1. ஸராரா பின் அஃயுன்
2. அபூ பஸீர்
3. முஹம்மத் பின் முஸ்லிம்
4. புரைத் பின் முஆவியா அல் அஜ்ஸி

என்பவர்களாவர். இவர்களைக் குறித்து இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்ன கூறியுள்ளார்கள் என்பதை ஷியாஃக்களின் நூல்களைக் கொண்டே பார்ப்போம்.

هلك المتدلسون في اديانهم منهم زرارة
وبريد ومحمد بن مسلم واسماعيل الجعفى

***எவர்கள் தங்களின் மார்க்கத்தில் சந்தேகம் கொண்டார்களோ அவர்கள் நாசமாகி விட்டனர். அவர்களில் ஸராரா, புரைத், முஹம்மத் பின் முஸ்லிம், இஸ்மாயீல் அல் ஜுஃபி ஆகியோரும் அடங்குவர்.***

நூல் : தன்கீஹுல் மகால், 3-186,
ரிஜால் கிஷ்ஷி, பக்கம்-181.



இங்கே நாம் வாசகர்களின் விளக்கதிற்காக ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டினோம். மேலும் இவர்களைக் குறித்து அதிகமாக தெரிந்துகொள்ள விரும்பினால், ரிஜால் கிஷ்ஷி, பக்கம்-133, 134, 135, 154, 155, 169, 208லும், ஹக்குல் யகீன், பக்கம்-222லும், தன்கீஹுல் மகால், பாகம்-1, பக்கம்-166, 443லும், பாகம்-2, பக்கம்-46லும், பாகம்-3, பக்கம்-186லும் பார்க்க.

இன்னும் இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக்கொண்டு நல்ல விஷயங்களை அறிவித்திருக்க அறவே சாத்தியமில்லை என்பது புரிகிறது. ஏனெனில் பிக்ஹ் ஜஃபரிய்யாவில் காணப்படும் கருத்துக்கள் மற்ற நான்கு பிக்ஹ் சட்டக்கலை நூல்களுக்கும் பெரியோர்களது கருத்துக்களுக்கும், குர்ஆன் ஹதீதுக்கும் முரண்பட்டவை களாக இருப்பதற்குரிய காரணம், இந்நூலில் பதியப் பட்டுள்ள முனாபிக்கீன்களின் பொய்யான ஹதீத்களும் பேச்சுக்களும், தகவல்களுமே காரணமென்று சொல்ல லாம். இன்னும் இதில் காணப்படும் கருத்துக்கள் இமாமவர் களின் பெயரால் பொய்யாக புனையப்பட்ட இமாமவர் களால் சொல்லப்படாத கருத்துக்களாகும் என்பதை நாம் நன்குணர வேண்டும்.

மேலும் ஷியாஃக்களையும் அவர்களின் கருத்துக்களை யும் பிரிவினைகளையும் நாங்கள் பின்பற்றுபவர்களல்ல. மாறாக ஏனைய மத்ஹபுகளைப் போன்று ஜஃபரிய்யாவும் ஒரு மத்ஹபாக இருப்பதால் அதை தொடர்கிறோம் அல்லது பின்பற்றுகிறோமென்றும், அதிலுள்ளவாறு அமல் செய் வதையே விரும்புகிறோமென்று யார்தான் சொல்ல முடி யும்? இவ்வாறு கூறுவோர் ஒன்று அதன் வரலாற்றை சரியாக அறியாதவர்களாக இருக்க வேண்டும் அல்லது ஷியாஃக்களின் தகிய்யாவை கடைபிடித்து கூறுபவராக இருக்க வேண்டும்.

ஏனெனில் நமது முன்னோர்களிலுள்ள பலர் இமா மவர்களின் காலத்தில் வாழ்ந்தவர்கள். அத்துடன் அவர்

களிடம் பல்வேறு விஷயங்களையும் கற்றவர்கள். இன்னும் நமது எல்லா சில்சிலாக்களிலும் இமாமவர்கள் இணைந்துள்ளார்கள். இதற்காக இமாமவர்களின் பெயரால் பொய்யான தகவல்களைக் கொண்டு புனையப்பட்டுள்ள ஜஃபரிய்யா மத்ஹபை நாம் ஆதரிப்பவர்கள் என்பது அர்த்தமல்ல.

மேலும் பிக்ஹ் ஜஃபரிய்யா என்னும் இந்நூல் இமாமவர்களால் அல்லது அவர்களின் காலத்தில் அல்லது அவர்களைக்கொண்டு அவர்களிடம் கேட்டறிந்த விஷயங்களை வைத்து இஸ்லாமியப் பெரியோர்களால் தொகுக்கப்பட்டிருந்தால் கண்டிப்பாக அது பிரபலமான ஒன்றாகவும், நமது பெரியோர்களால் ஆதரிக்கப்பட்ட ஒன்றாகவும் இருந்திருக்கும். ஆனால் இமாம் ஷாஃபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்கள், நான்கு மத்ஹபுகளில் ஒன்றை பின்பற்றுங்கள். அதேநேரம் அதற்குமாறான அவையல்லாத எந்தவொரு மத்ஹபையும் நீங்கள் பின்பற்றாதீர்கள் என இஆனத்துத் தாலிபீன் எனும் நூலில் பக்கம்-25ல் கூறியிருப்பது இங்கே மிக மிக கவனிக்கத்தக்க ஒன்றாகும்.

இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தோர் மத்தியில் இரண்டு விஷயங்கள் மிக மிக முக்கியமாக்கப்பட்டிருந்தன. அதிலொன்று புகஹாயே முஹத்திதீன். மற்றொன்று முஹத்திதீனே புகஹாவாகும்.

முஹத்திதீனே புகஹாக்கள் எனப்படுவோர் ஹதீத்களை அறிவித்ததோடு முஜ்தஹிதீன்களாகவும் இருந்தமையால் மார்க்கச் சட்டங்களையும் முன்வைத்தனர். இதன் நிமித்தம் மக்களுக்கு தேவையான சட்டங்களை மக்கள் இவர்களிடமிருந்தே கேட்டு தெரிந்து வந்தனர். இதற்கு ஸெய்யிதுனா இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்களை உதாரணமாகக் காட்டுதல் மிகவும் பொருத்தமாயிருக்கும்.

புகஹாயே முஹத்திதீன்கள் எனப்படுவோர் பிக்ஹ் சட்டங்களை தொகுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள். இவர்கள் ஹதீத்களை மிக மிக அரிதாகவே அறிவித்தனர்.



இதற்கு ஸெய்யிதுனா இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்களை உதாரணமாகக் கொள்ளலாம்.

இனி நான்கு மத்ஹபுகளல்லாத மற்ற மத்ஹபுகளை மக்கள் பின்பற்றாமல் போனதன் காரணமானது, அந்த மத்ஹபுகளை தோற்றுவித்தோரது நூல்கள் தொகுக்கப்படாமல் போனதேயாகும். இனி இன்றைய முஜ்தஹிதீன்கள் பெயரளவில் தான் முஜ்தஹிதுகளே அன்றி விஷய விளக்கத்தில் அல்ல.

எனவே இமாம் ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்தில் வாழ்ந்த மேற்கூறப்பட்டோர் முனாபிக்கீன்களாக இருந்தமையால், இமாமவர்கள் அவர்களின் பெயரைக்கூறி லஃனத்தும் செய்துள்ளனர். இப்படிப்பட்ட வேஷதாரிகளின் தகவல்களைக் கொண்டு ஒருநூல் தொகுக்கப்படுமானால் (இந்நய வஞ்சகர்களது காலத்திலல்ல. இவர்களது மாணவர்களின் மாணவர்களும் மாண்டதற்குப்பின் தொகுக்கப்பட்ட இந்நூலை) யார்தான் தமது கொள்கை விளக்க நூலாக்குவர்? பிக்ஹ் ஜஃபரிய்யா நூலுக்கும் இமாமவர்களுக்கும் எத்தகைய தொடர்புமில்லை என்பது ஒருபுறமிருக்க இமாமவர்கள் சொன்னதாக, தகவல் தந்தார்களே! அவர்களுக்கும் இமாமவர்களுக்கும் எத்தகைய தொடர்புமில்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்தியாயம் மூன்று

# பிக்ஹ் ஜஃபரிய்யா!

முன்னுற் கூறப்பட்டு வந்த அந்நான்கு நபர்களின்றி வேறுசிலரும் இருப்பதாக, ஷியாஃக்களின் நூல்களான ''ரிஜால் கிஷ்ஷி''யின் பக்கம்-195, 196, 197, 253, 256, 257லும், ''தன்கீஹுல் பகால்'' பக்கம்-3:191,236, 259ஆம் பக்கங்களிலும் காணலாம். அத்தோடு பிக்ஹ் ஜஃபரிய்யா எனப் பெயரிட்டு ஷியாஃக்களில் காணப்படும் கொள்கை விளக்கக் கிரந்தங்களை ஏன் நம்பமுடியாது என்பதற்கான காரணத்தையும் பார்த்துச் செல்வோம்

*காரணம் ஒன்று :*

***1.** இமாம் ரிழா அவர்கள் தரும் தகவல் இது. எனது பாட்டனுர் ஸெய்யிதுனு ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹுவின் காலமுதல் எனது காலம்வரை ஷியாஃக் களின் அறிவிப்பாளர்கள் அவர்களது பெயரில் பொய் யான தக வலையே அறிவித்து வந்தனர்.*

***2.** அஹ்லெ பைத்தினர்களின் இமாம்கள் இப்பொய் யர்கள் மீது சூடான இரும்பினுல் வேதனை செய்யும் பிரார்த்தனை புரிந்துமுள்ளனர்.*

***3.** ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காலம் தொட்டு பெரியார்கள், இமாம்கள் போன்ருேரது காலத்திலும் அவர்கள் பெயரால் பொய்யான பேச்சுக் களை இடைசெருகல் செய்வோர் இருந்தே வந்துள்ளனர்.*

***4.** ஸெய்யிதுனு இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு*



*அன்ஹு அவர்களின் பெயரால் இட்டுக்கட்டப்பட்ட பொய்யான தகவல்களை ஷியாஃக்கள் தமது நூல்களில் பதிவு செய்துள்ளனர்.*

***5.** இமாம்கள், அஹ்லெ பைத்தினர் மீது வரம்பு கடந்த எல்லையற்ற வார்த்தைகளை உபயோகித்துள்ள னர். அவையனைத்தும் அவர்கள்மீது பொய்யாக புனைந் துரைக்கப்பட்டவைகளாகும்.*

***6.** அஹ்லெ பைத்தினர்களான எங்களின்மீது பழி சுமத்தும் ஷியாஃக்களின் சிரசுகளை துண்டிப்பவர் இமாம் மஹ்தியாகும்.*

*சிந்திக்க,...*

மேற்கண்ட விஷயங்களைக் கொண்டு இமாம்கள் மற்றும் அஹ்லெ பைத்தினர்களது பேச்சுக்களில் இடைசெருகல் செய்யும் பொய்யர்கள் காலங்காலமாக இருந்து வந்துள்ள னர் என்பதும், அதனுல் அவர்களது நூல்கள் நம்பத் தகுதி யற்றவை என்பதும், இத்தகைய நிலைகளை உள்ளடக்கியது தான் பிக்ஹ் ஜஃபரிய்யாவும், அகாயித் ஜஃபரிய்யாவும் என்பதும் புலனுவதால், இப்படிப்பட்ட பொய்யர்களின் புரட்டல்களை தமதாக்கிக் கொண்டிருக்கும் நூல்களை யார் தான் மத்ஹபாக - மார்க்கத்தின் விளக்கக் கருத்தாக எடுப் பார்? குமைனி ஸாஹிபும் இவர்களில் ஒருவரே.

## பிக்ஹ் ஜஃபரிய்யா நம்பத்தகாத ஒன்றென்பதற்குரிய இரண்டாவது காரணம்!

நூல் உஸூல் காஃபி பாகம்-2, பக்கம்-242. பிரிவு - கிதாபுல் ஈமான் வல் குப்ர், பாபு ஃபி கில்லத்தி வல் அததில் முஃமினீன் தெஹ்ரான் அச்சகம். இன்னும் உஸூல் காஃபி, பாகம்-2, பக்கம்-217. இதுபோன்றே நூல் ''இஜ்திஹாத் திப்ரீசி'' பாகம்-2, பக்கம்-250, கும் அச்சகம் மற்றும் நூல் ''ரிஜாஸ் கிஷ்ஷி'' பாகம்-213 போன்றவற்றை வாசிப்பதன் மூலம் நமக்கு தெரியவரும் இந்நூல்களின் சாராம்ச விஷயங்

கள் யாதெனில், அவைகளை இங்கே நாம் சுருக்கமாக விபரிப்பதைக்கொண்டு பிக்ஹ் ஜஃபரிய்யாவின் தரத்தை நீங்கள் எளிதாக புரிந்துகொள்ள ஏதுவாயிருக்கும் என்பதால் அவைகளை விபரிக்கிறோம்.

1. ஹழ்ரத் ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம், நாங்கள் லட்சக்கணக்கான எண்ணிக்கையில் இருக்கிறோமென ஷியாஃக்கள் கூறியபின் உண்மை நிலையை அவர்கள் எதிர்தரப்பாரிடம் ஏன் விளக்கவில்லை? இது ஒருபுறமிருக்க, ஹழ்ரத்தவர்கள்; லட்சக்கணக்கு என்கிறீர்களே! என்னை விரும்பும் ஷியாஃக்கள் எழுபது நபர்களாவது இருந்தால் கூட நான் செயலாற்றுவேன்! என்ன செய்வது? அந்த எண்ணிக்கைக்கூட இல்லையே எனப் பதிலுரைத்தனர் எனில், அதன் காரணம் ஹழ்ரத்தவர்களின் காலத்தில் அஹ்லெ பைத்தினரை நேசிக்கிறோமென உதட்டளவில் நாடகமாடிய நயவஞ்சகர்கள் தான் இவர்கள் என்பதை இமாமவர்களின் வாக்கியம் நமக்கு புலப்படுத்துகின்றதல்லவா!

2. இமாம் ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், உங்களில் மூன்றுபேராவது உண்மையான விசுவாசிகளாக இருப்பின் ஹதீத்களை மறைக்க மாட்டோமென அபூபஷீரிடம் எப்போது கூறினார்கள்? இந்நிலையில் மூன்றுபேர் கூட உண்மையான முஃமினாக இல்லையெனும்போது எழுபதுபேர் எங்கிருந்து வந்தனர்?

3. இமாமவர்களின் மற்றுமோர் தகவலானது, எனக்கு வழிப்படுகின்ற, எனது உத்தரவுகளை ஏற்கும் ஒரேயொருவர் ''அப்துல்லாஹ் பின் யஃபூர்'' மட்டுமே என்றனர்.

இந்நிலையில் பிக்ஹ் ஜஃபரிய்யாவில் காணப்படும் ஹதீத்கள், ஸெய்யிதுனா இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமிருந்து பெறப்பட்டவைகளாகும் எனில், இதில் இமாமவர்களை ஈமான்கொண்ட உண்மையான மூன்று விசுவாசிகள் கூட இல்லாத நிலையில்



இவ்வளவு எண்ணிக்கையுள்ள ஹதீத்களை இமாமவர்கள் யாரிடம் சொன்னார்கள்? தங்களின் பிக்ஹ் சட்டங்களையெல்லாம் எவரிடம் விளக்கினார்கள்? அவர்கள் கூறியதாக சொன்னவர் யார்?

மேலும் உண்மைநிலை யாதெனில் ஷியாஃக்கள், இமாமவர்கள் கூறியதாக அறிவித்தவர்களனைவருமே அவர்களால் சாபமிடப்பட்டவர்களாகும். அவர்கள் பெயரளவில் ஷியாஃக்களாக இருந்தனரேயன்றி எதார்த்தத்தில் அஹ்லெ பைத்தினருக்கும் இஸ்லாத்துக்கும் விரோதிகளாகவே இருந்தனர்.

இனி அஹ்லெ பைத்தினர் ஒவ்வொருவரும் அல்லாஹ்வின் கட்டளைகளை எத்திவைத்து, மார்க்கத்தை வழிநடத்துபவராகவே இருந்தனர். இவர்களில் ''காயிம் பின் அம்ரில்லாஹ்'' ''ஹாதி இலா தீனில்லாஹ்'' என வர்ணிக்கப்படுபவர் தான் இறுதியானவர். அவர் எங்கே எப்போது உதயமாவார் என்பது யாருக்கும் தெரியாது. அவர் இன்னும் வெளிப்படவில்லை. இன்னும் ஷியாஃக்களின் எண்ணிக்கை எப்போது 313க வருமோ அப்போதுதான் அவர் வெளிப்படுவார்.

மேலும் இமாம் ரழா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் காலத்திலும் இச்சம்பவம் (நூலின் தொகுப்பு) நிகழவில்லை. மாறாக ஷியாஃக்களின் கொள்கை விளக்கம் என்னும் நூலுக்கும் அஹ்லெ பைத்தினருக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. அத்துடன் அதில் காணப்படும் கருத்துக்கள் இமாம்களால் சாபமிடப்பட்ட பொய்யர்களான நயவஞ்சகர்களின் தகவல்களாகும்.

## பிக்ஹு ஜஃபரிய்யா நம்பத்தகாத ஒன்றென்பதற்குரிய மூன்றாம் காரணம்!

இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், மார்க்கத்தை வெளிப்படுத்தாது மறைக்கும்படி கட்டளையிட்டார்கள் என்றும், இனி அதனை வெளிப்படுத்துவோர்

கொல்லப்பட வேண்டியவர் என்றும் சொன்னதாக இந்த ஷியாக்கள் கூறுகின்றனர்.

சங்கைமிகு வாசகர்களே!

உஸுல் காஃபி நூல் பாகம்-2, பக்கம்-222,223,224ம், அஷ்ஷாஃபியின் மொழியாக்கமான உஸுல் காஃபி நூல் பாகம்-2, பக்கம்-245ம், ஜாமிவுல் அக்பார் நூல் பக்கம்-108 ஆகியவைகளை படித்துப் பார்க்கும்போது நமக்கு விளங்கும் விஷயங்களாவன பின்வருமாறு,...

இமாமவர்கள் தமது மார்க்க விஷயங்களை வெளிப் படுத்த வேண்டாம். மாறாக வெளிப்படுத்தாதிருப்பதே எனது கண்களை குளிர்ச்சியடைய செய்வதாகும். மீறி வெளிப்படுத்துவோர் நரகவாதிகளும், நயவஞ்சகர்களு மாவார் எனக் கூறுவதால்,...

இமாமவர்களின் மீது நேசம்கொண்டு தம்மை நரகி லிருந்து பாதுகாத்துக்கொள்ள எண்ணுவோர், இமாமவர்களை சந்தோஷப்படுத்த வேண்டுமென நினைப்போர் இமாமவர் களின் எந்தப்பேச்சையும் வெளியாக்காமல் மறைத்தல லவா இருக்க வேண்டும்! ஆனால் அதற்கு மாறாக "பிக்ஹ் ஜஃபரிய்யா" என்னும் நூல் இமாம் ஜஃபர் ஸாதிக் அவர் களுடையதும், அவர்களின் தந்தை இமாம் பாகர் ரலியல் லாஹு அன்ஹுமா ஆகியோரது பேச்சுக்களாகும், செயல் களாகுமென்று எவராவது சொன்னால் இவர்களைவிட மடையர் வேறு யாரிருப்பார்?

அடுத்து இமாமவர்கள் தமது பேச்சுக்களை அல்லது உபதேசங்களை சில காலம்வரை வெளிப்படுத்த வேண்டா மென தடுத்திருக்கலாம். அதன்பின்னர் அவற்றை வெளி யிட அனுமதித்து அவையே பின்னால் "பிக்ஹ் ஜஃபரிய்யா" எனப் பெயரிடப்பட்டு வெளியாயிருக்கும் என்பதாக சிலர் யோசிக்கலாம் அல்லது சிந்திக்கத் தூண்டப்படலாம்.

ஆனால் ஜாமிவுல் அக்பார் என்னும் நூலின் 23:108ன்



கூற்றுப்படி "தகிய்யா" என்பது கடைசி இமாம் வருவதற்கு முன்புவரை யார் நமது மார்க்கத்தை வெளிப்படுத்துவாரோ அவர் நம்மை சார்ந்தவரல்ல என்பதாக கூறப்பட்டிருப்பதால்,...

இன்றுவரை கடைசி இமாம் வெளிப்படவில்லையாதலால் அவர்களது சொல் மற்றும் செயல்களை அம்பலப்படுத்துவது கண்டிப்பாக கொலைக்குரிய குற்றமாகவும், அவர் நரகிற்குரிய வர் என்பதுமாகும். இப்படிப்பட்டவர்களால் வெளிப்படுத் தப்பட்ட நூல்தான் "பிக்ஹ் ஜஃபரிய்யா இமாமிய்யா இத்னு அஷ்அரிய்யா"வாகும். இவர்கள் இமாம்களின் பெயரால் சுமத்திய பொய்யையும், புரட்டல்களையும் உண்மையென ஊர்ஜிதப்படுத்த இவர்கள் கையாளும் தந்திரங்கள் ஒன்றிரண்டல்ல.

## பிக்ஹ் ஜஃபரிய்யா நம்பத்தகாத ஒன்றென்பதற்குரிய நான்காம் ஆதாரம்!

இதுவரை முன்னால் சொல்லப்பட்ட வாக்கியங்களில், ஷியாக்களின் நூல்களிலிருந்து எடுத்துக் காட்டப்பட்ட கருத்துக்களைக்கொண்டு, இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல் லாஹு அன்ஹு மற்றும் இமாம் பாகர் ரலியல்லாஹு அன்ஹு ஆகியோரது பெயர்களால் சொல்லப்பட்ட தகவல் களனைத்தும் ஆதாரமற்றவைகளாகும். அத்துடன் அவர் களிடம் அவ்வுத்தமர்கள் எதையும் சொல்லவுமில்லை. கேட்கச் செய்யவுமில்லை.

மேலும் அவர்களில் ஒரேயொருவர் தான் இமாமவர் களால் நம்பப்பட்டவரென வர்ணிக்கப்பட்டவர். ஆனால் அவரது தகவல்களிலும் முன் பின்னாக்கி இடைச்செருகல் களை சேர்த்து விட்டனராதலால், ஸெய்யிதுனா இமாமவர் கள்:- நாங்கள் சொன்னதாக சொல்லப்படும் பேச்சுக்கள் குர்ஆனுக்கும் நபியின் வழிமுறையான சுன்னத்துக்கும் முரண்பாடானதாக இருப்பின் அவற்றை ஒப்புக்கொள்ளா தீர்கள் என்றும் கூறியிருப்பது இங்கு கவனிக்க வேண்டிய ஒன்றாகும். பார்க்க : நூல் ரிஜால் கிஷ்ஷி, பக்கம்-195.

*சிந்திக்க!*

இனி மத்ஹபுகளை வகுத்தளித்த இமாம்கள் குர்ஆன், ஹதீத், இஜ்மாஃ, கியாஸ் போன்றவைகளை அடிப்படை ஆதாரங்களாகக் கொண்ட தீர்ப்புக்களை வழங்கினர். ஆனால் ஷியாஃக்களின் ''பிக்ஹ் ஜஃபரிய்யா'' என்னும் நூல் குர்ஆன் மற்றும் அஹ்லெ பைத்தினரின் உபதேசங்களை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்டிருப்பதால், ஷியாஃக் களின் இவ்விரு ஆதாரமும் நம்பத் தகுந்தவையல்ல. ஏனெனில் குர்ஆனுக்கும் ஸுன்னத்துக்கும் முரண்பட்ட கருத்துக்களை ஒப்புக் கொள்வதற்கு இமாமவர்கள் அனுமதி யளிக்கவில்லை அல்லவா!

இன்னும் உண்மையான குர்ஆனை கடைசி இமாமான மஹ்தி வரை காணமுடியாததாக இருப்பதால் இவர்கள் எந்தக் குர்ஆனிலிருந்து அவற்றுக்குரிய ஆதாரங்களை எடுத் தனர்? பின்னும் இமாமவர்களின் கூற்றுப்படி இமாமவர்கள் சொன்ன ஒன்றை வெளிப்படுத்துகின்றவர் நரகவாதியாக இருப்பதால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் யார்தான் சொல் வதற்கு முன்வருவார்?

எனவே ஷியாஃக்களிடம் இவைகளை பகிரங்கப்படுத்து கின்ற ஆயத்துல்லாஹ், முஜ்தஹித், ஹுஜ்ஜத்துல் இஸ் லாம் எனப் புகழப்படும் இவர்களனைவர் மீதும் அல்லாஹ் வின் சாபம் உண்டாகட்டும்.

அத்தியாயம் நான்கு

# ஷியாஃக்களும் அவர்களின் அகீதாவும்!

இத்தலைப்பில் பலபிரிவுகள் வருவதால் வாசிப்போருக்கு விளக்கிக் காட்டப்படும் விஷயம் சுருக்கமாகவும், உருக்க மாகவும், ஆதாரப்பூர்வமானதாகவும் இருக்க வேண்டுமென்ப தற்காக இயன்றவரை சுருக்கமாகவே விபரிக்கிறோம்.

## 1. ஷியாஃவும் குர்ஆனும்

அல்லாஹ்வின் அருள்மறையான திருக்குர்ஆன் இன்று நம்மிடையே காணப்படும் நூல்வடிவில் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காலத்தில் தொகுக்கப்படவில்லையென்றாலும் அதன் சூறுக்கள், வசனங்களின் வரிசைத்தொடர்கள் போன்றவை அண்ண லார் காலத்தில் தொகுக்கப்பட்டிருந்தவாறே அபூபக்ர் ரலி யல்லாஹு அன்ஹு அவர்களும் நூல் வடிவமாக்கினரே அன்றி அதில் அணுவளவு மாற்றம் கூட செய்யவில்லை என்பதே இஸ்லாமியக் கொள்கை. இதனை உறுதிப்படுத்த திர்மிதீ, அபூதாவூத், முஸ்னத் அஹ்மத் போன்ற ஹதீத் கிரந்தங்களில் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலி யல்லாஹு அன்ஹு அவர்களால் ரிவாயத்துச் செய்யப் பட்ட அறிவிப்பை மட்டும் வாசகர்களுக்கு ஆதாரமாக முன் வைத்து விஷயத்திற்கு வருகிறோம்.

قال عثمان رضى الله عنه كان رسول الله
صلى الله عليه وأله وسلم مما يأتي عليه الزما

وهو ينزل عليه السور ذوات العدد وكان اذا نزل عليه شيئ دعا بعض من كان يكتب فيقول ضعوا هؤلاء الآيات فىالسورة التي يذكر فيها كذا وكذا فاذا نزلت عليه الآية فيقول ضعوا هذه الآية فىالسورة التي يذكر فيها كذا وكذا.

*ஏந்தல்நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு சிலபோது பல சூருக்களில் இணைக்கப்பட வேண்டிய பல வசனங்கள் ஒரேநேரத்தில் இறங்குவதுண்டு. அப்போது எல்லாம் அண்ணலெம் பெருமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் வஹியை எழுதக்கூடிய தோழர்களை அழைக்கும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள். அதுபோது அத்தோழர்களிடம், இந்த சூருவில் இன்னின்ன வசனங்களையும் இந்த வசனங்களை இன்ன சூருவிலும் பதிந்து கொள்ளுங்களென கட்டளையிடுவார்கள் என்பதாக ஹழ்ரத் உஸ்மானுல் கனீ ரலியல்லாஹு அன்ஹு கூறினர்.*

*நூல் : மிஷ்காத், கிதாப் : பழ்லுல் குர்ஆன்.*

ஆதலால் இன்று நம்மிடையே காணப்படுகின்ற குர்ஆனில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்பதற்கு பல்வேறு ஆதாரங்கள் இருப்பினும் இவ்விடத்தில் மேற்கண்ட ஹதீதின் ஆதாரம் ஒன்றைமட்டும் போதுமாக்கிக் கொண்டு இப்போது ராஃபிழாக்களின் கருத்துக்கு செல்வோம்.

ராஃபிழாக்களிடம் மிகவும் நம்பத்தகுந்த நூலென்று கருதப்படும் "அன்வார் நுஃமானிய்யா நூலின்-2:360ல்,...

قال له عمر بن الخطاب لاحاجة بنا اليك ولا الى قرآنك عندنا قرآن كتبه عثمان فقال لهم علي عليه السلام لن تروه بعد هذاليوم ولايراه احد حتى يظهر ولدى المهدى عليه السلام.



*ஸெய்யிதுனா அலி ரலியவர்கள் தம்மால் ஒன்று சேர்க்கப்பட்ட குர்ஆனைக் காண்பிக்க தோழர்களை ஒன்றுசேர்த்த போது உமர் பின் கத்தாப் ரலியவர்கள் எங்களுக்கு உங்களது அவசியமோ உங்களால் ஒன்று திரட்டப்பட்ட குர்ஆனோ தேவையில்லை எங்களிடமும் குர்ஆன் உண்டென்றார். இதனைச் செவியுற்ற ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் தமது தோழர்களை விளித்து, இன்றைய தினத்திலிருந்து எனது மைந்தர் மஹ்தி வரும்வரை நீங்கள் குர்ஆனைக் காண மாட்டீர்களென்று கூறினர்.*

திருக்குர்ஆனின் மீதும் புனிதமிக்க அஹ்லெ பைத்தினர் மீதும் பழிசுமத்துவதற்கு இந்த ராஃபிழாக்கள் கொஞ்சமும் தயங்கவில்லை என்பதற்கு மேற்கண்ட வாக்கியமே சான்றாகும். இமாம்களின் பெயரால் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையையும் செய்தனர்.

அடுத்து ராஃபிழாக்களிடமுள்ள குர்ஆன்தான் உண்மையான குர்ஆன் என்பதற்கு அவர்கள் பல்வேறு ஆதாரங்களை இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு, இமாம் அலீ ரலியல்லாஹு அன்ஹு ஆகியோர் சொன்னதாக எடுத்துக் காட்டுகின்றனர். அவற்றை "உஸூல் காஃபி" நூல் - 2:632லும், "கிதாப் பஸ்லுல் குர்ஆன் (தெஹ்ரான்) அன்வார் நுஃமானிய்யா" நூல்-2:364லும், (திப்ரீஸ் அச்சகம்) "அன்வார் நுஃமானிய்யா" நூல்-பக்கம் 237லும், பழைய பிரதி "கிதாப் ரௌழா மினல் காஃபி" - 8:18லும், "குத்பத்துல் வஸீலா" போன்ற நூல்களிலும் காணலாம். இந்நூல்களில் காணப்படும் மிக முக்கியமான விஷயங்களை மட்டும் வாசகர்களின் பார்வைக்கு கீழே தருகிறோம். அவை வருமாறு,...

*1. ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்தான் குர்ஆனை முறைபடுத்தியவர்கள். இதில் நம்மிடையே காணப்படும் குர்ஆன் அம்முறைபடுத்த லுக்கு மாற்றமானதாகும்.*

***2. இமாம் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், தாம் ஒருங்கிணைத்த குர்ஆனை ஹழ்ரத் உமர் ரலியல் லாஹு அன்ஹுவிடம் காட்டியபோது அதனையவர் பொய்பித்து விட்டார். அதனுல் இமாம் மஹ்தியின் வருகைவரை அதனை மறைத்து விட்டனர்.***

***3. நமது குர்ஆன் திரிக்கப்பட்டதாகும்.***

***4. அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் வீட்டிலிருக்கும்போது இறங்கிய வசனங்களை அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களே ஒன்று திரட்டி னர். அவைகள் தற்போது நம்மிடையே காணப்படும் குர்ஆனிலிருந்து நீக்கப்பட்டு விட்டன.***

***5. அயிம்மாக் (இமாம்) கள் சம்பந்தமான வசனங் களும் நீக்கப்பட்டு விட்டன.***

இப்படிப்பட்ட படுமோசமான, தீயகொள்கைகளை கொண்டுள்ள இவர்கள் கண்ணியத்திற்குரிய அஹ்லெ பைத்தினரை நேசிப்பவர்களென எப்படிச்சொல்ல முடியும்? அந்தப் புண்ணியவான்களுக்கே புதைகுழி தோண்டிய வர்கள் தான் இவர்களென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இனி மேற்கண்ட கொள்கைகள் தாம் ஷியாஃக்களின் ஏகோபித்த கொள்கை என்னும் நிலையில் திடீரென தற்போதுள்ள குர்ஆனில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லையாதலால் ''நாம் எல்லோரும் ஒன்றே'' என்னுமோர் புதிய கருத்தை அறிவித்தார் குமைனி. அதே நேரம் அவர் தமது ஆட்சியில், அல்லது தாம் எழுதிய நூலில் நம்மிடையே யுள்ள குர்ஆன் திரிக்கப்பட்ட ஒன்றென்பதாக கூறப்படும் கருத்துக்களையோ, அல்லது உலமாக்களையோ சைக்கினை யாகக்கூட மறுக்கவில்லை. அதற்கு மாறாக அவர்களின் கருத்துக்களை தமது நூல்களில் ஆதாரப்படுத்தி அவை உண்மை தானென்றும் நிரூபிக்க முயன்றுள்ளார். இதுதான் குமைனி யின் அரசியல் தந்திரமாகும்.



## 2. ஷியாக்களும், ஹதீத்களும்

நமது புனித இஸ்லாமிய ஷரீஅத்தின் அடித்தளமாக விளங்கும் ''திருக்குர்ஆன்'' ராஃபிழாக்களான கலீனி முதல் குமைனி வரையுள்ள அனைவருமே ''திரிக்கப்பட்ட ஒன்றென'' நம்பும் கொள்கை கொண்டோர் என்பதை இதுவரை கண்டோம்.

**''திடனுக குர்ஆனை நாமே இறக்கினேும். இன்னும் அதனை நாமே பாதுகாப்போம்''** என்பதாக அல்லாஹ்வால் வாக்களிக்கப்பட்ட குர்ஆனையே நம்பாதவர்களாக இவர்கள் இருக்கும்போது நபிமொழி கிரந்தங்கள் சம்பந்தமாக இவர்கள் எப்படிப்பட்ட கொள்கையை கொண்டிருப்பர் என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். இருப்பினும் அவர்களிடையே காணப்படும் ஹதீதின் வகைகள் பற்றி சிறிது விளக்குகிறேும்.

### *1. ஸஹீஹான ஹதீத்*

இந்தவகை ஹதீதை பாவமே செய்யாத, அதாவது மஃஸூமக (அப்பாவிக) ளில் ஒருவர் சொன்னதாகும். அத்துடன் இவ்வகை ஹதீதை அறிவிப்பவர் அனைவரும் உண்மையான ஷியாஃக்களாக இருப்பர்.

### *2. ஹதீதே ஹஸன்*

இவ்வகை ஹதீத்கள் இமாம்கள் வரை சென்றடையும் ஒன்ருக இருக்கும். இதனை அறிவிக்கும் அறிவிப்பாளர் பனிரெண்டு இமாம்களையும் பின்பற்றுபவர்களில் ஒருவராக இருப்பதோடு, அந்த இமாம்களால் புகழப்பட்டவராகவும் இருக்க வேண்டும். இதில் அவர் நீதமானவரா என்பது ஷர்த்தல்ல.

### *3. ஹதீதே ஃகவீ*

இவ்வகை ஹதீதை அறிவிப்பவர் பனிரெண்டு இமாம் களையும் பின்பற்றுகிறவராக இருப்பார். இனி இவர் இமாம் களால் புகழப்பட்டவரா? அல்லது இகழப்பட்டவரா? என்பதற்கு ஆதாரம் எதுவுமிருக்காது.

**4. ஹதீதே முவத்தக்**

இவ்வகை ஹதீத்கள் இமாம்கள்வரை சென்றடையும் ஒன்ருக இருக்கும். ஆனுல் இதனை அறிவிப்பவர் ஷியாஃ அல்லாத ஏனைய தீய கொள்கைகொண்ட நம்பிக்கையான ஒருவராயிருப்பார்.

**5. ஹதீதே ழயீஃப்**

மேற்கூறப்பட்ட நிபந்தனைகள் எதுவுமே இல்லாத ஒரு வகை ஹதீதுக்கு இப்பெயர் வழங்கப்படுகிறது.

## 3. ஷியாஃக்களும், ரிஸாலத்தும்

ராஃபிழாக்களிலுள் ஒரு பிரிவாரிடம் நபியாகவும், ரஸூலாகவும் இருக்க தகுதியானவர் ஹழ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மட்டுமேயாகும். இப்பிரிவினர் வஹீ கொண்டுவந்த ஜிப்ரீல் தவறிழைத்து விட்டார் என்று கூறுகின்றனர்.

اوّل کسے کہ بہ اُو بیعت کند محمّد باشد

**அடுத்து இமாம் மஹ்தீ சூரிய வெளிச்சத்தில் ஆடை அற்றவராக உதயமானதும் அமீருல் முஃமினீன் மீண்டும் வந்துவிட்டதாக அறிவிப்பார். அவர் வந்ததும் முதன் முதல் அவரது கரம்பற்றி பைஅத்துச் செய்பவர் நவூது பில்லாஹ், அஸ்தஃபிருல்லாஹ் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்கள்** என்பதாக முல்லா பாகர் மஜ்லிசி என்பவர் கூறுகிறுர்.

நூல் : ஹக்குல் யகீன் - 2:347.

از ضروریاتِ مذہب ماست کہ کسے بمقاماتِ معنوی ائمہ (ع) نمی رسد، حتی ملکِ مقرب و نبی مرسل۔

**எமது இமாம்களின் அந்தஸ்த்தை முர்ஸலான நபியோ அல்லது முகர்ரபான வானவரோ எவராலும் கூட அடைய முடியாது.**

நூல் : விலாயத் பிக்ஹிய்யா, பக்கம்-58.



இவ்விரு கருத்துக்களும் நமது சுன்னத் வல் ஜமாஅத்தின் சகோதரர்களாலும் கூட இமாமென அழைக்கப்படும் குமைனி சாஹிபின் நச்சுக் கருத்துக்களாகும்.

## 4. ஷியாஃக்களும் நபித்தோழர்களும்

ராஃபிழிகள், அஹ்லெ பைத்தினரை நாங்கள் நேசிப்பவர்கள் என்னும் முகமூடியை மாட்டிக்கொண்டு அந்நல்லோர்கள் கூறியதாக தங்களின் நூல்களில் குறிப்பிட்டுள்ளவைகளை இதுவரை பார்த்த நீங்கள், இப்போது மற்ற நபித்தோழர்கள் மீதும் எப்படிப்பட்ட அபவாதங்களை அள்ளி வீசுகின்றனர் என்பதையும் பாருங்கள்.

ஷியாஃக்களில் முதலிடம் வகிக்கும் முஹத்தித் (ஹதீத்களை வல்லுனர்) முல்லா முஹம்மத் பின் யஃகூப் அல் கலீனி என்பவர், ஸெய்யிதுனு இமாம் பாகர் தெரிவித்ததாக தெரிவிப்பதாவது,...

كان الناس اهل ردة بعد النبي صلى الله عليه وآله وسلم إلا ثلثة فقلت ومن الثلثة؟ فقال المقداد بن الاسود، وابو ذرالغفارى، وسلمان الفارسى رحمةالله وبركاته عليهم

**அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் மிக்தாத் பின் அஸ்வத், அபூதர் அல் கிஃபாரி, ஸல்மான் பார்ஸி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோரைத் தவிரவுள்ள மற்றவர்களனைவரும் முர்தத்து (மதம் மாறியவர்) களாகும்.** நவூதுபில்லாஹ்.

நூல் : அர்ரௌளா மினல் காஃபி - 8:245.

இதன்பின் ஸெய்யிதுனு ஸித்தீகுல் அக்பர் மற்றும் ஸெய்யிதுனு உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹுமாவைக் குறித்து,...

وان الشيخين فارقاالدنيا ولم يتوبا ولم يتذكرا
ماصنعا بأمير المؤمنين عليه السلام فعليهما
لعنة الله والملئكة والناس اجمعين

*இவ்விருவரும் தௌபா செய்யாமலேயே இவ்வுலகை விட்டும் பிரிந்து விட்டனர். அவ்விருவரும் ஹழ்ரத் அலீ ரலியல்லாஹு அன்ஹுவுக்கு செய்ததை நினைத்துக் கூட பார்க்கவில்லை. ஆதலால் அவ்விருவர் மீதும் அல்லாஹ் அவனது மலக்குகள் மற்றும் அனைவரின் லஃனத்து (சாபமும்) உண்டாவதாக. அஸ்தஃக்ஃபிருல் லாஹ்.* நூல் : அர்ரௌழா மினல் காஃபி - 8:246.

இந்த முல்லா பாகர் மஜ்லிசி என்பவன் ஹழ்ரத் உம்முல் முஃமினீன் ஸெய்யிதுனா ஆயிஷா மற்றும் ஸெய்யிதுனா ஹஃப்ஸா ரலியல்லாஹு அன்ஹுமாவின் விஷயத்திலும் மிகக்கொடிய வார்த்தைகளை பிரயோகித்துள்ளான்.

நூல் : ஹயாத்துல் குலூப் - 2:608.

پس آن دوملعون و دوملعونہ بایک دگر اتفاق کردند کہ آنجناب (صلی
اللہ علیہ وسلم) رابہ زہر شہید کنند

இன்னும் இந்த கொடியவன் *''மேற்கண்ட இரு கலீபாக்களும், இரு பெண்மணிகளும் சேர்ந்து நபியவர்களை கொலை செய்ய திட்டம் தீட்டியவர்கள்''* என்பதாக இதே நூலில் - 2:610ல் எழுதியுள்ளான்.

کتاب ہائے فارسی راکہ مرحوم مجلسی برائے مردم پارسی زبان نوشتہ،
نخوانید! تا خود را ابتلا بیک ہجور رسوائے بے خدانہ نکنید

*ஈமானை வேரோடும் வேரடி மண்ணோடும் மண்ணுக்கும் இப்படிப்பட்ட விஷக்கருத்தை கக்கிய முல்லா பாகர் மஜ்லிசியின் நூல்கள் வாசிக்கப்பட வேண்டியவை, நம்பிக்கைக்குரியவை என அனைவரையும்*



*ஊக்கப்படுத்துகிறார் இஸ்லாமிய புரட்சியாளர் எனும் ஈரானின் முன்னாள் தளபதி குமைனி ஸாஹிப்.*

நூல் : கஷ்புல் அஸ்ரார், பக்கம்-121.

எனவே இந்த ஷியாஃக்களுடைய நூல்களில் கூறப்பட்டுள்ளவை எல்லாமே வெறும் பொய்யும், புரட்டல்களும், பித்தலாட்டங்களும் தானென்பதில் ஒரு சிறிதும் ஐயமேயில்லை. இன்னும் அண்ணலாரின் அருமை தோழர்கள், இவர்கள் சொல்வதைப்போல, கூறியிருக்க அறவே சாத்தியமில்லை என்பதையெல்லாம் நமது மார்க்கத்தின் முன்னோர்களான பெரியோர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அதனை பார்க்க விரும்பினால் ''அஸ்ஸவாயிகுல் முஹ்ரிகா'' என்னும் நூலை பார்வையிடுக. இதனை முஹத்தித் அஹ்மத் பின் ஹஜர் அல் ஹைதமீ அல் மக்கீ என்பார் எழுதியுள்ளனர். ராஃபிழிகள் விஷயத்தில் தெளிவானதொரு நிலையினை பெற்றிட இந்நூல் ஒரு கலங்கரை விளக்கமாகும்.

## 5. ஷியாக்களும் இமாமத்தும்

ஷியாஃக்களில் பல்வேறு பிரிவுகள் இருப்பதால் அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான கொள்கையையும், எண்ணங்களையும் கொண்டவையாகத் தோற்றமளிக்கின்றன. இருப்பினும் இமாமத் சம்பந்தமான விஷயத்தில் எல்லாப் பிரிவுகளுமே சமநிலை கொண்டவைகளாகத்தான் காட்சி தருகின்றன.

மேலும் இவர்களில் பல பிரிவினர் இருப்பதால் ஒரு பிரிவார் தமக்குப் பிடிக்காத இன்னொரு பிரிவினரை வெறுப்பதும், உதாசீனப்படுத்துவதும் இவர்களிடையே சகஜம். இவ்வாறு இமாமத் விஷயத்தில் ஒருங்கிணைந்த இவர்கள் பல பிரிவினரை காபிர்களென ஒதுக்கியுமுள்ளனர். இவர்கள் கொள்கை ரீதியில் எத்தனை பிரிவுகளாக பிரிந்து நின்றாலும் இவர்களனைவரும் ''இப்னு சபா'' என்னும் மரத்தின் கிளைகள் தான் என்பதை திரும்பத் திரும்ப உங்களுக்கு நினைவூட்டுகிறோம். பின்னும் இவர்களுக்கு இதன் தாத்பரியம் புரியாமல்

போனதாலோ என்னவோ, அல்லது இவர்களிடையே கட்டாயக் கடமையாக்கப்பட்ட ''தகிய்யாவை'' (நயவஞ்சகத் தன்மையை) கையாண்டதாலோ என்னவோ இப்பிரச்னை -யை இவர்கள் சாதாரணமான ஒன்றென எண்ணுகின்றனர். இவ்வாறு எண்ணுவதால் விளைவு மிகவும் விபரீதமாகி விடுமென்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏனெனில் இமாம் யார் என்பதை தெரிந்திருப்பது ஷியாஃக்களிடம் கட்டாயமான கடமைகளில் ஒன்றாகும். இதற்கு குர்ஆனிலும் ஆதாரம் இருக்க வேண்டுமல்லவா! ஆம். அவசியம் இருந்தாக வேண்டும். அவ்வாறாயின் இவைகளை உண்மைபடுத்தும்போது நமக்கு மத்தியிலுள்ள திருக்குர்ஆனை பொய்யாக்க வேண்டிய நிர்பந்தமும் ஏற்படும் என்பதால்தான் ஷியாஃக்கள் இமாமத் சம்பந்தமான விஷயத்தில் இறக்கப்பட்ட வசனங்களை ஷைகாகிய ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பரும், ஸெய்யிதுனா உமர் பாரூக்கும் ரலியல்லாஹு அன்ஹுமா மறைத்து விட்டனரென்று கூறி அவ்விருவரையும் காபிரென்றும், முர்தத்தென்றும் முடிவெடுத்தனர்.

இப்படிப்பட்ட கொள்கையுடையோரின் மத்ஹபை ''இத்னா அஷ்அரிய்யா'' என்று சொல்லப்படுகிறது. இனி இக்கொள்கைகளில் சிலவற்றை அவர்களது நூல்களைக் கொண்டு பார்ப்போம்.

இமாம் - கலீபா யார் என்பதை அறிவதும் அதை நம்புவதும் ஈமானில் நின்றும் உள்ளதாகும் என்னும் தலைப்பில்,...

***அல்லாஹ்வையும், ரஸூலையும், இமாம்களையும், அவன் காலத்திய இமாமையும் அறியாதவன் முஃமினாக மாட்டான் என இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு கூறினர்.*** நூல் : உஸூல் காஃபி, பக்கம்-105.

***அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப்பின் இமாமாக ஸெய்யிதுனா அலீ கர்ர***



***மல்லாஹு வஜ்ஹஹு அவர்களுக்குப்பின் இமாமாக ஸெய்யிதுனா ஹஸனும் பின்னர் ஹுஸைனும் அவர்களைத் தொடர்ந்து அலீ பின் அல் ஹுஸைனும் பின்னர் முஹம்மத் பின் அலீயும் ரலியல்லாஹு அன்ஹும் இமாம்களாகும். இதனை மறுப்பவன் அல்லாஹ் ரஸூலையே மறுப்பவனாகும்.*** நூல்: உஸூல் காஃபி, பக்கம்-106.

***இமாம் என்பவர் அதாவது இமாமத்தானது நபிமார்களுடைய நுபுவ்வத்தைவிட மேலானதாகும் என்பதாக அல்லாமா பாகர் மஜ்லீசி தமது ''ஹயாத்துல் குலூப்'' என்னும் நூல் - 3:10ல் குறிப்பிட்டுள்ளார்.***

இப்படி ஒவ்வொன்றாக வரிசைப்படுத்திக்கொண்டே போகலாம். இன்னும் இத்தகைய துர்நாற்றமெடுத்த அழுகிய கொள்கையுடைய இவர்களை நமக்குச் சமமாக நாம் எப்படிக் கருத முடியும்? ஆகவே இமாமத் மற்றும் கிலாபத்துக்குரிய பிரச்னையில் நமக்கு மத்தியில் கருத்து வேற்றுமை என்பது எதுவுமேயில்லையென அறிக்கை விடுத்த குமைனியின் கருத்துக்கு ஒத்துப்போய் ஷியாஃக்களும் வஹ்ஹாபிகளை எதிர்ப்பவர்கள் தான். அஹ்லெ பைத்தினர் மீது அன்புடையோர் தானாகையால், அவர்களை நாம் ஆதரிக்கலாமென்று நமது உலமாக்களும் கூறத் துணிகின்றனரென்றால் இதைப்பற்றி நாம் என்னவென்று சொல்வது?

இங்கே ஒன்றை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். அது; நாம் வெறுமனே எவரையும் சட்டென்று எதிர்ப்பவர்களல்ல. ஒவ்வொரு பிரிவாரின் கொள்கைகளையும் குர்ஆன், ஹதீஸ் மற்றும் மார்க்கத்தின் முன்னோடிகளது கூற்றுக்கள் ஆகியவற்றின் வெளிச்சத்தைக்கொண்டு, உண்மை எதுவென்பதை விளக்கிக்காட்டுவது தான் நமது நோக்கமாகும். இதன் வாயிலாக அவர்களும் உண்மை என்ன என்பதை உணர்ந்துகொள்ள முடியுமல்லவா! கொஞ்சம் யோசியுங்கள். நாம் எதிர்க்கின்ற ஒரு கூட்டத்தை நம்மை எதிர்ப்பவர்களில் ஒருவரும் எதிர்க்கின்றார் என்பதற்காக, அவர் தவறான பாதையில் இருக்கிறார் என்பது தெரிந்து

அவரையும் நாம் எதிர்த்தால், இதனை தவறென்று எப்படிச் சொல்லமுடியும்? அவ்வாறின்றி நாம் எதிர்ப்பவரை நம்மை எதிர்ப்பவரும் எதிர்க்கிருர் என்பதற்காக அவரது தவறை நாம் மறைத்து ஆதரிக்க வேண்டுமென சொல்வீர்களா? இது அறிவுடைமையல்ல. இனி குமைனி அரசியல் லாபத்திற் காக நாடகமாடினரே அன்றி, அவ்வாறில்லையெனில், அவர் கலீனியின் கருத்துக்களை படிக்கத் தூண்டுவாரா? சிந்தியுங்கள்.

## 6. அஹ்லுஸ் ஸுன்னு உலமாக்களும் அஹ்லெ பைத்தினர்களும்

ஹழ்ரத் ஸெய்யிதுனு அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அன்னவரையும் ஏனைய பரிசுத்தவான்களான அஹ்லெ பைத்தினரையும் நேசித்தல் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களை நேசிப்பதாகும். இவ்வாறே அவர்களை எதிர்ப்பவன் நபியவர்களை எதிர்ப்பவனுவான். இன்னுரது புகழை, கீர்த்தியை குறிப்பிட்ட இன்ன நூலில் தான் காணமுடியும் என்பதல்ல. எல்லா நூல்களிலுமே காணலாம். இதில் ஷியாஃக்கள் எனப்படுவோர் அஹ்லெ பைத்தினரை அன்பு கொள்பவர்களும் அல்ல. நேசிப்பவர் களும் அல்ல. விரும்புகின்றவர்களும் அல்ல.

## 7. ஷியாஃக்களின் பார்வையில் அஹ்லுஸ் ஸுன்னு!

இமாம்கள் கூறியதாக அவர்கள்மீது இட்டுக்கட்டி பொய்களை தோழர்களின்மீது புனைந்துரைத்து பழிசுமத்திய ஷியாஃக்கள், தோழர்களனைவரையும் கண்ணியப்படுத்தி நேசிக்கும் கூட்டத்தாரைப் பற்றி விமர்சிக்கும் விதத்தை கொஞ்சம் பாருங்கள்,...

عن عبدالله بن سنان عن ابى عبدالله عليه السلام قال سأله ابى وانا اسمع عن نكـــاح اليهودية والنصرانية فقال نكاحهما احب اليّ من



نكاح الناصبية وما احب للرجل المسلم ان يتزوج اليهودية ولاالنصرانية مخافة ان يتهود ولده او يتنصر.

**அப்துல்லாஹ் பின் சினன் என்பவர் ஹழ்ரத் ஸெய்யிதுனு இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு வைக் கொண்டு கிடைத்ததாக தெரிவிப்பது என்ன வென்ருல், எனது தந்தை இமாமவர்களிடம் யூத, கிறிஸ்தவர்களின் பெண்களை திருமணம் செய்வது சம்பந்தமாக வினவியபோது (நான் அப்போது அங்கே அமர்ந்திருந்தேன்) இமாமவர்கள்; அவ்விரு கூட்டத் தாரின் பெண்களை திருமணம் செய்வது "நாஸிபிய் யா"க்களின் (சுன்னத் வல் ஜமாஅத்தினரின்) பெண்களை திருமணம் செய்வதைவிட மேலானதாகும். இருப்பினும் நான் அதனை விரும்ப மாட்டேனென கூறினர்.**

நூல் : ஃபுருஃவு காஃபி - 5:351,
கிதாபுன் நிகாஹ், தெஹ்ரான் பதிப்பகம்)

عن ابى عبدالله ان نوحا ادخل فى السفينة الكلب والخنزير ولم يدخل فيها ولدالزنا والناصب اشدّ من ولد الزنا

**ஹழ்ரத் நூஹ் நபி அலைஹிஸ்ஸலாமவர்கள் தமது கப்பலில் நாய், பன்றி போன்றவைகளை எல்லாம் ஏற்றிக் கொண்டு பயணம் செய்தனர். ஆனுல் விபச்சாரத்தில் பிறந்த ஹராமிகளை மட்டும் ஏற்றவில்லை. இதில் இந்த சுன்னத் வல் ஜமாஅத்தினர் ஹராமிகளைவிட மிகக் கெட்டவர்கள்.** நூல் : ஜாமிவுல் அக்பார், பக்கம்-158.
நஜப் அஷ்ரஃப் பதிப்பகம்

عن فضيل بن يسار عن ابى جعفر عليه السلام قال ذكر الناصب فقال لاتناكحهم ولاتأكل ذبيحتهم ولاتسكن معهم

**சுன்னத் வல் ஜமாஅத்தினரது பெண்களை மண முடிக்காதீர்கள். இன்னும் அவர்கள் அறுத்ததை புசிக் காதீர்கள். இன்னும் அவர்களோடு சேர்ந்து வசிக்காதீர் கள்.** நூல் : அல் இஸ்திப்ஸார் - **3:184** தெஹ்ரான் அச்சகம், தஹ்தீபுல் அஹ்காம் - **7:303** தெஹ்ரான் அச்சகம்.

இதுவரை மேலே எடுத்துக் காட்டப்பட்ட ஆதாரங் களில் ''நாஸிப்'', ''நாஸிபிய்யா'' என்றுதானே குறிப்பிடப் படுகின்றது. இது சுன்னத் வல் ஜமாஅத்தை குறிக்கின்ற வாக்கியமென எவ்வாறு சொல்ல முடியுமென கேட்கப்பட் டால் அவ்வாக்கியம் சுன்னத் வல் ஜமாஅத்தினராகிய நம்மைத்தான் குறிப்பிடுகிறது என்பதை ராஃபிழிகளின் நூல்களான அன்வார் நுமானிய்யா - **2:307**யும், ஹக்குல் யகீன் - **2:516**ம் பக்கத்தையும் அருள்கூர்ந்து எடுத்துப் பார்க்க வேண்டுகிறோம்.

எனவே இப்படிப்பட்ட கேடுகெட்ட சுபாவம் கொண்ட ராஃபிழிகளோடு நம்மவர்கள் தொடர்பு வைத்திருப்பதை கண்டு உண்மையாகவே நாம் நாணத்தால் கூனிக் குறுகிப் போகிறோம். இன்னும் நாயகத்தின் தோழர்களை இழிவு படுத்துகின்ற, நம்மவர்களை மிகக்கேவலமாக எண்ணுகின்ற இவர்களைத்தான் அஹ்லெ பைத்தினரை நேசிப்போர் என் கின்றனர் சுயநலம் கொண்ட சில உலமாக்கள்.

## 8. ஷியாஃக்களும் நமது உலமாக்களும்

இதுவரை வாசகர்களாகிய உங்கள்முன் எடுத்துக் காட்டப்பட்ட விஷயங்களை மிகவும் ஆழ்ந்த சிந்தனையோடு படித்திட்ட நீங்கள் இப்போது உங்களின் உணர்வு ரீதியாக எப்படிப்பட்ட வார்த்தைகளையெல்லாம் கோர்த்து அவர் களுக்கு பொன்னுடையாக போடலாமென சிந்தித்துக் கொண்டிருப்பீர்கள். இதனையே தான் நமது இமாம்களும் செய்தனர். இருப்பினும் நமது பெரியோர்களது வழக்கம் என்னவெனில், தம்மை இழித்துரைக்கும் கெட்ட சுபாவம் உடையோரைப் பார்த்து, தாமும் பதிலுக்கு இழித்துரைப்ப தில்லை.



இவ்விஷயத்தில் ஹழ்ரத் கௌதுத் தகலைன், மஹ்பூபே சுப்ஹானி ஸெய்யித் அப்துல் காதிர் ஜீலானி அல் ஹஸனி வல் ஹுசைனி அவர்களை நாம் முன்மாதிரியாகக் கொள்ள லாம். அதாவது அவர்கள், ஷியாஃக்களின் கொள்கைகளை யூதர்களின் கொள்கையோடு ஒப்புவமைபடுத்துவதை பாருங்கள். அவர்கள் கூறுகின்றனர்,...

فقد شبّهت مذاهب الرّوافض باليهوديّة قال
الشعبيّ محبة الروافض محبة اليهود وقالت اليهود
لاتصلح الامامة إلاّلرجل من آل داؤد، وقالت
الرافضة لاتصلح الإمامة إلأ لرجل من ولد عليّ ابن
ابي طالب،وقالت اليهود لاجهاد في سبيل الله حتّى
يخرج المسيح الدّجّال وينزل عيسى بسبب من
السماء، وقالت الرّافضة لاجهاد في سبيل الله حتّى
يخرج المهديّ وينادي مناد مّن السماء، وتؤخر
اليهود صلاة المغرب حتّى تشتبك النجوم، وكذالك
الروافض يؤخّرونها، واليهود تزول عن القبلة شيئ
وكذالك الرّافضة، واليهود تنود فىالصلوة وكذالك
الرّافضة، واليهود تسدل اثوابها فىالصلوة وكذالك
الرّوافض، واليهود تستحلّ دم كلّ مسلم وكذالك
الرّوافض، واليهود لاترى على النساء عدّة وكذالك
الرّافضة، واليهود لاترى فىالطلاق الثّلاث شي
وكذالك الرّافضة، واليهود حرّفت التّوراة وكذالك
الرّافضة حرّفوا القرآن لانهم قالوا القرآن غيّر وبدّل
وخولف بين نظمه وترتيبه واحيل عمّا انزل علي

وقرئ على وجوه غير ثابتة عن الرّسول وانّه قد
نقص منه وزيد فيه واليهود يبغضون جبرئيل عليه
السلام ويقولون هو عدوّنا من الملئكة وكذالك
صنف مّن الرّوافض يقولون غلط جبرئيل عليه
السلام بالوحي الى محمّد صلّى اللّه عليه وسلّم
وانّما بعث الى عليّ كذّبوا تبّا لهم الى آخر الدّهر.

ஷியாஃக்களின் மத்ஹப் யூதர்களின் மத்ஹபுக்கு ஒப்பான ஒன்றாகும். இன்னும் ஹழ்ரத் ஷஃபி அவர்கள், ராஃபிழிகளை நேசிப்பது யூதர்களை நேசிப்பது போலாகும் என்கின்றனர். இனி ராஃபிழிகளுக்கும் யூதர்களுக்குமிடையே உள்ள ஒற்றுமையின் ஒப்புநோக்கலை பாருங்கள்.

யூதர்கள் : தாவூதின் குடும்பத்தாரை தவிர வேறு யாரும் இமாமாக இருக்க தகுதியில்லை.

ராஃபிழிகள் : இமாம் அலியின் குடும்பத்தாரை தவிர வேறு யாரும் இமாமாக இருக்க தகுதியில்லை.

யூதர்கள் : மஸீஹ் தஜ்ஜாலும், வானத்திலிருந்து நபி ஈஸாவும் இறங்கும்வரை ஜிஹாத் என்பதில்லை.

ராஃபிழிகள் : இமாம் மஹ்தி வெளிப்பட்டு இவர்தான் மஹ்தி என அல்லாஹ்வைக் கொண்டு தெரிவிக்கப்படும் வரை ஜிஹாத் என்பதில்லை.

யூதர்கள் : இவர்கள் மஃரிப் வணக்கத்தை நட்சத்திரங்கள் ஒன்றோடொன்று பின்னிக் கொள்ளும் வரை பிற்படுத்துவர்.

ராஃபிழிகள் : இவர்களும் மஃரிப் வணக்கத்தை பிற்படுத்துவோரேயாகும்.



யூதர்கள் : கிப்லாவின் திசையைவிட்டு சற்று விலகியே வணங்குவர். ஷியாஃக்களும் இப்படித்தான். யூதர்கள் வணங்கும்போது ஆடி அசைந்து வணங்குவர். ஷியாஃக்களும் இப்படித்தான் வணங்குகின்றனர். யூதர்கள் ஆடைகளை தொங்கவிட்டு வணங்குவதைப் போலவே ஷியாஃக்களும் வணங்குகின்றனர். யூதர்கள் முஸ்லிம்களது ரத்தத்தை ஹலால் எனக்கருதுவது போலவே ராஃபிழிகள் சுன்னத் வல் ஜமாஅத்தினரின் ரத்தத்தை ஹலாலென எண்ணுகின்றனர். யூதர்கள் பெண்களின் "இத்தா" காலத்தை கணக்கில் கொள்ளாதது போன்றே இவர்களும் கணக்கில் கொள்வதில்லை. யூதர்கள் முத்தலாக்கை மதிக்காதது போலவே ஷியாஃக்களும் மதிப்பதில்லை. யூதர்கள் தௌராத்தில் இடைசெருகல் செய்ததைப்போலவே இவர்கள் குர்ஆனில் செய்துள்ளனர். யூதர்கள் ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்களை தமது எதிரியாக கணித்திருப்பதைப் போன்று ஷியாஃக்களிலுள்ள ஒரு பிரிவார் ஜிப்ரீலவர்கள் ஹழ்ரத் அலீயவர்களுக்கு வழங்க வேண்டிய வஹியை தவருக இன்னொருவருக்கு வழங்கி விட்டாரென கூறுகின்றனர். இவர்கள் நாசமாகட்டும். அழிந்து போகட்டும்.

நூல் : குன்யத்துத் தாலிபீன், பக்கம்-147.

இதே கருத்தை "அகாயித் வத்தலாதி வஸ்ஸப்ஈன ...பிர்கா" நூல் - 1:450லும், "நாமே வ நஸப்" நூல் பக்கம் - ...61லும், "ஷரஹ் உஸூல் இஃதிகாதி அஹ்லிஸ் ஸுன்னு" ...ல், பக்கம்-1461லும், "மின்ஹாஜுஸ் ஸுன்னு" நூல் - ...24,27லும் பார்க்கலாம். இன்னும்,...

وفضلت اليهود والنصارى بخصلتين
سئلت اليهود : من خير اهل ملتكم ؟ قالوا
اصحاب موسى. وسئلت النصارى : من خير اه
ملتكم ؟ قالوا : حوارى عيسى وسئلت الرافضة

من شر اهل ملتكم ؟ قالوا : اصحاب محمد صلى الله عليه وآله وسلم

**யூதர்களிடத்தில் உங்களில் சிறந்த கூட்டம் எது வெனக் கேட்கும்போது, மூஸா நபியவர்களின் தோழர்கள் என்றனர். இதே கேள்வியை கிறிஸ்தவர்களிடம் கேட்கப்பட்டபோது, ஈஸா நபியவர்களின் தோழர்கள் என்றனர். இதனையடுத்து ராஃபிழிகளிடம், உங்களது மார்க்கத்தில் மிகவும் கொடியவர்கள் யாரெனக் கேட்கப்பட்ட போது, ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோழர்கள் என்றனர். அவர்களை தௌபா செய்ய ஏவுங்கள்.** நூல் : மின்ஹாஜுஸ் ஸுன்னா - 1:27, ஷரஹ் உஸூல் இஃதிகாத், பக்கம்-1462. அகாயித் அத்தலாதி வஸ்ஸபான்-1:451. அஸ்ஸவாயிகுல் முஹ்ரிகா, பக்கம்-252.

قال رسول الله صلى الله عليه وآله وسلم ألا أدلك على عمل اذا عملته كنت من اهل الجنة ، انه سيكون بعدنا قوم يقال لهم رافضة فان ادركتموهم فاقتلوهم فانهم مشركون.

**ஸெய்யிதுனா அலி ரழியவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மொழிந்ததாகத் தெரிவிப்பதாவது, சுவர்க்கத்தில் நுழைப்பிக்கும் ஒரு செயலை உமக்குத் தெரிவிக்கட்டுமா! எமக்குப் பின்னால் ராஃபிழா என்றொரு பிரிவினர் உருவாகுவர். அவர்களைக் கண்டால் கொலை செய்வதே அச்செயலாகும். நிச்சயமாக அவர்கள் முஷ்ரிக்கீன்களாகும்.** ''ஷரஹ் உஸூல் இஃதிகாத்'' பக்கம்-1454.

எனவே இந்த ஷியாஃக்கள் யாரென்பது புரிந்திருக்கும் எனக் கருதுகின்றோம்.



## முத்ஆ

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் வருகைக்கு முன் வாழ்ந்த மக்களில் சிலர் முந்தைய நபிமார்களது வேதங்களை படித்தறிந்திருந்தும் தங்களின் சுயநலத்திற்காக பல தடுக்கப்பட்ட விஷயங்களையெல்லாம் ஹலாலென்று எண்ணி செய்துவந்தனர். இதுபோன்ற ஒன்றுதான் இந்த ''முத்ஆ'' என்பதுமாகும். துவக்க காலத்தில் நடைமுறைபடுத்தப்பட்டு வந்த இச்செயல் பின்னர் யுகமுடிவு நாள்வரை ஹராமாக்கப்பட்டு விட்ட ஓர் விஷயமாகும். ஆனால் ஷியாஃக்கள் இவ்விஷயத்தில் கொண்டுள்ள நம்பிக்கையை இப்போது அவர்களின் நூல்களைக் கொண்டே அவதானிப்போம்.

''மன்ஹஜுஸ் ஸாதிகீன்'' என்னும் நூல் - 2:480,481, 482 ஆகிய பகுதிகளில் எழுதப்பட்டுள்ள விஷயங்களின் சுருக்கம் பின்வருமாறு,...

**1. மூன்று முறை முத்ஆ செய்பவன் மீது நரகம் ஹராம்.**

**2. மூன்றுமுறை முத்ஆ செய்பவன் கண்டிப்பாக சுவனத்தில் நுழைவதோடு நாதர் நபியவர்களையும் தரிசிப்பான்.**

**3. ஒருமுறை முத்ஆ செய்தால் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுவின் பதவியையும், இருமுறை செய்தால் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹுவின் பதவியையும், மூன்று முறை செய்தால் ஹைதர் ரலியல்லாஹு அன்ஹுவின் பதவியையும், நான்குமுறை செய்தால் (அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக) ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் பதவியையும் அடைவான்.**

**4. முத்ஆ செய்யாதவன் இறுதிநாளில் மூக்கு, காது வெட்டப்பட்டவனாக காட்சியளிப்பான்.**

5. ரஸுலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மற்ற நபிமார்களைவிட கண்ணியத்திற்குரியவர்களாதலால், இறைவன் அவர்களுக்கு இந்த முத்ஆவை கண்ணியமான ஒரு ஹதியாவாக வழங்கியுள்ளான்.

6. முத்ஆ செய்து குளிக்கும்போது அதிலிருந்து விழும் ஒவ்வொரு துளி நீரிலிருந்தும் ஒரு வானவர் பிறந்து யுக முடிவுநாள் வரை திக்ரும், தஸ்பீஹும் செய்கிறார். அதற்குரிய நன்மைகளனைத்தும் முத்ஆ செய்தவருக்கு வழங்கப்படும்.

7. முத்ஆ செய்தவர் ஒருமுறை முத்தமிட்டால் அவர் ஒரு ஹஜ் மற்றும் உம்ரா செய்ததற்குரிய நன்மையைப் பெறுகிறார்.

8. ஆறும் எண்ணில் கூறப்பட்ட விஷயத்தை மறுப்பவன் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களையும், அலீ ரலியல்லாஹு அன்ஹுவையும் ஈமான்கொண்ட ஷியாஃ அல்ல.

9. முத்ஆ மார்க்கத்தின் ஒரு பகுதியாகும். அதனை மறுப்பவர் மார்க்கத்தை விட்டும் வெளியேறிவராவார்.

10. முத்ஆவில் பிறக்கும் குழந்தை நிகாஹில் பிறக்கும் குழந்தையை விட கண்ணியமானதாகும். இதனை பொய்யாக்குபவர் மதம்மாறிய காபிர்களாகும்.

11. முத்ஆ செய்யப்படும் பெண்ணுக்கு வழங்கப்படுகிற ஒரு திர்ஹம் அல்லாஹ்வின் பாதையில் ஆயிரம் திர்ஹம் செலவு செய்வதைவிட மேலானதாகும்.

13. சுவனத்திலுள்ள சில ஹுருல்ஈன்கள் இவர்களுக்கு மட்டுமே சொந்தமானவர்கள்.

''துஹ்பத்துல் அவாம்'' - பக்கம் 303, ''அல் இஸ்திப்ஸார்''-3:148, ''புருஃவு காஃபி''-5:451, ''கிதாபுன் நிகாஹ்'' பாடம்-இன்னஹுன்ன பி மன்ஸிலத்தில் இமாயி வலைஸ மினல் அர்பஈஇ, புதிய பிரதி, ''தஹ்தீபுல் அஹ்காம்''-7:253, ''தஃப்ஸீல் அஹ்காம் அந்நிகாஹ் மன்லா யஃப்ஹமுஹுல் பிக்ஷிய்யா''-3:294, ''பாபுல் முத்ஆ, புருஃவு காஃபி''-5:460, ''கிதாபுன் நிகாஹ்'' பாபுர்ரஜுலி யுத்தமத்தவு மிராரன் கதீரா, ''புருஃவு காஃபி''-5:455, பாடம்-ஷுருத்தில் முத்ஆ, ''தஹ்தீபுல் அஹ்காம்''-7:271, 261, ''தஃப்ஸீல் அஹ்காம்'', அந்நிகாஹ் போன்ற நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களையும் பாருங்கள்.



1. முத்ஆ திருமணத்திற்கு சாட்சியோ அல்லது அதனை பிரகடனப்படுத்த வேண்டிய அவசியமோ எதுவும் தேவையில்லை.

2. முத்ஆ திருமணம் செய்துகொண்டபின் அதனை முறிப்பதற்கு தலாக்கோ, அப்பெண் இத்தா இருக்க வேண்டிய அவசியமோ எதுவும் தேவையில்லை.

3. ஒருவர் ஒரேநேரத்தில் எழுபது பெண்களுடனும் முத்ஆ செய்யலாம்.

4. இதேபோன்று ஒரு பெண் ஆயிரம் ஆண்களுடனும் முத்ஆ செய்யலாம்.

5. மணம் செய்துகொள்ள விலக்கப்பட் (ஹராமாக்கப்பட்) டுள்ள பெண்களையும், பரிசுத்தமான பெண்களையும் முத்ஆ செய்யலாம்.

6. ஒரு பெண்ணுடன் முத்ஆ செய்தவன் அவளது தங்கையுடனும் முத்ஆ செய்யலாம்.

7. ஒரு அல்லது (பிடி) கோதுமை மாவுக்கு பகரமாகவும் முத்ஆ செய்யலாம்.

முத்ஆ என்பது சாட்சி, ஈஜால் கபூல் (மணமக்களின்

ஒப்புதல்) மஹர் போன்றவை எதுவுமேயில்லாமல் ஒரு ஆண் மற்றொரு பெண்ணுடன் ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து, சில நாட்களுக்கு அல்லது சில மணித்துளிகள் வரை உறவு வைத்துக்கொள்வதற்கு முத்ஆ என்று சொல்லப்படுகிறது. இதில் நிர்ணயிக்கப்பட்ட காலம் அல்லது நேரம் முடிந்துவிட்டால் முத்ஆ தானகவே முறிந்து விடும். இதற்கு தலாக் அவசியமில்லை. தனது குடும்பத்திலுள்ள பெண்களுடனும் இம்முறையை பயன்படுத்தலாம். ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த முத்ஆவை ஹராமான ஒன்றென தீர்ப்பளித்திருக்காவிட்டால் விபச்சாரத்திலிருந்து யார்தான் தப்பிக்க முடியும்? என்பதாக ஷியாஃக்கள் தங்களின் நூல்களில் குறிக்கின்றனர். அதாவது முத்ஆ என்னும் பெயரில் ஒரு விபச்சாரம் அரங்கேற்றமாகிறது என்பதுதான் உண்மை.

இனி இந்த முத்ஆ அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் காலத்தில் குறிப்பிட்ட சில காரணங்களுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தது. அதன்பின் அது இறுதிநாள் வரைக்கும் ஹராமான ஒன்றென மாற்றப்பட்டு விட்டது. இன்னும் அல்லாஹ் தனது மாமறையில்,...

மேலும் இந்த முத்ஆ அல்லாஹ்வைக்கொண்டோ அல்லது அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைக் கொண்டோ ஹராமாக்கப்படவில்லை என்றாலும் (இரண்டிலும் ஹராமென தெளிவாக்கப்பட்டுள்ளது) ஸெய்யிதுனா உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அதனை ஹராமென்று மிம்பரின் மீதிருந்து உத்தரவிட்டதும், மீறி செய்வோருக்கு கடுமையான தண்டனை வழங்கப்படுமென பிரகடனப்படுத்தியதும் ஷியாக்களின் நூல்களிலேயே குறிக்கப்பட்டுள்ளதே! இது ஆதாரமில்லையா? உண்மை விசுவாசிகளுக்கு கலீபா அவர்களின் வாக்கியமொன்றே ஆதாரம் என்பதற்கு போதுமானது. ஆனால் இந்த ஷியாஃக்கள் இந்த ஈனச்செயலுக்கு தரும் ஆதாரத்தை கவனியுங்கள்.



عن ابى عبدالله عليه السلام قال : سألته عن المتعة فقال : اني لأكره للرجل المسلم ان يخرج عن الدّنيا وقد بقيت عليه خلة من خلال رسول الله صلّى الله عليه وسلّم

***முத்ஆவைக் குறித்து ஹழ்ரத் இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் வினவப்பட்ட போது, அதற்கவர்கள்; ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் அச்செயலின் – தன்மையை புரியாது இறந்து போவதை விரும்பவில்லையென கூறியதாக சொன்னர்கள்*** என்பதாக ஷியாஃக்கள் தங்களின் நூலான "வஷாயில் ஷியாஃ"-14:442 பாடம்-இஸ்திஹ்யாபில் முத்ஆ வமாயன்பகீ கஸ்துஹு பிஹாவிலும், "மன்லா யஹ்ழுருஹுல் பிக்ஹிய்யா"-3:295 பாபுல் முத்ஆவிலும் குறித்து வைத்துள்ளனர். ஆனல் இது ஒருபெரும் கட்டுக்கதையாகும்.

# தகிய்யா!
## இருதரப்பு உலமாக்களின் தீர்க்கமான முடிவு

**அஹ்லுஸ் ஸுன்னு :**

உயிருக்கே ஆபத்து என்னும் நிலையில் அல்லது மிக மிக தர்மசங்கடமான அத்தியாவசியமான சந்தர்ப்பங்களின் போது இஸ்லாம் ஹராமென்று தீர்ப்பளித்துள்ள சில காரியங்களை செய்து கொள்ளலாமென்று ஷரீஅத் அனுமதிக்கின்றது. ஏனெனில் உயிரைக் காத்துக்கொள்ளல் அதைவிட அவசியமாகும். இல்லையேல் அவர் குற்றவாளியாகி விடுவார். இன்னும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களின்போது சத்தியத்தை மறைத்து அசத்தியத்தையும், உண்மைக்கு மாறாக பொய் சொல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் அவனது உள்ளம் உண்மையை உண்மையென மெய்ப்பித்துக் கொண்டிருக்க வேண்டும். இவ்வாறே அல்லாஹ்வையும், ரஸூலையும் பொய்யாக்குமாறு ஒருவன் தூண்டப்பட்டு அதற்காக அவன்மீது செய்யப்படும் சித்ர வதையை சகித்தவண்ணம் அவன் உயிர் நீப்பானாகில் ஷஹீத் என்பதாக அவன் புகழப்படுவான். உள்ளத்தில் ஈமான் கொண்ட நிலையில் நாவால் அதை மறுக்கவும்கூட அனுமதிக்கப்பட்டுள்ளது. இது பாமரர்களுக்கேயன்றி நபி மார்களுக்கு அல்ல.

தாகத்தின் கடுமையால் உயிர்போகும் நிலையிலுள்ள ஒருவன் ஹராமான உணவாக இருந்தாலும் தேவைக்கேற்ப பயன்படுத்துவதை "இழ்திமாரி" என்பதாகக் கூறப்படுகிறது.

**ஷியாஃ :**

இவர்கள் "இழ்திமாரி" என்னும் சொல்லுக்குப் பகரமாக "தகிய்யா" என்னும் சொல்லை பயன்படுத்துகின்றனர். தன்தேவை நிறைவேற எந்த நிலையிலும் பொய் சொல்லலாம் என்பதும், அத்துடன் இது அவர்களிடம் வாஜிபும் கூட. இதற்கு தர்மசங்கடம் என்பதெல்லாம் எதுவும் ஷர்த் தல்ல. தேவையுமில்லை.



இன்னும் இதனை நபிமார்கள் உட்பட எல்லோருமே கையாளலாம். இதனை உன்னதமான அமல்களில் ஒன்றாக கணிக்கின்றனர். இதனை மறுப்பவர் முர்தத், காபிர் என்பது இவர்களின் தீர்ப்பாகும். இது இமாம் மஹ்தியவர்களின் வருகைவரை செல்லத்தக்க ஒன்றாகும். இதனை செயல் படுத்தாதவர் ஷியாஃ அல்ல.

ஹழ்ரத் இப்ராஹீம் நபி அலைஹிஸ்ஸலாமவர்களை காபிர்கள் தங்களின் வணக்க முறையினை கொண்டிருந்த பண்டிகையான திருவிழாவுக்கு அழைத்தபோது, நபியவர்கள்; அதிலிருந்து தப்புவதற்காக நான் நோயாளி என்பதாக பொய் கூறினர். இச்சம்பவத்தின் சூழ்நிலையில் நபியவர்களுக்கு தர்மசங்கடமோ, தூண்டுதலோ அல்லது உயிருக்கும் உடமைக்கும் எவ்வித ஆபத்தோ இல்லாத சாதாரண ஒருநிலையில் பொய் சொன்னார்களென்று கூறி இச்சம்பவத்தை தங்களின் கூற்றுக்கு ஆதாரப்படுத்துகின்றனர்.

## தகிய்யா - தௌரிய்யா

தகிய்யா என்பது ஷியாஃக்களின் நடைமுறையிலுள்ள ஒன்றாகும். இது தெளிவான பொய்யும், ஷரீஅத்திற்கு மாற்றமானதுமாகும்.

ஆனால் தௌரிய்யா என்பது இதற்கு நேர்மாறானது. அதாவது ஒன்றுக்கு மேற்பட்ட அர்த்தங்களைக்கொண்ட ஒரு வாக்கியத்தை கேட்பவரது நிலைமைக்கேற்றவாறு தாம் அந்த அர்த்தத்தை நாடாது உபயோகிப்பதற்கு தௌரிய்யா என்று சொல்லப்படும். இது அனுமதிக்கப்பட்டதாகும். இதில் பொய்க்கு இடமில்லை.

அடுத்து நாங்கள் சொன்னதாக சொல்லப்படும் விஷயங்கள் குர்ஆன் ஹதீதுக்கு மாறுபட்டதாகவும், தெளிவான ஆதாரமற்றதாகவும் இருப்பின் அதை எடுக்க வேண்டாமென செய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களால் எச்சரிக்கப்பட்ட அறிவிப்பை நினைவில் கொண்டு கீழேவரும் விஷயங்களை படியுங்கள்.

## நபிமார்கள் பொய் (தகிய்யா) உரைத்தனர்!

1. ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தமது வாழ்க்கை துணைவியோடு பயணம் செய்து ஒரு நகரத்தை அடையவே, அந்நகரின் அரசன் கொடியவனாக இருந்தான். அவன் நபியவர்களிடம் அவர்களது துணைவியாரைக் காட்டி, யாரிவர்? என்றுகேட்க, நபியவர்கள் சகோதரி எனப் பதிலளித்தது உண்மை. இதனை நமது உலமாக்களும் தமது கிரந்தங்களில் குறித்து வைத்துள்ளனர்.

இந்த நிகழ்ச்சியின் மூலம் அத்தியாவசியமான இக்கட்டான சந்தர்ப்பங்களில் பொய் சொல்லலாமென்று இருப்பினும், இது பாமரர்களுக்கு மட்டுமே உரிய ஒன்று. நபிமார்களுக்கு அல்ல என்று கூறும் சுன்னத் வல் ஜமாஅத்தினரின் தீர்ப்பு தவறாகும். ஏனெனில் நபிமார்களில் ஒருவரான ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களே தகிய்யாவின் மூலம் பொய் சொல்லியிருக்கிறார்களே? என்று ஷியாஃக்கள் கேட்கின்றனர்.

### கேள்விக்குரிய பதில் :

ஷியாஃக்கள் தங்களுக்கு அவசியமான காரியங்களில் மட்டும் தகிய்யாவை தமக்குச் சாதகமாக்கி ஆதாரப்படுத்துவது வழக்கம். அப்படித்தான் மேற்கண்ட நபியவர்களின் சம்பவத்தையும் தமக்கு சாதகமாக்கி ஆதாரப்படுத்த முயலுகின்றனர்.

ஆனால் மேற்கண்ட நபியவர்களின் நிகழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ள நூல்களில் "அல் பிதாயா வன் நிஹாயா" - 1:150, "ஹிஜ்ரத்துல் கலீலி இலா அஷ்ஷாம்" (பெய்ரூத் ரியாழ் பதிப்பகம்) போன்ற நூல்களை பார்ப்போமாயின், அதில் நபியவர்கள் பொய் சொல்லவுமில்லை. அவ்வாறு சொன்னதற்கு ஆதாரமும் இல்லையென்று கூறப்பட்டுள்ளது.

ஏனெனில் சகோதரி என்று சொன்னது தகிய்யா-பொய் பேச வேண்டுமென்னும் நோக்கத்தில் சொல்லப்பட்டதல்ல. மாறாக தௌரிய்யாவின் அடிப்படையில்தான் அவ்வாறு கூறினர். இன்னும் "உக்துன்" என்பது உடன்பிறந்த, பால்குடி முறையிலுள்ள, மார்க்க நம்பிக்கையுடைய இணைப்பின் உள்ள சகோதரி என்னும் பல அர்த்தங்களை கொண்ட வாக்கியமாகும். அந்த அடிப்படையில்தான் சகோதரி என்றனர். ஆனால் அரசன் உடன்பிறந்தவள் என்னும் அர்த்தத்தை எடுத்துக்கொண்டான். ஏனெனில் உக்துன் என்னும் பதம் உடன்பிறந்தவள் என்னும் அர்த்தத்தையும் கொண்டிருப்பதினாலே.



மேலும் ஷியாஃக்களின் நூலான "உஸூல் காஃபி" - 2:217,218ம் பக்கத்தில் ஈமானும் குப்ரும் என்னும் பிரிவில் "தகிய்யாவின் பாடம்" என்னும் தலைப்பின்கீழ் ஹழ்ரத் நபி யூஸுப், ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிமஸ்ஸலாமும், கஹ்ஃபு - குகைவாசிகளும் தகிய்யாவின் நோக்கத்தில் பொய் பேசினர் என்பதாக ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்களென்பதாக ஓர் அறிவிப்பு காணப்படுகின்றது.

ஆனால் நபிமார்களனைவரும் மஃஸூம்கள் என்பது இஸ்லாமியக் கொள்கை என்பதால் அவர்கள் பாவம் செய்தனர் எனக்கூறுதல், அவர்களை இழிவுபடுத்துவதாகும். இன்னும் பொய் சொல்லுதல் என்பது பெரும்பாவமாதலால் இதனைச்செய்பவர் மஃஸூமாக (குற்றம் புரிய சாத்தியமற்றவராக) எவ்வாறு இருக்க முடியும்?

இனி ஷியாஃக்களின் கொள்கையில் புனிதமிக்க அஹ்லெ பைத்தினர்களும் மஃஸூம்களாகும். இந்நிலையில் மஃஸூமான ஒருவர் வேறொருவர் பொய் சொன்னதாக எப்படிச்சொல்ல முடியும்? அதுவும் அல்லாஹ்வின் நபி, ரஸூல் சொன்னதாக சொல்வது வீணாக பழிசுமத்துவதாகும். பின்னும் வீண்பழி சுமத்துபவர் மஃஸூமாக எப்படி இருக்க முடியும்?

## தகிய்யாவின் மகிமை

*1. ''தகிய்யா'' தெளிவான பொய்யுரைத்தல் எங்களின் அடையாளமாகும். இதுவே எங்களின் எதிரிகளான சுன்னிகளுக்கும் எங்களுக்குமிடையே உள்ள வித்தியாசமுமாகும். கூறுபவர் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு* நூல்: ஜாமிவுல் அக்பார், பக்கம்-108 நஜப் அஷ்ரப் பதிப்பகம். ஆதார் ஹைதரி தர்ஜுமா இமாம் ஹஸன் அஸ்கரி, பக்கம்-287 இமாமியா நூலகம், லாஹூர்.

*2. இறுதிநாளில் தகிய்யா செய்யாத குற்றத்தையும், தன் சகோதரனின் உரிமைகளை விரயம் செய்யும் குற்றத்தையும் தவிர மற்றவைகளனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும். தகவல் : ஹழ்ரத் ஸைனுல் ஆபிதீன் – அலீ பின் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹுமா.*

நூல் : ஜாமிவுல் அக்பார், பக்கம்-108.

*3. எங்களது இமாம்கள் மற்றும் பெரியோர்களின் உயர்நிலையில் தகிய்யா – பொய்யுரைப்பது மேலான ஒன்றாகும். இமாம் முஹம்மத் பாகர் ரலியல்லாஹு அன்ஹு.*

நூல் : ஜாமிவுல் அக்பார், பக்கம்-108.

*4. தகிய்யாவானது ஸகாத், ஹஜ், தர்மம் போன்ற எல்லாவற்றையும் விட மிக உன்னதமான ஒன்றாகும்.*

*5. தகிய்யாவின் எண்ணத்தில் ஸுன்னிகளோடு முதல் வரிசையில் நின்று தொழுதால் அவர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின்னால் முதல் வரிசையில் நின்று தொழுதவனைப் போலாவான். தகவல் : ஸெய்யிதினா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு.*

நூல் : மன்லா யஹ்கமுஹுல் பிக்ஹிய்யா - 1:127. ஃபிஇயாமில் ஜாமிஆ, லக்னோ பதிப்பகம் - பழைய பிரதி 1:250, பாபு ஃபில் ஜமாஅத்தி வஃபழ்லிஹா புதிய பிரதி தெஹ்ரான் பதிப்பகம்.

*6. ''இன்ன அக்ரமகும் இன்தல்லாஹி அத்காகும்'' என்னும் இறைவசனத்திற்கு ஸெய்யிதுனா ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் விளக்கம் என்னவென்று வினவப்பட்டபோது, அதிகமதிகம்*



*தகிய்யா– பொய்யுரைத்தல் என்றனர்.*

நூல் : இஃதிகாதாத் ஸதூக் ஃபி பஹ்தித் தகிய்யா வ தர்ஜுமா பார்ஸி, பக்கம்-133.

*7. தகிய்யாவை செயல்படுத்தாதவன் எங்களைச் சார்ந்தவனல்ல. தகவல் : ஸெய்யிதுனா ஜஃபர் சாதிக் ரலியல்லாஹு அன்ஹு.*

நூல் : அமாலி ஷெய்க் தூஸி - 1:299,
கும் பதிப்பகம், புதிய பிரதி.

மேலும் ஷியாஃக்கள் காரணமின்றி எந்நேரமும் தகிய்யாவை (பொய்யுரைப்பது) செயல்படுத்துவதும் கூட அவர்களிடம் வாஜிபாகும். இன்னும் தகிய்யா என்பது நயவஞ்சகத் தன்மையின் நிலையில் செயல்படுத்தப்படும் சுத்தமான பகிரங்கப்பொய் என்பதை இவர்களின் நூல்களான உஸூல் காஃபி-1:65 கிதாபு பஸ்ல் பாபுல் இல்மி, தெஹ்ரான் பதிப்பகம், புதிய பிரதியிலும், புரூஃவு காஃபி-6:208 கிதாபுஸ் ஸைத் பாபுஸைதில் பஸாவன் ஸூகூர் தெஹ்ரான் பதிப்பகம், புதிய பிரதியிலும், கிதாபுர் ரௌழா, பக்கம்-102, நொலக்ஷூர் பதிப்பகம், பழைய பிரதியிலும், ரிஜால் கிஷ்ஷி, பக்கம்-294. கர்பலா பதிப்பகம் என்பதிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது வாருங்கள். ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்கள் மூன்று கலீபாக்களிடமும் பைஅத்துச் செய்ததோடு, அவர்களோடு உடன்பட்டு அவர்கள் நடத்திய ஆலோசனை கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். இன்னும் அவர்கள் மீது அளவிலா அன்பும் கொண்டிருந்தனர். இவைகளையெல்லாம் கண்ட ஷியாஃக்கள் அம்மூன்று தோழர்களையும் இழிவுபடுத்த வழியின்றி பொங்கிப் புழுவாய் நெளிந்த போதுதான் இவர்களை மகிழ்விக்கக் கிடைத்தது தகிய்யா. அதை அம்மூன்று தோழர்களின் மீதும் இவர்கள் பிரயோகப்படுத்தினர். அத்துடன் நில்லாது ஹழ்ரத் ஸெய்யிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களும் தகிய்யாவை கையாண்டனர் என்று அவர்களையும் தங்களின் தகிய்யாவுக்கு ஆதாரப்படுத்தி வீண்பழி சுமத்தினர்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். நான் அல்லாஹ் வின் சிங்கம். எனக்கெதிராக முழு அரபகமும் திரண்டு வந் தாலும் அவர்களிடம் போர்புரியத் தயங்க மாட்டேன். எதற்காகவும் தலைகுனிய மாட்டேன். அனைத்தும் எனக்கு அற்பம். எவரைக்கண்டும் அஞ்ச மாட்டேன் என்று சூளுரைத்த மாமனிதர் தான் மூன்று தோழர்களுக்கும் பின்னால் தாழ் வுணர்வோடும் பணிவோடும் நடந்தனரென்றால் இது அவர் நிச்சயம் தகிய்யாவை அல்ல. வேறு எதையுமே கையாள் பவரல்ல என்பதை நமக்கு உணர்த்துவதால் இமாமவர்கள் தகிய்யாவை கையாண்டனர் என்பது ஷியாஃக்களால் திட்டமிட்டு, வேண்டுமென்றே அவர்கள்மீது சுமத்தப்படும் வீண்பழியேயன்றி வேறொன்றுமில்லை.

இதனை இன்னொரு கோணத்திலும் நாம் ஆய்ந்து பார்க் கலாம். அதாவது மேற்கூறப்பட்ட விஷயங்களனைத்தும் உண்மையாகவே அஹ்லெ பைத்தினர்களால் சொல்லப் பட்டவை தானென ஒரு வாதத்திற்காக நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமானாலும், அந்த அஹ்லெ பைத்தினரே, இமாம் மஹ்தியின் வருகை வரை நாங்கள் கூறியவைகளை யாரும் வெளிப்படுத்தக் கூடாதென்றும், மீறி வெளிப்படுத்து பவன் எங்களை இழிவுபடுத்தியவன் என்றும், கொல்லப்பட வேண்டியவன் என்றும் கூறியிருக்க அதையும் இந்த ஷியாஃக்களே தங்களின் நூல்களிலும் குறித்து வைத்திருக் கும்போது இந்த ஷியாஃக்கள் அவைகளை ஏன் பகிரங்கப் படுத்தினர்? அவ்வாறுயின் இமாம்களின் கூற்றுப்படி இந்த ஷியாஃக்கள் அஹ்லெ பைத்தினரை இழிவுபடுத்துகின்ற வர்கள் ஆகையால் அதே இமாம்களின் மேற்கண்ட கூற்றின் படி இந்த ஷியாஃக்கள் கொல்லப்பட வேண்டியவர்கள் என்பதும் நமக்கு புலனாகிறதல்லவா! எனவே இவர்கள் இமாம்கள் மீது இட்டுக்கட்டி அவர்கள் சொன்னதாக இவர்கள் புனைந்துரைத்து அருமை நபியவர்களின் அற்புத மான இல்லத்தினரை இழிவுபடுத்துகின்றவர்கள் தான் இந்த ஷியாஃக்கள் என்பதை இஸ்லாமிய மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்தியாயம் ஐந்து

# குமைனியின் வழிகேடு

இனிய உள்ளங்களே!

இதுவரை உங்கள்முன் எடுத்துக் காட்டப்பட்ட விஷய விளக்கங்களைக் கொண்டு இந்த ஷியாஃக்கள் என்போர் யார்? அவர்களுடைய மத்ஹபான ஜஃபரிய்யா மத்ஹபு என்பது என்ன? என்பவைகளை எல்லாம் தெளிவுபடக் கண்ட நீங்கள் இனி தற்போது நம்மிடையே உள்ள ஷியாக் களின் கொள்கை என்பதும் இதுதானா? இவர்கள் யாருடைய வழிகாட்டலில் இப்போது செயல்படுகின்றனர்? என்னும் கேள்விகள் உங்களின் சிந்தனையை உலுக்கிக் கொண்டிருக் கும். அல்லது வேறு ஏவராவது இப்படிப்பட்ட வினாக்களை தொடுக்கலாம். ஆகையால் அவைகளுக்கும் நாம் விளக்கம் தருகிறோம்.

தற்போது உள்ள ஷியாஃக்களின் கொள்கை வழிகாட்டி என்பவர் குமைனி சாஹிபாகும். வெளிப்பார்வைக்கு இவர் நல்லவர் போலத் தோன்றினாலும் சில தந்திரமான வழிகளை கடைபிடித்ததன் மூலம் தமது அரசியலில் இவர் மிகப் பெரும் லாபத்தை அடைந்தார்.

அடுத்து ஈராக்கில் நஜ்ஃப் மாவட்டத்தில் மாநாடு ஒன்று நடத்தப்பட்ட போது, அம்மாநாட்டில் ஈராக், ஈரான், துருக்கி, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளைச்சார்ந்த இருதரப்பு உலமாக்களும் கலந்துகொண்டு ஷைகைன் (அபூபக்ர், உமர் ரலியல்லாஹு அன்ஹுமாவின்) சம்பந்தமாக கருத் தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது. அதில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு,...

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தான் காத்தமுன் (இறுதி) நபி. அவர்களது தோழர் பெருமக்களில் அனைவரிலும் சிறந்தவர் சித்தீகுல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள். இவர்களின் கரத்தில்தான் ஏகமனதாக தோழர்களனைவரும் ஹழ்ரத் அலீ அவர்கள் உட்பட எவ்வித மனக்கசப்பும், நிர்பந்தமும், தர்ம சங்கடமுமின்றி பைஅத்துச் செய்தனர்.

அதுபோது சுமார் 700 தோழர்கள் அங்கிருந்தனர். அவர்களனைவரும் சாட்சி பகன்றனர். இன்னும் ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பரும், அவர்களுக்குப்பின் ஸெய்யிதுனா உமர் பாரூக்கும், அவர்களுக்குப்பின் ஸெய்யிதுனா உத்மானுல் கனீயும், அவர்களுக்குப்பின் ஸெய்யிதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹும் அவர்களும் கலீபாக்களாயினர்.

இந்நால்வரும் ஒரேகாலத்தில் ஒரே இடத்தில் வாழ்ந்து ஒருவரையொருவர் புகழ்ந்தும் கண்ணியப்படுத்தியும் வந்தனர். இமாம் ஸெய்யிதுனா அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் இரு தோழர்களைக் குறித்தும் வினவப்பட்ட போது, அதற்கவர்கள்; அவ் விருவரும் நீதமான கலீபாக்களாக இருந்தனர். இன்னும் சத்தியத்தை கடைபிடித்து சத்தியத்தை நிலைநாட்டியவர்களாகவே இவ்வுலகை விட்டும் பிரிந்தனர் எனக் கூறினர்.

ஆதலால் ஈரானியர்களே! இதுதான் முடிவாகும். இதற்கு மாறு செய்தலாகாது. இவ்வாறு நபித்தோழர்களின் விஷயத்தில் கருத்து வேற்றுமை இருக்கக் கூடாது. இதனை மதிக்காதவர்களின் உயிர் உடமை ஆட்டு மந்தைகளுக்கு நிகராக ஹலாலாகக்கப்படும். அத்தகையோர் மீது அல்லாஹ், மலக்குகள் மற்றும் மனிதர்களனைவரது சாபமும் உண்டாகட்டுமாக என்பதாகத் தீர்ப்பளித்து அறிக்கையாக வெளியிட்டனர்.

இவ்வுடன்படிக்கைக்கு ஏற்ப அனைவரும் நடந்திருந்



தால் அப்போதே ஷியாஃ, சுன்னி என்னும் பிரச்னைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும். ஆனால் ஷியாஃக்கள் தமது வாக்குறுதியை பொய்ப்பித்து காற்றில் பறக்க விட்டு விட்டதால், அன்றைய ஷியாஃக்களின் கொள்கைக்கும் இன்றுள்ள ஷியாஃக்களின் கொள்கைக்கும் எவ்வித மாற்றமுமில்லை என்பதை தளபதி குமைனி ஸாஹிப் நிரூபித்துக் காட்டி விட்டார்.

இன்னும் குமைனி ஸாஹிபின் சிந்தனை முழுவதும் இப்னு சபாவின் கொள்கைக்கு உட்பட்டதாகத்தான் இருந்தது. இருப்பினும் இப்னு சபாவுக்குப்பின் தோன்றிய நம்பத்தகுந்த ஷியாஃ உலமாக்களான கலீனி, தூஸி, திப்ரீஸி, மஜ்லிசி போன்றோரின் நடைமுறையைத்தான் அவர் அதிக மதிகம் கையாண்டிருக்கிறார் என்பது அவரால் எழுதப்பட்ட நூல்களை வாசிப்போர் புரிந்துகொள்வர்.

அடுத்து குமைனியால் தொகுக்கப்பட்ட நூல்களில் 180க்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட ''அல்ஹுகூமத்துல் இஸ்லாமியா'' என்னும் அரபி நூலும், 350 பக்கங்களை கொண்டிருந்த ''கஷ்ஃபுல் அஸ்ரார்'' என்னும் பார்ஸி நூலும், இரு பாகங்களில் 600க்கும் மேற்பட்ட பக்கங்களை உள்ளடக்கியிருந்த ''தஹ்ரீருல் வஸீலா'' என்ற பிக்ஹ் சட்டக்கலை நூலும் மிகவும் பிரபலமானவை என்று சொல்லலாம். இங்கே நாம் குமைனி ஸாஹிபின் சிந்தனை துளிகளிலிருந்து சிலவற்றை அவரது நூல்களிலிருந்து உங்களின் மேலான பார்வைக்கு தருகிறோம்.

## அ. குர்ஆனும் குமைனியும்

ஷியாஃக்கள் குர்ஆன் பற்றிய விஷயத்தில் எப்படிப்பட்ட கொள்கையை கொண்டிருக்கின்றனர் என்பதை நாம் முன்னால் உங்களுக்கு விளக்கிக் காட்டியுள்ளோம். இந்த குமைனி ஸாஹிபும் அதே கொள்கையை கொண்டவர் தான் என்பதற்கு அவரது நூல்களில் ஒன்றான கஷ்ஃபுல் அஸ்ரார் 114ம் பக்கத்தில்,...

குர்ஆனில் மாற்றங்களை உருவாக்கியவர்கள் யூத, கிறிஸ்தவர்கள் தானென்று முஸ்லிம்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் இவைகளை உண்மையில் ஸஹாபாக்கள் என்னும் பெயரில் இடம்பெற்ற சிலர் தான் செய்தனர்.

இனி உண்மையான குர்ஆன் என்பது இமாம் ஸெய்யிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களால் ஒன்று திரட்டப்பட்டதேயாகும். அது தற்போது மறைவாக இருக்கும் இமாமவர்களிடமுள்ளது. அது இப்போது வழக்கத்திலுள்ள குர்ஆனுக்கு நேர்மாற்றமானதாகும்.

## ஆ. குமைனியும், தோழர்களும்

அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பம் செய்கிறேன். குறைஷிகளின் இரு சிலைகளான அபூபக்கர், உமர் ஆகிய இருவர் மீதும், இன்னும் அவர்களின் புதல்விகளான ஆயிஷா, ஹப்ஸா போன்றோர் மீதும் லஃனத்துச் (சாபம்) செய்கிறேன்.

நூல் : துஹ்பத்துல் அவாம், பக்கம்-18. குமைனி.

அபூபக்கர், உமர் ஆகிய இருவரும் உலக ஆதாயத்திற்காகத்தான் இஸ்லாத்திற்குள் நுழைந்தனர். அதன் பொருட்டே அவர்கள் தமக்கென்று ஒரு கூட்டத்தையும் உருவாக்கினர். இன்னும் அண்ணல் நபியவர்களின் மறைவுக்குப்பின் அமீருல் முஃமினீன் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் இமாமத் - கிலாபத் சம்பந்தமாக இறங்கிய இறைவசனங்களை இவர்கள் குர்ஆனிலிருந்து அகற்றி விட்டனர்.

மேலும் இவ்விருவருக்கும் ஒருவேளை உலக ஆதாயம் கிடைக்காமல் போயிருக்குமாயின் தமது கிலாபத்தை (ஆட்சியை) அபூஜஹ்லின் கூட்டத்தாரோடு கைகோர்த்துக் கொண்டு இஸ்லாத்தையே அழித்தொழித்திருப்பார்கள். இன்னும் உத்மான், முஆவியா, யஸீத் போன்றோரும் கொலைக் குற்றவாளிகளாகும். இதில் உத்மான், அபூபக்கர் உமர் ஆகிய இருவருக்கும் பயந்து கொண்டு உலக ஆதாயத்திற்காக வேண்டி அவர்களோடு சேர்ந்திருந்தார்.

நூல் : கஷ்புல் அஸ்ருர், பக்கம்-119,120.



வாசகர்களே! என்ன? இவரையா இமாம், ஹுஜ்ஜதுல்லாஹ், ஆயத்துல்லாஹ் என்பதாக இனிமேலும் வர்ணிப்பீர்கள்? அஃபலா யதஃபக்கரூன்? என்ன? சிந்திக்க மாட்டீர்களா?

இறுதியில் நமது சகோதரர்களான சுன்னிகளாக இருந்தவர்கள் தானே அந்த ஜமாஅத்திலும், இந்த கூட்டத்தினரோடும் சென்று சேருகின்றனர். இப்படியெல்லாம் ஏன் நடக்கின்றதென்றும் நம்மை கேட்கின்றனர்.

இது வேறொன்றுமில்லை. பாலில் தண்ணீர் கலந்து தண்ணீரும் பாலைப்போலவே தெரிந்ததால் வந்த வினை. எனவேதான் நாம் அவ்விரண்டையும் தனித்தனியாக பிரித்துக் காட்டுகிறோம். அப்போதுதானே தண்ணீரிலிருந்து பிரிக்கப்பட்ட பசுமையான பாலைப் பார்க்க முடியும். பால் நம்முடன் கலந்திருந்தவர்கள். இப்போது நாம் நம்மவர்களை தெளியவைக்கும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறோம். அஞ்ச வேண்டாம். இதுதான் சத்தியம்.

இன்னும் மனிதன்தான் ஷைத்தானுகுவதாக கேள்விப்பட்டிருக்கிறோம். ஷைத்தான் மனிதனுனதை அறிந்ததில்லை அல்லவா! அதைத்தான் நாம் செய்கிறோம். ஆம். ஷைத்தானை நாம் மனிதனுக்குகின்றோம்.

## குமைனியின் வழிகேடு 2

ان جبريل كان يأتي بعد وفاة النّبي صلّى الله
عليه وسلّم لفاطمة بأنباء من الغيب ، فيقوم
امير المؤمنين بتدوينها وهذا هو مصحف فاطمة

**அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்குப் பின் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் அன்னை பாத்திமா ரழியல்லாஹு அன்ஹா அவர்களிடம் மறைவான தகவல்களை கொண்டு வருபவராகவும், அதனை அமீருல் முஃமினீன் அலீ கர்ரமல்லாஹு வஜ் ஹஹு அவர்கள் தொகுப்பவர்களாகவும் இருந்து வந்த னர். அதுதான் ''குர்ஆனே பாத்திமா'' என்பதாகும்.**

இப்போது வாருங்கள். ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாமவர்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களுக்கு மறைவான தகவல்களை கொண்டுவரும் விஷயத்தைத் தவிர மற்றவர்களின் விஷயத்தில் முத்திரை யிடப்பட்டவர்கள் என்பதாக ஈமான் கொண்டுள்ள நமக்கு குமைனியின் மேற்கண்ட கருத்து ஆச்சரியத்தை ஏற்படுத்து கின்றது. இதில் குர்ஆனே பாத்திமா என்னும் பெயரில் இன் னெரு குர்ஆன் இருக்கின்றது என்னும் வாக்கியம் நமக்கு ஆச்சரியத்திலும் பேராச்சரியத்தை ஏற்படுத்துகின்றது.

இன்னும் குமைனி ஸாஹிப் தமது கருத்தில் எதனை அவர் மிகவும் சூசகமாக தெரிவிக்க முயல்கிறார் எனில், நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு அறிவிக்காது விடுபட்டுப்போன விஷயங்களை நிறைவு செய்யும் பொருட்டு ஜிப்ரீலவர்கள் அவைகளை பாத்திமா ரழியல்லாஹு அன்ஹாவுக்கு அறிவித்துத் தந்ததன் மூலம் சம்பூரணப்படுத்தினர் என்பதேயாகும். இதை யார் உண்மையென ஒப்புக்கொள்வார்? கண்டிப்பாக நாம் குமைனியையும் அவரது சகாக்களையும் இவ்விஷயத்தில் பொய்யர்கள் என்று நிரூபித்துக் காட்டுவோம்.

முன்னல் ஹழ்ரத் ஸெய்யிதுனு ஸித்தீகுல் அக்பர் ரழி யல்லாஹு அன்ஹு அவர்கள் குர்ஆனுக்கு துரோகம் செய்து விட்டதாக தமது கஷ்புல் அஸ்ரூர் என்னும் நூலில் குமைனி சாஹிபவர்கள் குறிப்பிடும்போது,...

**போரில் கிடைத்த கனீமத்துப் பொருட்களை ஐந்து**



**பங்குகளாகப் பிரித்து அதில் அல்லாஹ்வுக்கு ஒரு பங் கும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்கு ஒரு பங்கும் பிரித்திருக்க வேண்டும். ஆனல் இவ்விரண்டு பங்கையும் ஸித்தீக் நாயகம் செய்யாமல் விட்டுவிட் டது மாபெரும் துரோ கச் செயலாகும்.**

**இதுபோன்றே ஸகாத்துடைய பொருட்களில் ஒரு பகுதி ''அல்முஅல்லஃபத்தி குலூபுஹும்'' என்பாருக்கு வழங்கப்பட வேண்டும். இதையும் அபூபக்கர், உமர் ரழி யல்லாஹு அன்ஹுமா ஆகியோரின் ஆலோசனைக் கேற்ப இல்லாமலாக்கி விட்டனர். இதுவும் மிகப் பெரும் துரோகமாகும்.**

அடுத்து ''உமர் பாரூக்கின் துரோகச் செயல்கள்'' என் னும் தலைப்பின் கீழ்,...

**''முத்ஆ'' பெண்களைக்கொண்டு உறவுகொள்ளும் விஷயம் ஆகுமாக்கப்பட்டு அண்ணல் நபியவர்களின் காலத்திலும், ஸித்தீகுல் அக்பரின் காலத்திலும் நடை முறையில் இருந்தது. இதனை உமர் மறுத்து ஹராமாக ஆக்கியதோடு மீண்டும் இச்செயலை செய்பவர்களுக்கு கடுமையான தண்டனையும் வழங்கப்படும் என்பதாக மிம்பரில் வைத்து அறிவித்தது இவர் குர்ஆனுக்கே செய்த துரோகமாகும்** என்று எழுதுகிறார்.

இவர்களா இஸ்லாமியர்களின் தோழர்கள்? இவர்களா இஸ்லாத்தின் அஸ்திவாரத் தூண்கள்? இல்லை. நவூதுபில் லாஹ். இவர்கள் காபிர்கள். ஸின்தீக்குகள், குமைனியும் தான்.

இனி பட்டப்பகலில் அதுவும் சூரியனின் வெளிச்சத் தில் குர்ஆனுக்கும், ஹதீதுக்கும் இழைக்கப்படுகின்ற துரோகத்தை பார்த்து ரசித்துக் கொண்டிருப்பவர் ஒரு முஸ்லிமாகவே இருக்க முடியாது. ஒன்று அதனை கரத்தால் தடுக்க வேண்டும். முடியாவிட்டால் நாவால் தடுக்க வேண்

டும். அதுவும் முடியாவிட்டால் மனம்நொந்து அதை விட்டு விலகி தூரமாகவாவது போய்விட வேண்டும். இறுதி யான இம்முறை ஈமானில் மிகக்குறைந்த நிலையினை கொண்ட தாகும்.

மேலும் இஸ்லாம் துளிர்விடும் காலமான நபித்தோழர் களின் காலத்தில் மேற்கூறப்பட்ட அவ்விரு தோழர்களின் துரோகச்செயலை பயங்கரமான வீரர், வீரத்தின் தந்தை யென போற்றப்படுகின்ற இந்த ஷியாஃக்களின் முதல் கலீபாவான ஸெய்யிதுனா ஹழ்ரத் இமாம் அலீ கர்ரமல் லாஹு வஜ்ஹஹு அவர்கள் தமது சொல்லாலும் தடுக்க வில்லை. செயலாலும் தடுக்கவில்லை. சரி. தமக்கு பக்கபல மான ஆதரவு இல்லை என்பதற்காக எதுவும் செய்ய முடியா மல் போய்விட்டதென்று காரணம் சொல்லப்பட்டால் குறைந்தபட்சம் மனம்நொந்துபோய் ஹிஜ்ரத்தாவது செய்திருக்கலாமல்லவா!

அதற்கு மாறாக அவ்விரு தோழர்களது வழிகாட்டலில் இவர்கள் மறுப்பேதும் தெரிவிக்காது நடந்துள்ளார்கள் எனில் இதற்கு என்ன பொருள்? நவூதுபில்லாஹ். இந்த குமைனியின், ஷியாஃக்களின் கொள்கைப்படி இதற்குப் பெயர் நிஃபாக் - நயவஞ்சகமாகும். இமாமவர்கள் நய வஞ்சகத்தனமாக செயல்பட்டார்களென்று சொல்கிறார் களா? அப்படியானால் இமாம்கள் எனப்படுவோர் பாவம் செய்ய கற்பனைகூட செய்யாதவர்கள்.என்று குமைனியால் எவ்வாறு வர்ணிக்க முடிகின்றது?

ஏனவே குமைனியும் ஷியாஃக்களும் அஹ்லெ பைத்தி னரை நேசிப்பவர்களல்ல. அவர்களை இழிவுபடுத்துகின்ற ஈனப்பிறவிகள். பொய்யர்கள். சந்தர்ப்பவாதிகள். இவர் கள் அழிந்து தொலையட்டும்.

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்கள் தமக்கு வழங்கப்பட்ட அல்லாஹ்வின் கட்டளை களை அவர்கள் சம்பூரணமாக்கவில்லை. இரு நபித்தோழர் களும் திருக்குர்ஆனுக்கு துரோகம் செய்தவர்கள் என்றெல்



லாம் கூறப்பட்டுள்ள குமைனியின் கருத்துக்கள் குமைனி யின் தரமென்ன என்பதை நமக்கு மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட நச்சுக்கருத்துக்களை எல்லாம் தனதாக்கிக் கொண்டிருப்பது தான் குமைனியின் நூலான ''கஷ்புல் அஸ்ரார்'' என்னும் நூலாகும். இதன் அர்த்தம் என்ன தெரியுமா? ''ரகசியப் பொக்கிஷம்'' ஆஹா! என்ன அற்புதமான பெயர்! இல்லையா?

ஆகையால் கஷ்புல் அஸ்ராருடைய கருத்துக்களும், ஷியாஃக்கள் மற்றும் குமைனியின் கொள்கைகளும் குர் ஆன், ஹதீத், இஜ்மாஃ, கியாஸ் ஆகியவற்றின் அடிப்படை யிலே, உலமாக்களின் ஏகோபித்த முடிவின்படி, பட்ட வர்த்தனமான மிகமிகத் தெளிவான குப்ராகும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. அத்துடன் குமைனி ''ரூஹுல் லாஹ்'' ''இமாம்'' ''ஆயதுல்லாஹ்'' என்றெல்லாம் புகழப் படுவதற்கு முற்றிலும் அறவே தகுதியில்லாதவர் என்பதை நாம் நன்குணரல் அவசியமாகும்.

التكبير ، وهو وضع احدى اليدين على
الاخرى نحو ما يصنعه غيرنا ، وهو مبطل عمدا
على الاقوى لاسهوا ، وان كان الاحوط فيه الاعادة
ولاباس به حال التقية

***தொழுகையில் ஷியாஃக்களல்லாத மற்ற பிரிவார் கள் தக்பீர் தஹ்ரீமாவை தொடர்ந்து இரு கைகளையும் அவர்கள் கட்டுவதைப்போன்று வேண்டுமென்றே ஒரு ஷியாஃ கட்டினால் அவனது தொழுகை பாத்திலாகி விடும். இனி மறந்து கட்டினால் அத்தொழுகையை மீண் டும் திருப்பித் தொழ வேண்டும். தகிய்யாவை (நயவஞ்ச கத்தனத்தை) கொண்டு ஷியாஃவல்லாதவர்களின் பின் னால் தொழும்போது கட்டினால் குற்றமேதுமில்லை.***

*நூல் : மொழிபெயர்ப்பு தஹ்ரீருல் வஸீலா, பக்கம்-335.*

العدد ، واقله خمسة نفر احدهم الامام فلا

تجب ولا تنعقد بأقل منها.

ஜும்ஆவுடைய தொழுகைக்கு குறைந்தபட்சம் இமாமுடன் ஐந்து நபர்களாவது இருப்பது அவசியமாகும். எண்ணிக்கை அதை விட குறைவாக இருந்தால் ஜும்ஆ அவசியமல்ல. நூல் : தஹ்ரீருல் வஸீலா, பக்கம்-419.

لايعتبر فيها الطهارة من الحدث والخبث

ஜனஸா (மைய்யித்து) தொழுகையை தொழுவதற்கு பெருந்துடக்கு, சிறுதுடக்கு போன்ற அசுத்தமான நிலைகளை விட்டும் தூய்மையானவராக இருக்க வேண்டுமென்று அவசியமல்ல. ஆனால் சுத்தமாக இருப்பது ஏற்றமாகும். நூல் : தஹ்ரீருல் வஸீலா, பக்கம்-149.

இவை குமைனியினது தஹ்ரீருல் வஸீலா எனும் அரபி நூல் இந்திய நாட்டு ஷியாக்கள் கொள்கை வளர்ப்புச் சங்கத்தினல் கராச்சியில் முஹர்ரம் ஹிஜ்ரி 1413ல் வெளியான நூற்களின் கருத்தாகும்.

குமைனியால் தொகுக்கப்பட்ட கஷ்புல் அஸ்ரார் எனும் பாரசீக மொழி நூல் ஜோர்தான் நாட்டு டொக்டர் முஹம்மத் பந்தார் என்பவரால் அரபியில் மொழியாக்கம் செய்யப்பட்ட நூலிலிருந்து ஒருசில அரபி வசனங்களை குறிப்பிட்டோம். நூலின் கடைசிப் பகுதியில் குமைனியின் மூலப் பிரதியிலிருந்து அவர் நச்சுக் கருத்துக்களை முன் வைக்கின்றோம். உண்மையை விளங்குவோர்களுக்கு போதுமாகும்.

அத்தியாயம் ஆறு

# நபித்தோழர்களும் நபிகள் நாதரின் பொன்மொழிகளும்

யார் நூதனக் (பித்அத்) கொள்கையுடையவனை கண்ணியப்படுத்துகின்றரோ அவர் இஸ்லாத்தை இல்லாமலாக்க உரியவராகும். - தப்ரானி

பித்அத் என்னும் நூதனக் கொள்கையுடையோரின் நோன்பு, தர்மம், ஹஜ், உம்ரா, ஜிஹாத் போன்ற எதையும் அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான். குழைத்த மாவிலிருந்து ரோமம் நீக்கப்படுவதைப்போல அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியாகி விடுவார். - பைஹகீ, இப்னுமாஜா

ஷியாக்கள் மிகக்கெட்ட பித்அத் என்னும் நூதனக் கொள்கையுடையோராகும். - இப்னு ஹஜர் ஹைதமி

அல்லாஹ் என்னை தேர்ந்தெடுத்து, எனக்காக தோழர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் எனது அமைச்சர்களாக ஆக்கித் தந்தான். அவர்களை இழிவுபடுத்துவோரை அல்லாஹ்வும், அமரர்களும் லஃனத்துச் செய்வதோடு மற்றும் சிருஷ்டிப் பொருட்களனைத்தும் லஃனத்துச் (சாபம்) செய்கின்றன. - தப்ரானி, ஹாகிம், முஹாழிமி.

அல்லாஹ் என்னை தேர்ந்தெடுத்தான். எனக்காக தோழர்களையும் குடும்பத்தாரையும் அமைத்தான். பின்பு ஒரு கூட்டம் வரும். அவர்கள் எனது தோழர்களை ஏசுவோர். தரக்குறைவாக பேசுவர். அவர்களோடு நீங்கள் தொடர்பு

கொள்ள வேண்டாம். அவர்களை திருமணம் செய்யாதீர்கள். அவர்களுடன் உண்ணாதீர்கள். பருகாதீர்கள். -பைஹகீ

எனக்குப்பின் ஒரு கூட்டத்தினர் வருவார்கள். அவர்கள் ''ராஃபிழாக்கள்'' என்று அழைக்கப்படுவார்கள். அவர்கள் ஷைகைன்களான ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் மற்றும் ஸெய்யிதுனா உமர் பாரூக் ரழியல்லாஹு அன்ஹுமா வாகிய இருவரையும் இழித்துப் பேசுவர். அவர்களை கொல் லுங்கள். ஏனெனில் திடனாக அவர்கள் முஷ்ரிக்கீன்கள். இன்னும் எனது குடும்பத்தினரை நேசிப்பதாக பாசாங்கும் செய்வார்கள். -தாரகுத்னீ.

எனது உம்மத்துக்களில் எவருக்காவது அல்லாஹ் நன்மையை நாடினால் எனது தோழர்களின் நேசத்தை அவரது உள்ளத்தில் ஏற்படுத்துவான். -தைலமி.

எனது தோழர்களை ஏசாதீர்கள். ஏசுவோர் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாகட்டும்.

அத்தியாயம் ஏழு

# அஹ்லெ பைத்தினரும் ஷைகைனும்

பாத்திமா ரலியல்லாஹு அன்ஹாவின் மக்களனை வருமே ஷைகைன்களின் விஷயத்தில் நல்ல வார்த்தை களையே உபயோகித்துள்ளனர்.

- முஹம்மத் பாகர் ரலியல்லாஹு அன்ஹு

ஸித்தீக் எனப் பெயரிட்டவர்கள் கண்மணி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லமவர்களாகும். அவர்களை ஸித்தீக் என சொல்லாதவர்களின் பேச்சை அல்லாஹ் இரு உலகி லும் உண்மையாக்கி வைக்க மாடான்.

- இமாம் ஜஃபர் ஸாதிக் ரலியல்லாஹு அன்ஹு

கூபாவாசிகளே! ஸித்தீகுல் அக்பர் மற்றும் உமர் பாரூக் ஆகிய இருவரது விஷயத்திலும் தகாத வார்த்தைகளை பிரயோகிக்காதீர்கள்.

-ஹுசைன் பின் முஹம்மத் பின் அல் ஹனபிய்யா ரலியல்லாஹு அன்ஹு

ஸித்தீகுல் அக்பர் உமர் பாரூக் ரழியல்லாஹு அன் ஹுமா ஆகிய இருவரையும் ஏற்காதவர்களின் தௌபாவை அல்லாஹ் அங்கீகரிக்க மாட்டான்.

-அப்துல்லாஹ் பின் அல் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு

எனது நேசமும், ஸித்தீகுல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹுமாவின் விரோதமும் ஒரு உண்மை விசுவாசியின்

உள் ளத்தில் ஒன்று சேராது.

- இமாம் அலீ ரலியல்லாஹு அன்ஹு

இவைகளெல்லாம் இமாம்கள் தகிய்யா - சூழ்நிலை கருதி சொல்லிய வார்த்தைகள் என ஷியாக்கள் பழி சுமத்துகின்றனர்.

இமாம்கள் பாவம் செய்ய கற்பனைகூட செய்யாதவர் கள். -குமைனி

பாவம் செய்வதென்பது ஒருபுறமிருக்க பாவம் செய்ய எண்ணம்கூட கொள்ளதவர்கள். இன்னொருவர் சம்பந்த மாக முன்னால் ஒரு வார்த்தையும், பின்னால் வேறொரு வார்த் தையும் எப்படி பேசுவார்கள்?

இமாம்கள் பாவம் செய்யாதவர்கள் என்று சொல்வதும் ஷியாக்கள் தான். இனி ஒருவரை சந்தோஷப்படுத்த இமாம்கள் பொய் சொன்னதாக சொல்வதும் இவர்கள்தான். இது புதுமையிலும் புதுமை தானே. இது இவர்களின் மடமையே.

அத்தியாயம் எட்டு

# உலமா பெருமக்களின் ஒருமுகக் கருத்து!

ஷியாக்களான நீங்கள் தன்மானம் உள்ளவர்களாக, உங்களின் அகீதாவும் மார்க்க விளக்கங்களைக் கொண்ட மத்ஹபும் உண்மையானதாக இருக்குமாயின், தந்திரங்களை யும், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு தக்கவாறு உபதேசம் செய் யாதீர்கள். கோழைகளைப்போல பயந்தொழிந்து உபதேசிக் காதீர்கள். மாணவர்களையும், பாமர மக்களையும் மூடத்தன மான கேள்விகளை கேட்டு மயக்காதீர்கள்.

நீங்கள் கொண்டுள்ள கொள்கை உண்மையா? பொய்யா? என்பதுகூட நமது நாட்டிலுள்ள ஷியாக்களுக்குத் தெரி யாது. இந்த வள்ளலில் ஷியாக்கள், மாணவர்களிடம் மனிதர்களில் சிறந்தவர் யாரென்று கேட்க, அதற்கவர்கள்; நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் என்கின் றனர். அதன்பின் தோழர்களில் சிறந்தவர்கள் யாரென்று கேட்கின்றனர். அதற்கும் அவர்கள்; நபியவர்களின் குடும் பத்தினர் என்கின்றனர். அப்படியானல் நபியவர்களுக்குப் பின் கலீபாவாக தலைமைத்துவம் ஏற்க அஹ்லெ பைத்தினர் ஏற்றமானவர்களா? அல்லது மற்ற தோழர்கள் ஏற்றமானவர் களா? என்று குள்ளத்தனமாக கேட்கின்றனர்.

உங்களில் மூவர் பயணம் செய்தால் அதில் ஒருவரை அமீராக ஆக்கிக் கொள்ளுங்கள் என ஆர்வமூட்டிய அண் ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தங் களின் சமுதாயத்தை வழிநடத்த ஒரு இமாமை கலீபாவாக நியமிக்காதது ஏன்?

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமக்குப்பின் இன்னார்தான் கலீபா, இமாம் என்பதை வஸிய்யத்துச் செய்திருந்தார்கள். அதனை மற்ற தோழர்கள் பதவி மோகத்திற்காக மறைத்து விட்டனர்.

அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கண்மூடச் சில தினங்களுக்கு முன் கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்கள். அதுசமயம் ஒருநாள் ஸெய்யிததுனா ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா அவர்களின் இல்லத்தில் ஸித்தீகுல் அக்பர், உமர் பாருக் மற்றும் பல தோழர் பெருமக்களின் முன்னிலையில் எழுதுகோலை கொண்டுவாருங்கள். எனக்குப்பின் பிரச்னைகள் எதுவும் தோன்றாதிருக்கும் என்றனர். ஆனால் உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அவ்வாறு செய்ய அண்ணலாரை அனுமதிக்கவில்லை. இந்த ஹதீத் புகாரி, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் பதிவாகியுள்ளது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் தமக்குப்பின் யார் கலீபா என்பதை தெரிவிக்கவே பேனாவை கேட்டார்கள். ஆனால் ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் கலீபாவாக ஆவதை விரும்பாத உமர் ரலியல்லாஹு அன்ஹு அதனை தடுத்து விட்டார் என்பது ஷியாஃக்களின் குற்றச்சாட்டு.

கிலாபத் - இமாமத் கட்டாயக் கடமைகளில் ஒன்றாகும். தனது இமாம் யார் என்பதை அறியாதவன் உண்மை மூஃமினாக மாட்டான். -குமைனி.

அஹ்லெ பைத்தினர்கள் மரம் செடி கொடிகளின் விஷயங்களைக்கூட அறிந்து வைத்திருப்பவர்கள் என்பதாக கொள்கைகொண்ட ஷியாஃக்களின் பார்வையில் நபியவர்களின் அறிவு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்! அல்லாஹ்வின் உத்திரவைக்கொண்டு பேசுகின்றவர்கள். அனைத்தையும் அறிந்தவர்கள். இறுதி நாள்வரை நிகழவிருக்கும் அனைத்தையும் தெரிந்தவர்கள். நமக்கும் தெரிவித்தவர்கள்.



இப்படிப்பட்ட நபியவர்களுக்கு உமரவர்களின் மறுப்புக்கான காரணம் எப்படி தெரியாமல் போனது? கட்டாயக் கடமையான ஒரு விஷயத்தை தேகம் ஆரோக்கியமாயுள்ள போதே ஏன் தெரிவிக்காமல் விட்டு விட்டனர்?

மேலும் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மார்க்கம் அவர்களைக்கொண்டே நிரப்பமாக்கப்பட்டு முத்திரையிடப்பட்டது. இனி அதனை வழி நடத்துவதற்கு புதிதாக இன்னொருவர் தேவையில்லை. இஸ்லாத்தை ஏற்றிருந்த யார் வேண்டுமானாலும் வழிநடத்துமளவிற்கு தமது தோழர்களனைவரையும் நபிகளார் தயார் செய்து வைத்திருந்தனர். அத்துடன் அத்தோழர்களின் உயர்நிலைகளையும் எடுத்துக் கூறினர்.

அசைக்கவியலாத உறுதியான ஈமானை கொண்டிருந்த தோழர்களுக்கு மத்தியில் கலீபா யார் என்பதை தாம் தீர்மானிக்க வேண்டியதில்லை. அதனை அவர்களே தீர்மானித்துக் கொள்வார்கள் என்ற உறுதியான நம்பிக்கை நபியவர்களுக்கு இருந்ததால் யார் கலீபா என்ற கேள்வியும் எழவில்லை; இன்னார்தான் கலீபா என்று நபியவர்களும் தீர்மானிக்கவில்லை. அதன்பின் தோழர்களின் செயல்பாடும், அவர்களின் ஏகோபித்த முடிவுமே இஸ்லாத்தின் அஸ்திவாரங்களில் ஒன்றென நம்பப்படுகிறதென்பதை நன்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் புனிதமிகு தோழர் பெருமக்கள் மிகக் கண்ணியம் வாய்ந்தவர்கள். அத்தோழர்களிலிருந்தே நபியவர்களின் குடும்பத்தினரையும் அல்லாஹ் தேர்ந்தெடுத்தான்.

அத்துடன் என் குடும்பத்தினர் என்னைக்கொண்டு என் பெயரால் சிறந்தவர்களென மற்றவர்கள் கருதுகின்றனர். விஷயம் அவ்வாறல்ல. மாறாக உங்களில் என்னைக்கொண்டு மிகச்சிறந்தவர் தக்வாவுடையவரே. அவர் எவராகவும் இருக்கலாம். எப்படிப்பட்டவராகவும் இருக்கலாம்.

தப்ரானி - அஸ்ஸவாயிகுல் முஹ்ரிகா, பக்கம்-241.

என்னையும், என்னைக் கண்டவரைக் கண்ட முஸ்லி மையும் நெருப்பு தொடாது. - திர்மிதி.

உங்களின் இறைவன் ஒருவன் உங்களின் தந்தையும் ஒருவரே. ஆதலால் உங்களிடையே அரபி, அஜமி, வெள்ளையர், கறுப்பர் என்னும் பாகுபாடு எதுவுமில்லை. இன்னும் உங்களில் சிறந்தவர் தக்வாவைக்கொண்டு சிறப் பானவராகும்.

அல்லாஹ்விடம் உங்களில் கண்ணியமானவர் தக்வா உடையவரே.

எனது குடும்பத்தினர் என்னைவைத்து எனது பெயரால் மனிதர்களில் சிறந்தவர்களெனக் கருதுகின்றனர். விஷயம் அவ்வாறல்ல. உங்களில் என்னைக்கொண்டு மிகவும் சிறந்த வர் தக்வா உடையவர்களே. அவர்கள் எவராகவும் இருக் கலாம். எப்படியுமிருக்கலாம். -தப்ரானி.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்ல மவர்களின் கண்ணியம் வாய்ந்த மிகப்பரிசுத்தமான குடும் பத்தினர் அனைவரும் நிச்சயம் தக்வாவுடையவர்கள் தான். ஆதலால் அவர்களில் ஒருவர் கலீபாவாக நியமிக்கப்பட வேண்டுமென ஒருவர் சொல்லலாம். அதில் தவறேது மில்லை. அதேநேரம் அவ்வாறு நினைப்பதில் நபித்தோழர் களின் ஒருங்கிணைந்த முடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீ பாக்களை திட்டக் கூடாது. தவறான எண்ணம் கொள்ளக் கூடாது. அவ்வாறு நினைப்போமாயின் அஹ்லெ பைத்தி னரை நாம் நேசிக்கின்றவர்கள் என கணிக்கப்பட மாட்டோம்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களுக்குப் பின் சிறந்தவர்கள் ஸித்தீகுல் அக்பரும் உமர் பாரூக் ரழியல்லாஹு அன்ஹுமாவும் தானென்று ஸெய்யிதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹு அவர்களே பகர்ந்திருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதில் ஷியாஇக்கள் பொய்யர்கள். நயவஞ்சகர்கள். இஸ்லாத்தின் துரோகிகள் மட்டுமல்ல, எதிரிகளும் கூட.



இதே வட்டத்தை சார்ந்தவர்தான் குமைனியும். இவர்கள் அஹ்லெ பைத்தினரை நேசிப்பவர்கள் அல்ல.

அடுத்து அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினர் முதல் கலீபாவாக ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களை ஏற்றதால் அவர்கள் அஹ்லெ பைத்தி னரை நேசிக்கவில்லை என்பதாக முடிவெடுத்தல் அறிவுட மையல்ல. இனி அஹ்லெ பைத்தினரை நேசிப்பதுதான் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை நேசித்ததற்கு சமமென்று வலிந்துகொண்டு வாதிடுவோர் நமது சுன்னத் வல் ஜமாஅத்தின் உலமாக்கள் தான்.

ஆனால் அதற்கு மாறாக அன்பு - முஹப்பத் என்னும் பெயரில் நபித்தோழர்கள், இஸ்லாமியர் போன்றோரை பிளவுபடுத்துகின்றவர்கள் இந்த நயவஞ்சகர்களான ஷியாஇக்களே.

இன்னும் உலக முஸ்லிம்களால் உலமாக்கள், அறிஞர் கள், பெரியோர்கள் என்பதாக மதிக்கப்படுகின்ற சிலர் முதல் கலீபா யார் என்பதை தீர்மானித்து நமக்குத் தந்துள்ள முடி வைப் பார்ப்போம். இதுதான் இஸ்லாத்தின் முடிவுமாகும்.

இந்த ஷியாஇக்கள் ஹிஜ்ரி 300க்கு முன் மத்ஹபு என்று எதுவுமில்லாத (தந்தை தெரியாத) வர்களாக வாழ்ந்தனர். அதன்பின் தோன்றியவர்கள் தான் கலீனி போன்றவர்கள். ஆனால் புனிதமிக்க நபித்தோழர்களின் துவக்க காலத்தி லிருந்தே ஏகமனதாக எல்லா உலமாக்களாலும் பெரியோர் களாலும் சொல்லப்பட்டவைகளை அதாவது ஹிஜ்ரி 300க்கு முன்னும் பின்னும் சொன்னவைகளை உங்கள் முன் வைக்கிறோம்.

***ஷியாஇக்களுக்கு ஹிஜ்ரி 300க்கு பின்னரே மத்ஹபு – தந்தை கிடைத்ததைப் போன்று எங்களுக்கும் இன்னார் தான் முதல் கலீபா யாரென்பது ஹிஜ்ரி 300க்குப் பிறகு தான் தெரியுமென்று கற்பனை எதுவும் செய்ய வேண்டாம்.***

**1. இமாம் தஹாவி ஹனபி, ஹிஜ்ரி-321.**

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் தோழர்களை நேசிப்போம். அவர்களில் யாரையும் நேசத்தின் பெயரால் மூடத்தனமாக இழிவுபடுத்த மாட்டோம். அவர்கள்மீது கோபமுறுவோரையும் உண்மைக்கு மாறுக பேசுவோரை (ஷியாஃக்களை) யும் நாம் கோபிப்போம். தோழர்களை நேசிப்பது ஈமானாகும். அவர்களை கோபிப்பது குப்ரும், நிஃபாக்கும், வழிகேடுமாகும்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் ஸித்தீகுல் அக்பர், உமர் பாரூக், உத்மான் கனீ, அலீ முர்தழா ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் வரிசைத்தொடராக கலீபாக்களாவர். சமுதாயத்தின் முடிவும் இதுதான்.

**2. இமாம் கஸ்ஸாலி ஷாஃபிஈ, ஹிஜ்ரி-505.**

கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களுக்குப் பின் தகுதியான கலீபாக்களென்போர் ஸித்தீகுல் அக்பர், உமர் பாரூக், உத்மான் கனீ, அலீ முர்தழா ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோரே. அஹ்லுஸ்ஸுன்னாவின் கொள்கை தோழர்களனைவரையும் பரிசுத்தப்படுத்தி அல்லாஹ் ரஸூலின் பொருத்தத்தை பெறுவதுதான்.

**3. காழி இயாழ் மாலிகி, ஹிஜ்ரி-544.**

தோழர்களை கண்ணியப்படுத்துவது, அவர்களை பின்பற்றுவது, அவர்களை புகழ்வது, அவர்களுக்காக துஆ கேட்பது, அவர்களின் எதிரிகளை எதிர்ப்பது, பித்அத்தான நூதனக் கொள்கையும் இடைசெருகல் போன்றவற்றின் அடிகோலிகளான ஷியாஃக்களின் மூடத்தனமான வரலாற்று விஷயங்களையும் இல்லாமலாக்குவது ஆகிய இவையனைத்தும் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களை கண்ணியப்படுத்துவதாகும்.

**4. கௌதுல் அஃழம் ஹன்பலி, ஹிஜ்ரி-561.**

சமுதாயத்தவர்களில் ஸல்லல்லாஹு அலைஹி



வஸல்லமவர்களின் சமுதாயம்தான் மேலானவர்கள். அவர்களில் சிறந்தவர்கள் நபிகளாரைக்கண்டு ஈமான் கொண்டு உண்மைபடுத்தி பின்பற்றி எதிரிகளோடு போர் புரிய உறுதுணையாக இருந்து அனைத்தையும் அர்ப்பணம் செய்தவர்களாகும்.

தம்மிற் சிறந்தவர்களான நான்கு கலீபாக்களும் தோழர்களது ஏகமனதான தீர்மானத்தைக் கொண்டு கிலாபத்தில் நியமிக்கப்பட்டனர். இன்னும் சண்டை செய்து வற்புறுத்தி ஏமாற்றி நியமிக்கப்பட்டவரை விட உயர்வானவர் இருக்கும் போது இன்னொருவர் நியமிக்கப்படவில்லை.

**5. ஷிஹாபுத்தீன் ஸுஹ்ரவர்தி ஷாபிஈ, ஹிஜ்ரி-632.**

ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர், உமர் பாரூக், உத்மான் கனீ, அலீ முர்தழா ரழியல்லாஹு அன்ஹும் போன்றோரின் கிலாபத் ஆட்சியை உண்மைபடுத்துவதே உனது அகீதா ஈடேற்றமடைய போதுமானதாகும்.

**6. இமாம் நவவி ஷாஃபிஈ, ஹிஜ்ரி-676.**

நபித்தோழர்களில் நான்கு கலீபாக்களும், பின்னர் சுபச் செய்தி வழங்கப்பட்ட தோழர்களும், அதன்பின் அஹ்லெ பத்ர், பின்பு அஹ்லெ உஹத், அதையடுத்து பைஅத்துர் ரிழ்வான் ரழியல்லாஹு அன்ஹும் என்தே எனது அகீதாவாகும்.

**7. இமாம் கமால் இப்னு ஹுமாம் ஹனபி, ஹிஜ்ரி-861.**

முதல் கலீபா ஸித்தீகுல் அக்பர், இரண்டாவது உமர் பாரூக், மூன்ருவது உத்மான் கனீ, நான்காவது அலீ ரழியல் லாஹு அன்ஹும் ஆகியோர்களாகும்.

**8. இமாம் ஷஃரானி ஷாஃபிஈ, ஹிஜ்ரி-973.**

இமாம் ஸெய்யிதுனா அலீ கர்ரமல்லாஹு வஜ்ஹஹு அவர்களிடம் ஸித்தீகுல் அக்பரையும், உமர் பாரூக்கையும் உங்களைவிட ஏன் முற்படுத்தினர் எனக் கேட்டபோது,

**திடனுக அல்லாஹ்தான் என்னைவிட அவ்விருவரையும் முற்படுத்தினுன் என்றனர்.**

**இனி ராஃபிழிகள் அவ்விருவர் மீதும் கொண்டிருந்த வெறுப்பின் காரணமாகவே அஹ்லெ பைத்தினர் கூறியதாக இட்டுக்கட்டினர்.**

**9. இமாம் இப்னு ஹஜர் ஹைதமீ ஷாபிஈ, ஹிஜ்ரி-973.**

**தோழர்களில் சிறந்தவர்கள் ஸித்தீகுல் அக்பரும், அதன் பின் உமர் பாரூக்கும், பின்னர் உத்மான் கனீயும் பின்னர் அலீ ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோர் களாகும்.**

ஆதலால் மேற்கண்ட மார்க்கத்தின் முன்னேடிகளது அகீதாவை - நம்பிக்கையை நாம் தெரிந்து கொண்ட அதே நேரம், ஷைகைன் விஷயத்தில் தூவப்பட்ட விஷக் கருத்துக் களனைத்தும் வழிகேடர்களான ஷிஃயாக்களால் வேண்டு மென்றே பொய்யாக இட்டுக்கட்டப்பட்டவை என்பதையும்,.

புனிதமிகு தோழர்களில் ஆறு நபர்களைத் தவிர மற்றவர் களனைவரும் மதம் மாறிவிட்டனர் என்றும் கருதுவதும் இட்டுக்கட்டப்பட்ட பாவகரமான செயலே என்பதையும் விளங்கிக் கொள்வோமாக. அல்லாஹ் இத்தகைய கொள்கை கொண்ட இவர்களை இழிவாக்குவானுக. நாசமடையச் செய்வானுக.

அத்தியாயம் ஒன்பது

# தீர்ப்பு என்ன?

நமது ஷாஃபிஈ மத்ஹபின் உலமாக்களில் சிலர் நபித் தோழர்களை ஏசுவது குப்ரு என்றும், வேறுசிலர் பெரும் பாவமான செயலென்றும் கூறியுள்ளனர்.

பாவமான செயல் என்பதைக்கொண்டு நமது அஹ்லுஸ் ஸுன்னு ஜமாஅத் உலமாக்கள் ஷியாஃக்களை காபிர் களென்று தீர்ப்பளிக்கவோ அல்லது அவர்களை எதிர்க்கவோ முடியாது என்கின்றனர்.

இன்னும் காரணமின்றி ஒருவர் இன்னெரு முஸ்லிமை காபிரென்று அழைத்து, அதற்கு அவர் தகுதியில்லையெனில், அவ்வார்த்தை சொன்னவரை நோக்கியே திரும்பும் என்ப தாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர் களின் உயர் வாக்கிற்கேற்ப காபிர் என்ற வார்த்தையை மிக மிகக் கவனமாகவே கையாள வேண்டும். அத்துடன் தனிப்பட்ட எந்த விஷயத்திலும் இவ்வார்த்தையை பிரயோகப்படுத்த நமக்கு இஸ்லாம் அனுமதி வழங்கவில்லை.

ஷியாஃக்களை ஒட்டுமொத்தமாக நமது உலமாக்கள் காபிர் என்று தீர்ப்பளிக்கா விட்டாலும் நாம் அதைக்குறித்து சில காரணங்களை உங்களின் பார்வைக்கு முன்வைக்கிறேம். அதை முன்னிறுத்தியாவது ஒரு முடிவுக்கு வாருங்கள்.

புனித நபிமணித் தோழர்கள் எனப்படுவோர் அல் லாஹ்வை பொருந்திக் கொண்டவர்கள். அல்லாஹ்வும் அவர் களை பொருந்திக்கொண்ட உத்தமர்கள். - அல்குர்ஆன்

எனது தோழர்களை நேசிப்பவன் என்னை நேசித்தவன். அவர்கள்மீது கோபம் கொள்வோர் என்னை கோபித்த வராவார். - அண்ணல் நபி

ஆனுல் ஷியாஃக்கள் தமது நூல்களில் புனிதமிக்க நபித்தோழர்களான ஷைகைன் அவர்களையும் மற்றும் கணக்கில்லாத தோழர்களையும், ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் மனைவிமார்களான உம்மஹாத்துல் முஃமின்களையும் இழித்துரைத்தது மட்டுமின்றி மதம் மாறி விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளதை முன்னுல் நீங்கள் பார்த் திருப்பீர்கள். இன்னும் பாருங்கள்.

நரகில் ஏழு வாயில்களுண்டு. அதில் ஒரு வாயில் வழி யாக பிர்அவ்ன், ஹாமான், காரூன் போன்ருேர் நுழைவர். இப்பெயரைக் கொண்டு கணிக்கப்படுவோர் ஸித்தீகுல் அக்பர், உமர் பாருக், உத்மான் கனீ ஆகியோராகும்.

நூல் : ஹக்குல் யகீன், பக்கம்-500.

ஹழ்ரத் அலீ பின் அல் ஹுஸைன் ரழியல்லாஹு அன்ஹுவிடம் அவர்களது அடிமை அபூபக்கர், உமர் பாருக் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகியோர் குறித்து வினவிய போது, அதற்கவர்கள்; அவ்விருவரும் காபிரெனக் கூறினர்.

நூல் : ஹக்குல் யகீன், பக்கம்-522.

மேலும் நமது கண்ணியமிகு உலமாக்கள் மிகவும் தீவிர மாக அல்லாஹ்வின் வலிமார்களான இறைநேசர்களை இம் சிப்போரை ஆவேசத்துடன் மேடைகளிலும் மிம்பர் களிலும் எதிர்க்கின்றனர்.

எனது வலியை நோவினை செய்பவனுடன் நான் போர் பிரகடனம் செய்கிறேன் என்று அல்லாஹ் கூறுகிருன்.

கராமத்தையும், விலாயத்தையும் எதிர்க்காது கௌதுல் அஃழம், க்வாஜா ஃகரீப் நவாஸ் என்னும் ஒரு தனி மனிதரை மட்டும் எதிர்க்கிருன் என்ருல் அவனை காபிரென



தீர்ப்பளிக்க முடியாவிட்டாலும் கூட உண்மையில் அவன் விலாயத்தை தானே எதிர்க்கிருன் என்பதையாவது புரிந்து கொள்ளலாமல்லவா!

இனி விலாயத்தின் சிகரமாக கௌதுல் அஃழமும், இந்தியாவின் பேரரசராக க்வாஜா ஃகரீப் நவாஸும் இருந்த போதிலும் இவ்விருவரும் நபிமணித் தோழர்களின் தரத்தை ஒருக்காலும் அடையவே முடியாதென்பது ஷரீஅத்தின் தீர்ப்பாக இருக்கும்போது, ஷைகைனையும் மற்றும் பல தோழர் பெருமக்களையும் மதம் மாறியவர்களென்றும், குர்ஆனுக்கு மாற்றம் செய்தவர்களென்றும் தமது நூல் களில் குறித்து வைத்துள்ளோர்களை வேறு என்னவென்று அழைப்பது? இவர்களுக்கு மறுப்புரை கொடுக்க நமது உலமாக்கள் ஏன் தயங்குகின்றனர்?

இஆனத்துத் தாலிபீன் நூலின் 4:159ல் ஸெய்யிதுனு அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு ஸஹாபி என்பதை பொய்யாக்குவதும், ஸெய்யிதது ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை இழித்துரைப்பதும் "குப்ராகும்" என்பதற்கும்,...

அதேநூலின் 4:149ல் குர்ஆனிலுள்ள ஒரு அட்சரத்தை யேனும் சந்தேகிப்பது "குப்ரை" ஏற்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளமைக்கும்,...

அல்லாஹ்வால் வழங்கப்பட்ட குர்ஆனை இமாம் மஹ்தி தான் கொண்டு வருவார் (அவ்வாருயின் தற்போது நம் மிடையே உள்ள குர்ஆன் குர்ஆனே அல்ல என்பது இதன் பொருள்) என்பதாக தலைவர் குமைனி தமது நூலில் எழுதி வைத்துள்ள கருத்துக்களுக்கும் நீங்கள் என்ன தீர்ப்பு வழங்குவீர்கள்?

இன்னும் பாருங்கள்! ஹழ்ரத் ஸித்தீகுல் அக்பர், உமர் பாருக் ரலியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரையும் மறுப்பது "குப்ராகும்". நூல் : பத்ஹுல் கதீர் - 1:304.

மூன்று தோழர்களை விட ஹழ்ரத் அலீ ரழியல்லாஹு

அன்ஹுவை ஃபஸீலத்தான (சிறந்த) வர் என்று எண்ணுவது பித்அத்தாகும். இதுபோன்றே ஸித்தீகுல் அக்பர் உமர் பாரூக் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரின் கிலாபத்தை - ஆட்சியை மறுப்பது குப்ராகும்.

நூல் : ஹாஷியத்துஷ் ஷிப்லி அலா
திப்யீகில் ஹகாயிக் - **1:135.**

இவ்வாறே ஸித்தீகுல் அக்பர், உமர் பாரூக் ரழியல்லாஹு அன்ஹுமா ஆகிய இருவரையும் தகாத வார்த்தைகளால் வர்ணிப்பதும், அவர்களை குறை கூறுவதும் "குப்ராகும்". நூல் : அல் பஹ்ருர் ராயிக் - **5:126.**

ஷைகைன் ஆகிய இருவரின் கிலாபத்தை பொய்யாக்குவதும், மறுப்பதும் குப்ராகும்.

நூல் : ஃபதாவா பஸ்ஸாஸிய்யா - **6:318.**

ஷைகைன் ஆகிய இருவரையும் ஏசுவதும், அவர்களை லஃனத் (அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக) செய்து சாபமிடுவதும் குப்ராகும். நூல் : ஃபதாவா ஆலம்கீரி - **1:264.**

ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் கிலாபத்தை மறுப்பது குப்ராகும்.

நூல் : ஹாஷியத்துத் தஹாவி அலா மராகில் ஃபலாஹ்,
பக்கம்-**181.**

இதுவரை மேற்கூறப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு இரு தோழர்களையும் ஏசுவதும், அவர்களை இழித்துரைப்பதும், சாபமிடுவதும் குப்ரு என்னும் நிபந்தனைக்கு உட்படுகின்றது. அதாவது இப்படிப்பட்ட காரியங்களை செய்தால் குப்ரு ஏற்படும் என்று தெரிய வருகின்றது.

இனி ராஃபிழிகளில் உள்ள ஒவ்வொருவரும் மேற்கூறப்பட்ட செயலை செய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமல்ல. மாறாக அவர்கள் யாரை தங்களின் நம்பிக்கைக்குரிய உலமாக்கள் என்பதாகக் கருதுகின்றார்களோ அவர்கள்



தங்களின் நூல்களில் எழுதி வைத்துள்ளதே, அச்செயலை அவர்களனைவரும் செய்ததற்கு சமமாகும்.

ஆனால் இக்கொடியவர்களிடம் காணப்படும் மிக மிகக் கெட்ட சுபாவம் என்னவென்றால் நேரத்திற்குத் தகுந்தவாறு இடத்திற்குத் தக்கவாறு தங்களின் நிறத்தையும், பேச்சையும் மாற்றிக் கொள்ளும் இரு வகையான தலையாய கொடிய தன்மைகளே என்பதை மீண்டும் உங்களுக்கு நினைவூட்டுகிறோம். எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது மகத்துவம் கொண்டும், அவனது ஹபீபின் வஸீலாவைக் கொண்டும் எங்களுக்கும் உங்களுக்கும் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும், உண்மைக்கும், பொய்மைக்கும் இடையே உள்ள திரையை விலக்கி சத்தியத்தை சத்தியமென்றும், உண்மையை உண்மையென்றும் கண்டுணர்ந்து தெளிவுபெறும் தௌபீக்கை அருள்வானாக. ஆமீன். பிஜாஹி ஸையிதில் முர்ஸலீன ஸல்லாஹு அலைஹி வஸல்லம். வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம்.

ஸல்லல்லாஹு அலா முஹம்மத் யாரப்பி ஸல்லி
அலைஹி வஸல்லம்.

ابنك ما از عقل خداداه داوری میخواهیم خدای
جهان پیغمبر اسلامرافرستاد باهزاران احکام آسمانی
وپایئه حکومت خودرا براصل توحید وعدالت بنانهاد
ومردمرا بچیزهائی نهی کردو بس از کوششهای فراوان
وتعلیم کردن واجرا کردن دستورات خدائی همین. داکه
پایئه عدل را درجهان بافداکاری های مسلمانان استوار
نمود وازستمکاریها وبی عفتیها آنطور جلوگیری کرده
بمردم امر کند که باید همه اطاعت کنید از اتاترك که
میکوید دین در مملکت رسمیت ندارد وهمه میداند که
بادینداران چکارها کردوبامردم چه ستمکاریها نمود چنه
می عفتیها در ترکیه بجریان انداخت وچه مخالفتها بادین
خداکردیا بکوید بایداز پهلوی اطاعت کنند که همه
دیدید چه کرد وبرای ریشه کن نمون دین اسلام چه
کوششها کرد که اگر کسی بخواهد مخالفتهای صریح
اورا باقرآن خدا بشمارد نیازمند بیك کتاب شاید کردد
چنین خدائی راکه کود اساس دین وعدل راپپا کرده
وخود بدست خود بخراب آن امرنموده. دانشمندان اورا
بخدائی وعدل وداد نمیپذیرند ومقام خدای عالم از چنین
بیهوده کاری منزه است میکوئید ازطرز حکومت این
ستمکاران بیخبر بردوکمان میکردانیها همه باگفته های
او موافقند این از حکم خرد بیرون است خدائیکه بندگان



خودرانشناسد ماور ابخدائی نمیشناسیم پس ناچار باید
بگوئید اولوا الامر پادشاهان وامر انیستند وبایکنظر بحال
خلفاء ومراجعه بکتب حدیث وتاریخ خود سنیان معلوم
شود تکلیف آنها نیزاکنون ما باشیخین کارندایم
ومخالفتهای آنها (١) باقرآن وبازیچه قراردادن احکام
خداوحلال وحرام کردن از پیش خود وستمهائیکه بفاطمه

١. در کتب کلامیه از طرق عامه همه ثابت شده
رجوع بفصول المهمه وشرح تجرید شود

صورة عن الاصل الفارسي للكتاب، ويشير الخط
الى كلام خميني في اتهام الشيخين؟ أبيبكر وعمر
رضي الله عنهما بمخالفة القرآن، وحرمان فاطمة
رضي الله عنها من ارث الرسول ﷺ

ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு, உமர் பாருக் ரலியல்லாஹு அன்ஹு ஆகிய இருவரும் குர்ஆனுக்கு மாற்றம் புரிந்ததாகவும், பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா நாயகியாருக்கு துரோகம் செய்ததாகவும் குமைனியின் பழிசுமத்தல்.

مسلمانها واقع نمیشد آنهائیکه سالهادر طمع
ریاست خودرابدین. پیغمبر چسبانده بودند ودسته بندیها
میکردند ممکن نبود بگفتهٔ قرآن ازکار خود دست
بردارند باهر حیلهٔ بود کارخودرا انجام میدادند بلکه
شاید در اینصورت خلاف بین مسلمانها طوری میشد که
بانهدام اصل اساس اسلام منتهی میشد زیرا ممکن بود
آنها که درمدد ریاست بودند چون دیدند بااسم اسلام
نمیشود بمقصود خود برسند یکسره حزبی برضد اسلام
تشکیل میدادند ودر اینصورت مسلمانهاهم قیام میکردند
وناچار علی بن ابیطالب ودیگر دینداران سکوت را
روانمیداشتنم وبا آن نورس بودن نهال اسلام یك چنین
خلاف بزرگی بین مسلمانها ریشهٔ اسلام رابرای همیشه
از بن میکند وآن نیمهٔ اسلامراهم بباد فنا میداد پس نام
بردن از علی بن ابیطالب برضلاف صلاح اصل امامت که
هیچ برخلاف صلاح دین هم تمام میشد.

٤. آنکه ممکن بود درصورتیه امامرا درقرآن ثبت
میکردند آنهائیکه جزبرای دنیا وریاست بااسلام وقرآن
سروکارنداشتند وقرآنرا وسیلهٔ اجراء نیات فاسدهٔ خود
کرده بودند آن آیات رااز قرآن بردارند وکتاب آسمانیرا
تحریف کنند وبرای همیشه قرآنرا ازنظر جهانیان
بیندازند وتررقیس این نك برای مسلمانها وقرآن آنها



بماند وهمان عیبی راکه مسلمانان بکتاب یهود ونصاری
میکر فتند عینا برای خود اینها ثابت شود.

٥. فرضاکه هیچیك ازاین امور نمیشد باز خلاف
ازبین مسلمانها بر نمیخواست زیرا ممکن بود آن حزب
ریاست خواه که ازکار خود ممکن نبود دست بردارند
فورًا یك حدیث پیغمبر اسلام نسبت دهند که نزدیك
رحلت گفت امر باشوری باشد علی بن ابیطالبرا خدااز
این منصب خلع کرد

**مخالفتهای ابوبکر بانص قرآن**

شاید بگوئیداگردر قرآن امامت
تصریح مشید شیخین مخالفت
نمیکردند وفرضاً آنها مخالفت
میخواستند بکنند مسلمانها از آنها نمیذیر فتند ناچار مادر
این مختصر چند ماده از مخالفتهای آنها باصریح قرآنه

صورة أخرى عن الاصل الفارسي للكتاب ، ويُشير
الخط الى كلام خميني في اتهام أبيبكر رضي الله عنه
بمخالفة نص القرآن الكريم

ஸெய்யிதுனா ஸித்தீகுல் அக்பர் ரலியல்லாஹு அன்ஹு மீதான குமைனியின் மற்றுமொரு பழிசுமத்தலின் மூலப்பிரதி.

واز مشبور ترین کتابهای آنها است وسنیان بآن تبرك میجویند در صفحهٔ (١٦٤) از جزء اولش گفته است که بعد از پیغمبر المؤلفة قلوبهم آمدنه پیش ابی بکر تابعادن همیشه برای آنها کاغذ بنویسد اونوشت بردند پیش عمر که اوهم امضاء کند عمر کاغذرا پاره کرد آمدند پیش ابوبکر گفتند تو خلیفه هستی یاعمر وحکمی که او کرده بود امضاء نمود والمؤلفة قلوبهم را از سهم زکوة اسقاط کردو این مخالف صریح قرآنست

سورة توبه (آیه ٦٠) انّما الصّدقات للفقراء والمساکین والعاملین علیها والمؤلّفة قلوبهم وفی الرّقاب والغارمین وفي سبیل الله وابن السّبیل فریضةً مّن الله - یعنی همانا صدقات که زکوة است از فقراء ومسکینها وکار کنان زکوة و( المؤلفة قلوبهم) یعنی آنانکه جلب قلوبنا نرا میکنیدودر راه آزاد نمودن بندگان وکسانیکه غرامت بردند ودرراه خدا وابن سبیل است خدا هشت طایفه را ذکر کرده که سهم از زکوة میبرند ابوبکر بحکم عمر یکطایفه را اسقاط کردو مسلمانان چیزی نگفتند موارد بسنیار دیگراست خوانندگان بکتاب فصول المهمه رجوع کنند.

### مخالفت عمر باقرآن خدا

اینجا بعضی از مخالفتهای عمر را باقرآن ذکر میکنیم تا معلوم شود



مخالفت باقرآن پیش آنها چیز مهمی نبوده واگر فرضاً درقرآن تصریح باسم امام هم شده بود مخالفت میکر دند این اشکال بیخردانه بر خدای عالم نیست

١. متعه زنانست که باجماع تمام مسلمانان درزمان پیغمبر اسلام تشریع شد وتار حلت آن جناب ناسخی ازبرای آن نیامد بحکم اخبار متواتره از اهل بیت واخبار صحاح (١) خود سنیان از جابر بن عبدالله در صحیح مسلم بچند طریق نقل میکند که مادر عهد رسول خدا وابوبکر وعمر متعه میکردیم تا آنگاه که عمر نهی از آن کرد واینکلام بطور تسلیم واستفاضه از عمر نقل شده که رفت منبرو گفت (متعتان کانتا علی عهد رسول الله وانا انهی عنهما واعاقب علیه متعة الحج ومتعة النساء) یعنی دو متعه ١. فصول المهمه رجوع شود ص. ٥٨

درزمان پیغمبر خدابود ومن از آن دونهی میکنم وکسی که مرتکب شود عقاب میکنم اورایکی متعهٔ حج ویکی متعهٔ زنها است اینحکم مخالف باقرآنست

سورهٔ نساء (آیهٔ٢٨) فماستمتعتم به منهن فأتوهن اجورهن طبری (١) از ابی بن کعب وابن عباس وسعیدبن جبیر وسدی وبسیاری از معتبرین از ابن جماعت وابن مسعود نقل کرده اندکه این آیه در متعه زنها است علاوه آنکه عمر خود اقرار کرد در منبر که این حکم در زمان

پیغمبر بودومن خوداز آن نهی میکنم کسیراکه مرتکب آن شود

۲. متعهٔ حج است که بضرورت بین مسلمین واخبار متواتره از فریقین درزمان پیغمبر تشریع شدوباقی بود تازمان عمر واواز آن نهی کرد چنانچه معلوم شد حتی اجماع (۲) سنیان در این حکم پس ازعمر منعقد شدبر باقی بودن حکم اصلی اسلام واین حکم قاچاکی رابرداشتند وحکم عمر مخالف قرآنست

سورهٔ بقره (آیه۱۹۲) فمن تمتع بالعمرة الى الحج تااخر اجماع تمام مسلمانانست باینکه این آیه درمتعه حج است علاوه خود اقرار عمر کفایت میکند

۳. در باب طلاق ثلاث که درزمان پیغمبر وابوبکر متفرق ازهم بوده وعمر آنرا تغییرداد درصحیح مسلم که ازکتب صحیحهٔ آنها است درصفحهٔ ۱۷٤ ازجزء اول بطریقهای مختلف ازابن عباس نقل میکند که عهد پیغمبر وابوبکر ودوسال ازخلافت عمر طلاق ثلظ یکی بود عمر گفت مردم استعجال دارند خوبست سه طلاق راهمان سه قراردهیم پس انت طالق ثلثا راسه طلاق قرارداد واین مخالف قرآنست

سورهٔ بقره (آیه۲۲۹) الطلاق مرتان فامساك بمعروف او تسریح باحسان تاآنجاکه گوید فان طلقها



فلاتحل له من بعد حتى تنكح زوجا غيره

ومعلومست که مفاد این آیه آنست باید متفرق ازهم باشد واما ۱ فصول المهمه ص ۲۵۵ -فصول المهمه۵۷

صورةأخرى عن الاصل الفارسي للكتاب، ويشير الخط الى كلام خميني في اتهام عمر ابن الخطاب رضي الله عنه بمخالفة نص القرآن الكريم

செய்யிதுனா உமர் பாரூக் ரலியல்லாஹு அன்ஹு குர்ஆனுக்கு மாற்றம் செய்ததாக குமைனியின் பழிசுமத்தல்.

# எமது வெளியீடுகளில் சில ;

1. பாங்கில் திருநபியின் திருநாமம் கேட்டு விரல்களை முத்த வேண்டுமா?
2. கப்ருகளின் மீது கட்டிடம் கட்டலாமா?
3. இறைநேசர்களின் கப்ருகளை முத்தமிடலாமா?
4. ஸியாரத்தை நோக்கிப் பயணம்
5. வஸீலா
6. தராவீஹ் தொழுகையின் எண்ணிக்கை
7. அண்ணலாரின் அகமியம்
8. உத்தமர் உதயம்
9. மௌலிது ஓதுவோம் வாருங்கள்
10. முத்தமிடல்
11. சுந்தர நபியின் சுவனத்துப் பெற்றோர்

JAMIYATUL-ISAATHI-AHLUS-SUNNA
No.105, Second Cross Street, Colombo - 11. Sri Lanka.
Tel : 466113 Fax : 449055